பக்கங்கள்: இருபத்துநான்கு+ A,B

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 12 புதன்கிழமை (28.07.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 244

# ஜனாதிபதியின் அழைப்பின் பேரிலேயே இந்திய அதிகாரி இலங்கை வருகிறார்

## கருணாநிதியின் வேண்டுகோளால் அல்ல என்கிறார் கெஹலிய

கொழும்பு, ஜூலை 28

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பின் பேரிலேயே இந்திய வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி இலங்கை வருகின்றார். இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தமிழக முதல்வர் கருணாநிதி விடுத்த வேண்டுகோளால் அல்ல என இலங்கை அரசு நேற்று அறிவித்தது.**

பாதுகாப்பு விவகாரத்துக்கான பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இந்தியப் பிரதிநிதிகளை அனுப்புமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழக முதல்வர் கருணாநிதி மூலமாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு கோரிக்கை விடுப்பதற்கு முன்னரே ஜனாதிபதி இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது இந்த வேண்டுகோளை விடுத்தார். இதன் படியே இந்திய வெளிவிவகார அமைச்சின்

(23ஆம் பக்கம் பார்க்க)

## கடல் எல்லை விஸ்தரிப்பு: மாலைதீவுடன் பேச்சு

கடல் எல்லை விஸ்தரிப்பு குறித்து மாலை தீவு அரசுடன் இராஜதந்திர ரீதியில் பேச்சு நடத்தத் தயார் - என்று அரசு அறிவித்துள்ளது.

சர்வதேச கடல் எல்லைகளை விஸ்தரிப்பது குறித்து இலங்கையும், மாலை தீவும் ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளன. கடந்த ஆண்டில் இலங்கை அரசால் கோரப்பட்ட பகுதி

(24ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு - மு.காங். சந்திப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் இன்று புதன்கிழமை நடைபெறவிருந்த பேச்சு ஒத்திவைக்கப்பட்டுள்ளது - என்று தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

2ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வுக்குப் பின்னர் பெரும்பாலும் 3 ஆம் திகதி இப்பேச்சு நடைபெறலாம் என்றும் அரியநேத்திரன் தெரிவித்தார். (ஒ-சி)

# ஈழ அகதிகளுடன் செல்லும் கப்பலுக்கு உதவ கனடாவில் குழுவொன்று தயார்!

## அந்நாட்டுத் தமிழ்க் காங்கிரஸ் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 28

இலங்கைத் தமிழ் அகதிகள் 200 பேருடன் கனடா நோக்கிச் செல்கிறது எனக் கூறப்படும் எம்.வி.சன்.சீ. கப்பல் அமெரிக்கா அல்லது கனேடியத் துறைமுகமொன்றில் நங்கூரமிடலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவிற்குள் இந்தக் கப்பல் வருமாக இருந்தால் அதிலுள்ளோருக்கு உதவுவதற்கு குழுவொன்று தயாராக இருக்கிறது என கனடாவின் தமிழ்க் காங்கிரஸ் பேச்சாளரான டேவிட் பூபாலபிள்ளை தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பலில் வருவோர் தமது உயிரைப் பணயம் வைத்து கனடாவிற்குள் பிரவேசிப்பது குறித்து தாம் கனேடிய அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெறும் மனித அவலங்களை சர்வதேச சமூகம் நிறுத்துவ

(23ஆம் பக்கம் பார்க்க)

## சிவந்தனுக்கு ஆதரவு வழங்குமாறு தமிழ் அமைப்புக்கள் கோரிக்கை

ஈழத் தமிழர் பிரச்சினையை முன்னிறுத்தி ஐக்கிய நாடுகள் சபையை நோக்கி நான்காவது நாளாக மனித நேய நடைப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் சிவந்தனுடன் பிரான்ஸ் தமிழ் உறவுகள் இணைந்து கொள்ள வேண்டும் என பிரான்ஸிலுள்ள தமிழ் அமைப்புக்கள் அழைப்பு விடுத்துள்ளன.

பிரான்ஸின் கடற்கரைப் பகுதியை நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் சிவந்தன் சென்றடைந்திருந்தார்.

சிறிது தூரம் நடந்த பின் ஓய்வெடுத்த அவர் நேற்றுக்காலை முதல் உற்சாகத்துடன் நடந்து செல்லுகின்றார். அவருடன் பிரான்ஸ் வாழ் தமிழர்கள் சிலரும் இணைந்து நடக்கின்றனர். (ஒ-சி)

# சரவணபவன், சிறிதரன் எம்.பிக்கள் இருவரும் நெடுந்தீவு சென்று பலதரப்பினருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எஸ்.சிறிதரன் ஆகிய இருவரும் நேற்று நெடுந்தீவுக்கு விஜயத்தை மேற்கொண்டு அங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

நெடுந்தீவு மகாவித்தியாலயம், நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம், நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி மற்றும் நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலை, நெடுந்தீவுப் பிரதேச செயலகம் என்பவற்றுக்கும் அவர்கள் விஜயம் செய்து மாணவர்கள், ஆசிரியர்கள், டாக்டர்கள், அதிகாரிகள், பணியாளர்கள், பொதுமக்கள் ஆகியோருடனும் கலந்துரையாடி குறைபாடுகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

அங்குள்ள மக்களின் முக்கிய பிரச்சினையாகப் படகுப்போக்குவரத்து காணப்

(23ஆம் பக்கம் பார்க்க)

# கனேடிய கடற்பரப்பை அடையுமுன் கப்பலைச் சுற்றிவளைக்கத் திட்டம்

## அமெரிக்க - கனேடிய கரையோரக் காவல்படை உஷார் நிலையில்

கொழும்பு, ஜூலை 28

இலங்கை அகதிகள் 219 பேருடன் கனடாவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் தாய்லாந்து சரக்குக் கப்பலான 'எம்.வீ. சன்.சீ.', கனேடிய கடற்பரப்பை அடைவதற்கு முன் அமெரிக்க அல்லது கனேடிய கடலோர காவற்படையினரால் சுற்றிவளைக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இரு நாடுகளின் அதிகாரிகளும்

(23ஆம் பக்கம் பார்க்க)

# கொள்ளைகள், ஆள்கடத்தலைக் கண்டித்து வவுனியாவில் நேற்றுக் கடையடைப்பு

கொழும்பு, ஜூலை 28

வவுனியா பிரதேசத்தில் பரவலாக இடம்பெற்றுவரும் கொள்ளைகள் மற்றும் ஆள்கடத்தல் சம்பவங்களைக் கண்டித்து வவுனியா வர்த்தகர்கள் நேற்றுக்காலை கடையடைப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வர்த்தகர் ஒருவர் வெள்ளை வானில் வந்தவர்களினால் கடத்திச் செல்லப்பட்டார் என்றும் அவர் 6 லட்சம் ரூபா கப்பமாகப் பெற்றுக்கொண்டதன் பின்னர் விடுதலை செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் வவுனியா நகரப் பகுதி வர்த்தகர்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும், பதற்றத்தையும் ஏற்படுத்தியிருந்தது. இதனையடுத்தே வவுனியா வர்த்தகர் சங்கம் கடையடைப்புக்கான அழைப்பை விடுத்திருந்தது.

இந்நிலையிலேயே நேற்றுக்காலை தமது கடைகளை மூடிய வர்த்தக உரிமையாளர்களும், ஊழியர்களும் வவுனியா வாத்தகர் சங்க அலுவலகத்தின் முன்பாகக் கூடி முற்பகல் 11 மணிவரை அமைதியான முறையில் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள்.

வர்த்தகர்கள் கடத்தப்பட்டு கப்பம் பெறப்பட்ட சம்பவத்திலும் மற்றும் வவுனியாவில் இடம்பெறும் ஆள்கடத்தல், கொள்ளைச்சம்பவங்களிலும் ஈடுபடுவோரை இனங்

(23ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையர்கள் 1,141 பேர் ஆஸியில் அரசியல் தஞ்சம்

கொழும்பு, ஜூலை 28

இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு 2008 ஒக்டோபரிலிருந்து இதுவரை ஆயிரத்து 141 பேர் அரசியல் தஞ்சம் கோரி வந்துள்ளனர் என ஆஸிக்கான இலங்கைத் தூதுவர் சேனக பல்கம்வாய தெரிவித்தார்.

அவர்களில் 843 பேர் படகுகளின் ஊடாகவே ஆஸியை வந்தடைந்தனர் என்றும் ஆஸ்திரேலியாவின் தடுப்பு முகாம்களில் 740 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் சொன்னார்.

தடுப்பு முகாம்களில் உள்ள 300 பேருக்கு ஆஸ்திரேலியாவுக்கான குடியுரிமை பெற்றுக்கொடுக்கப்படும். அத்துடன், குறித்த 300 பேரின் குடியுரிமைக்கான

(23ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை செல்லும் நடிகர், நடிகைகளின் படங்களுக்கு அமெ., கனடாவில் தடை!

## உலகத் தமிழ் அமைப்புகள் அதிரடி முடிவு

சென்னை, ஜூலை 28

அசின் நடித்த அனைத்துத் திரைப் படங்களையும் தடை செய்ய உலகத் தமிழர்கள் முடிவெடுத்துள்ளனர். அந்த முடிவை அமெரிக்கா, கனடா ஆகிய நாட்டில் நிறைவேற்றுவோம் - என்று உலகத் தமிழ் அமைப்புகள் அதிரடியாக அறிவித்துள்ளன.

அமெரிக்காவில் செயற்பட்டு வரும் உலகத் தமிழ் அமைப்பின் தலைவர் நாஞ்சில் பீட்டர், வட அமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவையின் தலைவர் தலைவர் பழனி சுந்தரம் ஆகியோர் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

ஈழத்தில் நமது தொப்புள் கொடி உறவான தமிழினம் பூண்டோடு அழிக்கப்பட்டு

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெற்றி நாயகனை வாழ்த்துகின்றோம்

'வித்தி' என்ற பெயருடைய வெற்றி நாயகனே! கடந்த காலத்தில் பெற்ற வெற்றிபோல் இனிவரும் காலமும் இனிதாய் அமையட்டும்.....!

சிறிபோர் அவை,
அரசடி, யாழ்ப்பாணம்.

(சி/569510)

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
61, Kachcheri - Nallur Road Jaffna
Phone: 021 222 8093
E-mail: alliancejaffna@yahoo.com

*Learn French the French Way French Classes*

FRENCH CLASSES
FRENCH CLASSES
FRENCH CLASSES

பிரெஞ்சு தூதரகம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ALLIANCE FRANCAISE யாழ்ப்பாணத்தில் உள்ள பிரெஞ்சு மொழி பயிலுவதற்கான ஒரே ஒரு கலாசார மையமாகும்.
ஆர்வமுள்ள எவரும் கற்கலாம்.
வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பனும், பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட 3 ஆம் வருட மாணவனுமாகிய

**அ.கலிஸ்ரஸ் கஜேந்திரன் (கலிஸ்)**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் எமது கண்ணீர் அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி,
ஆசீர்வாதம் ஒழுங்கை நண்பர்கள்.

(101067)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### குணதாஸ் ஜெகஜெனனி

*திதி: அபரபக்க திருதியை*

மலர்வு
04.01.1986

உதிர்வு
09.08.2009



ஆண்டு ஒன்று கடந்தாலும் நம் நினைவை விட்டகலாது உங்கள் முகம் என்றும் எம் நெஞ்சில் நிலைத்திருக்கும்

குணதாஸ் குடும்பத்தினர்.

*கே.கே.எஸ். வீதி,*
*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.*

(101059)

## மரண அறிவித்தல்



### *தம்பிஜயர் கதிரமலை*

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வவுனியா, கொக்குவில் எனும் இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா கதிரமலை நேற்று (27.07.2010) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தம்பிஜயா - சொர்ணம்மா தம்பதியரின் மகனும் சாருமதியின் அன்புக் கணவரும் கிஷோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற அன்னலக்சுமி மற்றும் பற்குணராசா (பிரான்ஸ்), மனோன்மணி, மணிமேகலை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாராதேவி, கலாராணி, கணேஸ்வரன், பிறேமலதா ஆகியோரின் அன்பு அத்தானும் தமிழ்ச்செல்வி, தவச்செல்வி, பங்கயற்செல்வி, தமிழ்ச்செல்வன்,மஞ்சுளா, கரிகரன், மயூரதி, மாருதி, சுலேகா,சிந்து, மதுசன், அபினா, துசானா ஆகியோரின் மாமனும் விதுசன், ஜெகதீசன், இராமன், பிரசன்னா, பிரதாப், ராகேஸ் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று(28.07.2010) புதன்கிழமை அவரது கொக்குவில் இல்லத்தில் பி.ப. 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*90, கே.கே.எஸ். வீதி,*
*கொக்குவில். 021 222 7495*

தகவல்: மனைவி - சாருமதி,
மகன் - கிஷோர்.

**வேலைக்கு ஆள் தேவை**

ஆண்களுக்கான ஆடைகளைச் சிறந்த முறையில் தைக்கத்தெரிந்த, 35 வயதுக்குட்பட்ட ஆண்கள் உடனடியாகத் தேவை.

**வைஷ்ணவி தையலகம்,**
*219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

நாளை முதல்
நாடு முழுவதும் பெறலாம்
''நவீன நிதிக் கணக்கீட்டுக் கோட்பாடுகள்''
D.Sam (5 ஆம் பதிப்பு)

சாவகச்சேரியில் இயங்கும் பிரபல உணவகத்திற்கு வேலை ஆள்கள் உடன் தேவை. சப்பிளையர், ரி.மேக்கர், ரொட்டி தயாரிப்பாளர், சமையலாளர் (ஆண், பெண்)
தொடர்பு: T.P. No. 0775591366

## கிளிநொச்சி விபத்தில் ஆசிரியர் படுகாயம்

கிளிநொச்சி, ஜூலை 28

கிளிநொச்சி நகரில் - மத்திய கல்லூரிக்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் கிளிநொச்சி மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியரான எஸ்.அரவிந்தன் பலத்த காயமடைந்தார்.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார். (ஐ-405)

## தென்னிலங்கை செல்லும் வடக்கு பத்திரிகையாளர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 28

வடமாகாணத்தைச் சேர்ந்த 25 ஊடகவியலாளர்கள் இன்று மாலை 6.30 மணிக்கு தென்னிலங்கை அழைத்துச் செல்லப்படவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை தேசிய சமாதான பேரவை மேற்கொண்டுள்ளது.

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத் தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி தேசிய சமாதான பேரவையுடன் இணைந்து மேற்படி நடவடிக்கைகளை இணைத்துள்ளதாக தேசிய சமாதான பேரவை அறிவித்துள்ளது. (ஓ-302)

## தரம் 5 மாணவருக்கு கருத்தரங்கு

தென்மராட்சி, ஜூலை 28

தென்மராட்சி அரிமாக்கழக ஏற்பாட்டில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு, பயிற்சிப் பரீட்சை எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கிருஷ்ணா கல்வி நிலைய ஆசிரியர் தலைமையிலான சிறந்த முன்னணி ஆசிரியர்களும் கலந்து கொள்கின்றனர். எனவே தென்மராட்சி கிழக்கு அனைத்துப் பாடசாலைகளும் பங்கு பெறுமாறு தெ.கி.ப.நோ.கூ. சங்க தலைவர் லயன் சி.தேவகுமார் அறிவித்துள்ளார். (ஓ-329)

## பேருவகை அடைகிறோம்



''உதயன்'', 'சுடர்ஒளி' பத்திரிகைகளின் முன்னாள் ஆசிரியர்

**திரு.ந.வித்தியாதரன்**

2009 ஆம் ஆண்டுக்கான பத்திரிகைச் சுதந்திரத்தை நிலை நிறுத்தப் போராடிய சிறந்த பத்திரிகையாளருக்கான சிறப்பு விருதை நேற்றுப் பெற்றுக்கொண்டதையிட்டு நாம் பேருவகை அடைவதுடன் எமது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக யாழ்.மண்ணில் இருந்து தமிழ் மக்களின் விடிவுக்காகத் தனது பேனாவை அர்ப்பணித்துப் பணியாற்றிய திரு.வித்தியாதரன் இந்த விருதைப் பெறுவதற்கு சாலப்பொருத்தமானவர் ஆவார். தொடர்ந்தும் அவர்தம் ஊடகப் பணியை முன்னெடுக்க வேண்டுமென விண்ணப்பித்து அவருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

யாழ்.இந்துவின் மைந்தன்.

(சி/569511)



## வடபிராந்திய தனியார் சிற்றூர்தி

உரிமையாளர் ஒன்றியத்தின் தலைவராகத் தெரிவாகியுள்ள

**உயர்திரு. பொ.கெங்காதரன் அவர்களை**

**லாலாசோப் உரிமையாளர்**

மனமுகர்ந்து பாராட்டி வாழ்த்துகின்றார்

கெங்கா எந்தவித சுயநலமும் இல்லாதவர். மிகவும் சுறுசுறுப்பானவர். சோர்வுத்தன்மை அற்றவர். மிகவும் உன்னிப்பாக அவதானித்து செயற்படக்கூடியவர். தற்பொழுது யாழ்.தனியார் சிற்றூர்தி வட பிராந்தியத்திற்குத் தலைவர் யாழ்.பஸ் நிலையங்கள் தூய்மை அடைகின்றது. தனியார் சிற்றூர்திகளின் தலைவரின் வழி நடத்தல் தான் முக்கிய காரணம். இவரின் பணிகளுக்கு குறுக்கீடு செய்யாது ஒத்துழைப்புக் கொடுத்தால் கூடிய கெதியில் இச்சேவைகள் தன் நிறைவு பெற்றுக்கொள்ளும். சுற்றாடல் தூய்மையாகும். கெங்காதரனின் சேவையை வாழ்க வாழ்க என வாழ்த்தும்

லாலா சோப் ஸ்தாபனத்தார், அச்சுவேலி.

## தமிழ் கல்வியியலாளர் ஒன்றியம்

"ஒற்றுமை, மதிப்பு, நேயமோங்கும் தமிழர் கல்வியை உறுதிப்படுத்துவோம்"

[பதிவிலக்கம் : 8070 - தொழிற்சங்கச்சட்டத்திற்கு அமைவாக - பிரிவு 2,ஒழுங்கு விதி 6]

கல்வி அமைச்சினால் தாபிக்கப்பட்ட சகல சேவைகளிலும், பாடசாலைக் கல்வியுடன் தொடர்புடைய அனைவரும் அங்கத்துவம் பெறுவதன் மூலம், எங்கள் அமைப்பின் சேவைகளைப் பெறமுடியும்.

இவ் அமைப்பின் குறிக்கோள், ஏனைய தொழிற்சங்கங்கள் போன்று, தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு மட்டும் வரையறுக்கப்படாது: மேலதிகமாக அங்கத்தவர் தொழில்வாண்மை விருத்தி, அறிவுசார் விருத்தி, நலன் மேம்பாடு என்பனவற்றை, முக்கிய கருதுகோளாகக் கொண்டிருக்கும்.

நடைமுறையிலிருக்கும் கல்வித்துறை: தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளை அவதானித்து, கல்வி புலத்தின் உயர் பதவி வகித்தோர், அனுபவமிக்க தொழிற்சங்க வாதிகளின் விதப்புரைகளுக்கமைவாக, சமகாலத் தேவைக்கேற்ப தமிழர்கல்வியை மேம்படுத்த பொருத்தமான அமைப்பாகத் தமிழ் கல்வியாளர் ஒன்றியம் உருவாக்கப்பட்டது என்பதை தங்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

### குறிக்கோள்

- ✓ தொழில்சார் உரிமை: சந்தர்ப்பத்திற்கேற்ப சமத்துவமும்,விகிதாசாரமும் பேணல்.
- ✓ வழிகாட்டலும் உதவுதலும்: பிரச்சினைகளை அணுகும் வகையில் அறிவும் உதவியும் வழங்கல்.
- ✓ நலன்பேணலும் ஆதரவும்: இடரிலிருந்து விடுபட உதவுதல்.
- ✓ தொழில்வாண்மை விருத்தி: தேவைக்கேற்ப பயிற்சியும், அறிவு விருத்திக்குமான ஒழுங்கு செய்தல்.

அரசின் கல்விக்கொள்கை: அடிப்படைக் கட்டாயக் கல்வி, தாய்மொழியில் கிடைத்தலை உறுதிப்படுத்தல்.

### நடவடிக்கைகள்

அங்கத்துவர்களுக்கு,

- ✓ அங்கத்துவ அடையாள அட்டை.
- ✓ த.க.ஒ. அமைப்பு விதி, த.க.ஒ. நடைமுறைக்கோவை.
- ✓ தாபனக்கோவையின் குறிப்பிட்ட சில பிரிவுகளின் தொகுப்பின் பதிப்பு.
- ✓ அங்கத்துவர்களுக்கு தேவையான விளம்பரங்கள்,சுற்றறிக்கைகள், தொழில்சார், கல்விசார் புதிய விடயங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய சஞ்சிகை, பிரசுரங்கள் என்பனவற்றை தேவைக்கேற்ப விநியோகித்தல்.

இவ்வமைப்பு தமிழர் கல்விக்கு சிறந்த சேவையை செய்வதற்குத் தங்களின் விருப்புடனான ஆசியுடன் ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்குமென எதிர்பார்க்கின்றது.

எங்கள் அமைப்பில் அங்கத்துவம் பெறுவதற்கு, சுயவிலாசமிட்ட ரூபா 15.00 பெறுமதியான முத்திரை ஒட்டிய 9" x 4" அளவிலான கடித உறையை "செயலாளர், தமிழ் கல்வியியலாளர் ஒன்றியம், இல. 9A, இராமகிருஷ்ணா அவின்யூ, கொழும்பு 06." என்ற முகவரிக்கு அனுப்பி அங்கத்துவ விண்ணப்ப படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: http://eot.faithweb.com என்ற இணையத்தளத்தில் விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

**செயலாளர்**
**தமிழ் கல்வியியலாளர் ஒன்றியம் தலைமைப் பணிமனை**
**இல. 9A, இராமகிருஷ்ணா அவின்யூ, வெள்ளவத்தை, கொழும்பு 06.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

# நாட்டுக்குத் தீங்குதரும் வெறும் வாய்ச்சவடால்கள்

ஐரோப்பிய ஒன்றியத்தின் 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகையை அரசாங்கம் இழந்துவிட்டது. தற்பொழுது அமெரிக்க அரசாங்கம் இலங்கைக்கு வழங்கி வரும் ஜி.எஸ்.பி. வரிச் சலுகையும் இழக்கப்படப் போகிறது.

இன்றைய நிலைமைக்கு அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாடுகளே காரணம். பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் வெளியிட்ட கருத்துக்களே இந்த நிலைமைக்குள் இலங்கை அரசைத் தள்ளி விட்டுள்ளன.

உள்நாட்டில் மனித உரிமைகளையும் தொழிலாளர் உரிமைகளையும் பாதுகாக்க அரசாங்கம் பின்வாங்குவதால் சர்வதேசத்தில் இலங்கை தனிமைப்படுத்தப்பட்டு வறிய நாடாக மாறும் அபாய நிலைமை ஏற்பட்டிருப்பதாக அனைத்து நிறுவன ஊழியர் சங்கத்தின் தலைவர் தெரிவித்திருக்கிறார். சர்வதேச நாடுகளை அனுசரித்து நடக்கத் தவறினால் இலங்கை தனிமைப்படுத்தப்படும் ஆபத்து உண்டு.

'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகை நிறுத்தம், இலங்கை தொடர்பாக மேற்கு நாடுகள் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ள விரோதப் போக்கு, ஐ.நா. நிபுணர் குழுவுக்கு வலுவூட்ட ஐ.நா.பொதுச் செயலாளர் சமீபத்தில் மேற்கொண்ட நடவடிக்கை ஆகியவற்றை மனதில் கொண்டே அனைத்து நிறுவன ஊழியர் சங்கத் தலைவரால் மேற்கண்ட கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டை வைத்தே 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகையை நிறுத்தப் போவதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருந்தது. ஆனால் மனித உரிமைகளைப் பேணுவதற்கான நடவடிக்கை எதனையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. இந்த வரிச்சலுகை நிறுத்தத்தினால் அரசாங்கம் பெரிதாக எதனையும் இழந்துவிடப் போவதில்லை என்று பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் கூறிவந்தனர். இவர்களின் வெறும் வாய்ச் சவடால் காரணமாக நாட்டுக்குத்தான் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் தனது நிலைப்பாட்டில் உறுதியாகச் செயற்பட ஆரம்பித்து தற்பொழுது வரிச் சலுகையையும் நிறுத்திவிட்டது. இதன் காரணமாக அரசாங்கம் இன்று பெரும்தொகையான நிதியை இழந்துவிட்டது. ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்படுவதால் சுமார் மூன்று லட்சம் பேர் வேலை இழக்கும் நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது.

ஐரோப்பிய ஒன்றியம் இறுதி முடிவை எடுப்பதற்கு முன்பு பதினைந்து நிபந்தனைகளை விதித்ததுக்கும் அமைச்சர்கள் சிலரின் பொறுப்பற்ற பேச்சுகளே காரணம். நாட்டைக் காட்டிக்கொடுக்கும் விதத்திலேயே ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகள் இருப்பதாக இலங்கை அரசாங்கம் குற்றஞ்சாட்டி வந்தது.

ஆனால் அப்படி எந்த ஒரு நிபந்தனையும் காணப்படவில்லை. இப்படியான நிபந்தனைகள் விதிக்கப்படும்போது இரு தரப்பும் பேசிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே வழமையான நடைமுறை.

யுத்தக்குற்ற விசாரணைக் குழுவுக்கு வலுவூட்டுவதற்கு ஐ.நா.பொதுச் செயலாளர் மேற்கொண்ட நடவடிக்கையும் இப்படியான ஒன்றே. ஐ.நாவில் உள்ள மனித உரிமை அமைப்புகள் மற்றும் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்கு நாடுகள் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர் என்றும் வெள்ளைக் கொடியுடன் சரணடைய முன்வந்த புலிகளின் தலைவர்கள் சிலரும் இவர்களில் அடங்குவர் என்றும் குற்றஞ்சாட்டின.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் நவநீதம்பிள்ளையும் யுத்தக்குற்ற விசாரணைக்கு அழுத்தம் கொடுத்து வந்தார். இதன் காரணமாக பொதுச் செயலாளர் பான் கீ - மூன் மூவர் அடங்கிய நிபுணர் குழு ஒன்றை நியமித்தார்.

இந்தக் குழு தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக மட்டுமே நியமிக்கப்பட்டிருப்பதாக பான் கீ - மூன் தெளிவாகத் தெரிவித்திருந்தார். ஆனால் இந்த நிபுணர் குழு விடயத்திலும் அமைச்சர்கள் சிலர் பொறுப்பற்ற விதத்தில் கருத்துத் தெரிவித்தனர்.

இலங்கைக்கு விஜயம் செய்யும் நோக்கம் தனக்கு இல்லை என்று நிபுணர் குழு தெரிவித்த பின்பும், நிபுணர் குழுவுக்கு விஸா வழங்க மாட்டோம் என்று அடித்துக் கூறினார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ். அத்துடன் நிபுணர்கள் குழு கலைக்கப்பட வேண்டும் என்று கோரி அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையில் ஆர்ப்பாட்டமும் பின்பு உண்ணாவிரதமும் நடத்தப்பட்டன. ஐ.நா. அலுவலக அதிகாரிகள் அவமதிக்கப்பட்டனர்.

தற்பொழுது நிபுணர் குழுவுக்கு உதவியாக மேலும் எண்மர் குழு ஒன்றை நியமித்தன் மூலம் நிபுணர் குழுவை வலுப்படுத்தி உள்ளார் பான் கீ - மூன்.

அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்களின் வெறும் வாய்ச் சவடால்கள்தான் நாட்டின் இன்றைய நிலைமைக்குக் காரணம். இதனால் நாட்டின் மதிப்பு சர்வதேச அரங்கில் இறங்கிப்போய்க் கொண்டிருக்கிறது. இனியாவது அமைச்சர்கள் பொறுப்பாகச் செயற்படுவார்களா?

# வவுனியா முதல் முகமாலை வரை ஏ-9 வீதியின் இரு மருங்கிலும் பனம் விதை நடும் திட்டம்

## பனை அபிவிருத்திச் சபை முன்னெடுக்கிறது

யாழ்ப்பாணம்,ஜூலை28

வவுனியா முதல் முகமாலை வரை யான ஏ-9 வீதியின் இரு மருங்கும் பத்து அடி இடை வெளியில் பனம் விதை நடுவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகப் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு,

யாழ்.மாவட்டத்தில் ஐந்து இலட்சம் பனம்விதைகள் நடுவதற்கு குரிய திட்டத்தின் ஓர் அங்கமாகவே ஏ-9 பிரதான வீதியில் இருமருங்கும் பனம் விதைகள் நடப்படவுள்ளன.

அந்த வீதியின் இரு புறமும் மட்டுமன்றி வீதியோரமாகவுள்ள வெறும் காணிகள், வயல்களின் எல் லைப் புறமாகவும் திட்டமிட்ட முறையில் இந்த முறை பனம் விதை நடப்படவுள்ளது. யாழ்.மாவட்டத்தில் பாடசாலைமைதானங்களைச் சூழவும் பனம் விதைகள் நடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திட்டமிடப்படாத முறையில் நடப்பட்ட பனம் மரங்கள் கடந்த காலங்களில் தறிக்கப்பட்டுள்ளன. எனவே இந்த முறை திட்டமிட்ட முறையில் பனம் விதைகள் நடப்படவுள்ளன என்றார். (த-14)

# மக்கள் வங்கியின் வன்னிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட தங்க நகைகளைப் பொதுமக்கள் மீட்பதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை28

மக்கள் வங்கியின் வன்னிக் கிளைகளில் பொதுமக்களால் அடகு வைக்கப்பட்ட தங்கநகைகளை மீட்பதற்கும் காணாமற்போன தங்க நகைகளுக்கான நட்டஈடு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொது முகாமையாளர் ரி.கே.ஆனந்த ராஜா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளமை வருமாறு:-

மக்கள் வங்கியின் முல்லைத்தீவு, கிளிநொச்சி, பரந்தன் மற்றும் மாங்குளம் கிளைகளில் அடகுவைக்கப்பட்ட முற்பணங்களுக்கான வட்டிச் சலுகை வழங்குதல் தொடர்பானதும் காணாமற்போன நகைகளுக்கான நட்டஈட்டினை வழங்குதல் தொடர்பானதுமான அறிவித்தலை மக்கள் வங்கி தலைமையகம் வழங்கியுள்ளது.

இதன் பிரகாரம், அடகுப்பற்றுச் சீட்டின் மூலப்பிரதியை சமர்ப்பித்து குறித்த முற்பணத் தொகையையும் 31.12.2008 வரையான வட்டியையும் மாத்திரம் செலுத்துவதன் மூலம் குறித்த கிளைகளிலுள்ள அடகு நகைகளை மீட்டுக்கொள்ள முடியும். காணாமற்போன நகைகள் தொடர்பாக குறித்த அடகு நகைகளின் பவுண் பெறுமதிக்கும் தரத்திற்கும் ஏற்ப தற்போதைய சந்தைப் பெறுமதி கணக்கிடப்பட்டு, செலுத்தவேண்டிய முற்பணத் தொகையும் 31.12.2008 வரையிலான வட்டியும் நீங்கலாக மீதமுள்ள தொகை வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது. இதன்போது 01.01.2009இற்குப் பின்னரான காலப்பகுதிக்கான வட்டி எதுவும் வாடிக்கையாளரிடமிருந்து அறவிடப்படமாட்டாது.

யுத்த நடவடிக்கைளின் போது எமது வாடிக்கையாளர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களைக் கருத்திற்கொண்டே இவ்வட்டிச் சலுகையினை வழங்குவதற்கு மக்கள் வங்கி தீர்மானித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக மக்கள் வங்கி கிளிநொச்சிக் கிளையின் அடகு நகைகளில் தற்போது வங்கியின் வசமுள்ள அடகுநகைகளினை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதி முதல் மீட்டுக் கொள்ள முடியுமென வட வலய உதவிப் பொதுமுகாமையாளர் த.க.ஆனந்த ராஜா தெரிவித்துள்ளார். காணாமற் போன நகைகளுக்கான இழப்பீடு வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கடந்த கால யுத்த அனர்த்தங் களின் போது மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களைக் கருத்திற்கொண்டு 18மாதங்களுக்கு மேற்பட்ட காலப் பகுதிக்கான வட்டிச்சலுகையை முதன் முதலான அறிமுகம் செய்கின்ற பெருமையினையும் மக்கள் வங்கி கொண்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (த-9)

# வேலணை அரசினர் வைத்தியசாலைக்கு தற்காலிகமாக வைத்திய அதிகாரி நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூலை28

வேலணை அரசினர் வைத்தியசாலைக்குத் தற்காலிக வைத்திய அதிகாரிபொருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குறித்த வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி வந்த டாக்டர் பிரியந்த செனவிரத்ன அதே வைத்தியசாலையில் பணியாற்றி வந்த குடும்பநல மருத்துவமாது சரவணை தர்சிகாவின் மரணத்தையடுத்து அங்கிருந்து மாற்றப்பட்டிருந்தார்.

இதனால் அங்கு நிலவிய வைத்திய அதிகாரி வெற்றிடத்துக்குத் தற்காலிகமாக வைத்திய அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இவ் வைத்தியசாலையில் பணியாற்றிய வேறொரு வைத்திய அதிகாரிக்கு அநாமதேய நபரால் விடுக்கப்பட்ட தொலைபேசி மிரட்டலைத் தொடர்ந்து அவர் அங்கிருந்து விலகிச் சென்றுள்ளார்.

எனினும் இது தொடர்பாகப் பொலிஸாரிடம் முறைப்பாட்டைத் தொடர்ந்து அநாமதேய மிரட்டல் விடுத்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-16-224)

# கோப்பாய் பகுதியில் நாளை மின்தடை

யாழ்ப்பாணம்,ஜூலை28

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில், வீதி அகலமாக்கும் பணிகளுக்காக உயர் அழுத்த மின் கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதால் நாளை வியாழக்கிழமை காலை 8மணிமுதல் மாலை 6 மணி வரை கரந்தன், நீர்வேலி, கோப்பாய் ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படுக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஐ-16)

# பிரிட்டன் பிரஜா உரிமை பெற ஆங்கிலம் கட்டாயம்

கொழும்பு, ஜூலை 28

ஐரோப்பியர் அல்லாதவர்கள் பிரிட்டனில் உள்ள தனது துணையுடன் இணைந்துகொள்வதற்கோ அல்லது அங்கு வாழ்பவரைத் திருமணம் செய்துகொள்வதற்கோ பிரிட்டன் செல்ல விரும்பினால் ஒரு ஆங்கிலப் பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தியடைய வேண்டும் என பிரிட்டன் அறிவித்துள்ளது.

இந்த நடைமுறை இவ்வருடம் நவம்பர் 29ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றது.

இந்தப் புதிய நடைமுறையின்படி பிரிட்டிஷ் பிரஜை ஒருவரை மணம் முடித்து அங்கு சென்று வசிப்பதற்கும் இந்த ஆங்கிலப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும். இப்பரீட்சை பிரிட்டிஷ் அரசால் அங்கீகரிக்கப்பட்ட முகவர் நிலையத்தால் நடத்தப்படும்.

பிரிட்டனில் இருந்து விண்ணப்பிப்பவர்களுக்கும் இப்பரீட்சை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (ஓ-சி)

# சகல கட்சிகள், சமயத் தலைவர்களோடும் அரசமைப்புத் திருத்தம் பற்றி அரசு பேச வேண்டும்

## ஐ.தே.கட்சி வலியுறுத்துகிறது

கொழும்பு,ஜூலை28

அரசமைப்பு திருத்தம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் மாத்திரம் பேசினால் போதாது. சகல அரசியல் கட்சிகளோடும் சமயத் தலைவர்கள் மற்றும் புத்தி ஜீவிகளோடும் அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அப்பொழுது தான் நாடு பயன்பெறும் வகையில் அரசமைப்பைத் திருத்தி அமைக்க முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கயந்த கருணா திலக்க பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார். உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக அரசாங்கமும் ஐ.தே.கவும் தேர்தல் சட்ட திருத்தம் குறித்து ஓர் உடன்பாட்டுக்கு வந்துள்ளதாகக் கூறிய கருணாதிலக்க இன்னமும் எதுவித முடிவும் எடுக்கப்படவில்லை என்று கூறினார். அரசமைப்பின்17 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பாகவும் பேசப்படவிருக்கிறது என்று மேலும் கூறினார்.

தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலுமான முக்கியப் பிரச்சினைகளை அரசு மூடிமறைத்து விடுவதற்கு ஐ.தே. கட்சி அனுமதிக்கமாட்டாது என்றும் அவர் சொன்னார். (ப)

| நாளை | |
|---|---|
| ஆடி13 | 29.07.2010 வியாழக்கிழமை |
| திதி: | திருதியை பி.ப.12.59 வரை |
| நட்சத்திரம் | : சதயம் பி.ப.05.27 வரை |
| சுபநேரம் | : 07.33-09.03 வரை |
| ராகுகாலம் | : 01.33-03.03 வரை |

# வேடர்கள் பேசும் மொழிக்கும் அரசு அங்கீகாரம் வழங்க யோசனை

கொழும்பு,ஜூலை28

இலங்கையில் வாழும் வேடர் இனமக்கள் பேசும் மொழிக்கும் அரச அங்கீகாரம் வழங்குவது தொடர்பாக பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.

தேசிய மரபுரிமை மற்றும் கலாசார அமைச்சு இத்தகவலை வெளியிட்டுள்ளது. வேடர் இனங்களின் தலைவர் உருவாரிகே வன்னிய லத்தோ அமைச்சிடம் சமர்ப்பித்துள்ள 20 கோரிக்கைகள் அடங்கிய ஆவணம் ஒன்று இப்போது அமைச்சின் ஆலோசனையில் இருந்து வருகின்றது.

வேடர் இனமக்கள் விடுத்துள்ள கோரிக்கையின் பிரகாரம் எவ்வாறு அவர்களின் மொழிக்கு அங்கீகாரம் அளிக்கலாம் என்பது பற்றி ஆராயப்பட்டு வருகிறது என்று தேசிய மரபுரிமை மற்றும் கலாசாரத்துறை அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

வேடர்கள் வாழும் பகுதிகளில் அவர்களின் மொழியைப் பயன்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படும். அதன் மூலம் அம்மொழி அழிந்து போகாமல் துடிப்புடன் வாழ வழி செய்யப்படும் என்று அமைச்சர் கூறினார். அம் மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள பாடசாலைகளிலும் அவர்களின் மொழியை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் சொன்னார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் மாநகர சபை
## பொதுசன நூலகம்
### தனியார் பாதுகாப்புச் சேவைக்கான விண்ணப்பம்

யாழ்.பொதுசன நூலகத்திற்கு 01.09.2010 தொடக்கம் ஒரு வருட காலத்திற்கு தினமும் 24 மணிநேரம் பாதுகாப்புச் சேவை வழங்கக் கூடிய இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவுசெய்த தனியார் பாதுகாப்புச் சேவை நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பகல் 03 பேரும் இரவு 03 பேரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட வேண்டும். தெரிவுசெய்யப்படும் நிறுவனம் மாநகர சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதுடன், சித்தி பெறும் கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்யும் போது ரூபா 100, 000/- பெறுமதியான பிணை முறி ஒன்று வழங்கல் வேண்டும்.

மாநகர சபையில் பெறக்கூடிய விண்ணப்பப் படிவத்தில் மட்டுமே விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப் படிவம் ரூபா 400/- உடன் வற்வரியும், மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம் ரூபா 1000/-உம் செலுத்தி மாநகர சபை அலுவலகத்தில் 15.08.2010 ஆம் திகதி பி.ப.2 மணிக்கு முன் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவம் பெறப்பட்ட பின்னர் விண்ணப்பிக்காவிடின் வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.

தொழில் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள சம்பள அளவுத் திட்டத்திற்குக் குறைவாக சம்பள அளவு கோரப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் 20.08.2010 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் மாநகர ஆணையாளர், மாநகர சபை யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் அல்லது நேரடியாகக் கையளிக்கப்படல் வேண்டும். கேள்விகள் யாவும் 26.08.2010 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குத் திறக்கப்படும். அப்போது விரும்பிய கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

**திருமதி யோ.பற்குணராஜா**
**கௌரவ முதல்வர்**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**
27.07.2010

(ச-569501)

## கண்ணீர் அஞ்சலி



எமது வலய
உத்தியோகத்தரான
**சுரேஸ்குமார் (சுரேன்)**
அவர்களின் மாமனாரான
**சிவகுரு**
**தேவராசலிங்கம்**
(தாவடி வடக்கு, கொக்குவில்)
அவர்களின் மறைவினால்

துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்,**
**வலயக் கல்வி அலுவலகம்,**
துணுக்காய். (101061)

## பஸ் சேவை

யாழ்ப்பாணம் - கொழும்பு பஸ் சேவை
ஆசனங்கள் பதிவு செய்ய
**எஸ்.கே.உணவகம்**
கண்டி வீதி,
சாவகச்சேரி.
T.P: 0770782638
(சி-569508)

## கணனி விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள P-4 Computer Full Set மற்றும் கணனிப் பொருள்கள் என்பன உத்தரவாதத்துடன் உடன் விற்பனைக்குண்டு. (விலை 14750/-மட்டுமே)
தொடர்பு: **SKY Computer System**
162, Main Street, Jaffna.
T.P: 021 222 1417
(சி-569196)

## துர்க்கா திருமண சேவை

1977ம் ஆண்டு, பூசம், செவ்வாய் அற்ற மொத்தபாவம் 36 கணனி பொறியியலாளர், கனடா சிற்றிசன் தற்போது வந்துள்ள மண மகனிற்கு அழகிய, B.Sc அளவில் படித்த மணமகள் தேவை. குறிப்பு, படம் என்பவற்றோடு தொடர்புகொள்க.

**துர்க்கா திருமண சேவை**
**9, சங்கிலியன் வீதி, நல்லூர்.**
**தொ.பே.: 0213211814, 0214591417**

- 1975ஆம் ஆண்டு, பரணி, செவ்வாய் 12ல் மனேஜர், லண்டன் PR
- 1977 ஆம் ஆண்டு, பூராடம், டாக்டர் (பேராதனை) எங்களிடம் சகல மதத்தினருக்கும் வெளிநாடு, உள்நாடு உண்டு.
- 1975 ஆண்டு, திருவாதிரை, செவ்வாய் 7இல் லண்டன் PR thurkka5@yahoo.com

(101037)

## வேலையாள்கள் தேவை

*கீழ்க் குறிப்பிட்ட வேலையாள்கள் சைவ உணவகம் இரண்டிற்குத் தேவை!*

* பிரதான சமையலாளர்
* உதவி சமையலாளர்
* கை வேலையாள்கள்
* சப்பிளையர் (உணவு பரிமாறு -பவர்கள்)
* ரீமேக்கர்
* உதவிக் காசாளர் (ஆண்/பெண்)
* பாதுகாப்பாளர்
* அலுவலக உதவியாளர்
* மேற்பார்வையாளர்
* கழிவு அகற்றும்/சுத்திகரிப்புத் - தொழிலாளி.

*போன்ற வேலைக்கு அனுமதி பெற விரும்புபவர்கள் கீழ்க்காணும் தொலைபேசிக்கு அழைக்கவும்.*

**0777917753, 222 2373**

*குறிப்பு: மூன்றுநேர உணவு/ தங்குமிடம், பாதுகாப்பான சம்பள முறைமை, உடனடி வேலைவாய்ப்பு.*
(101063)

## கண்ணீர் அஞ்சலி



ஆயிரம் நண்பர்கள் இருந்தென்ன
ஆறவில்லை எங்கள் மனம்
ஆண்டுகள் நான்கு எம்முடன்
அன்பாகப் பழகினாயே- சந்துரு
உன் ஆசை முகம் காண ஏங்குகின்றோம்.

**சாந்தகுமார் சந்துரு**
(சமூகவியல் சிறப்புக் கலை மாணவன், கலைப்பீட 4 ஆம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்)

உனது பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கலைப்பீட நான்காம் வருட மாணவர்கள், யாழ்.பல்கலைக்கழகம்.
(101055)

## மரண அறிவித்தல்கள்

### சிவப்பிரகாசம் கமலரூபன் (காந்தன்)



கைதடி வடக்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் தற்போது பெல்ஜியத்தில் வசிப்பவருமாகிய சிவப்பிரகாசம் கமலரூபன் (காந்தன்) 21.07.2010 அன்று பெல்ஜியத்தில் காலமானார்.

அன்னார் கைதடி வடக்கு, கைதடியைச் சேர்ந்த சிவப்பிரகாசம் - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும், செந்தூரன், சசிரூபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயரூபியின் மைத்துனரும் சபிர்சனின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல் BRUYNIAAN 1772660 HOBO-KGNAN TWGRBGN BGLGIM நாளை (29.07.2010) வியாழக்கிழமை 3 மணி தொடக்கம் 6 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கரியைகள் அதே இடத்தில் நடைபெற்று, பின்னர் தகனம் செய்யப்படும்.

அன்னாரின் கைதடி இல்லத்தில் அவரின் மரணச் சடங்கு நாளை (29.07.2010) வியாழக்கிழமை நினைவு கூரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி. (101057)
தகவல்:
குடும்பத்தினர்.

### சின்னையா பாலச்சந்திரன்
(இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்)

புற்றளை, புலோலி தெற்கு, புலோலியைச் சேர்ந்த சின்னையா பாலச்சந்திரன் நேற்று (26.07.2010) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சகுந்தலையின் (இளைப்பாறிய மேலதிக மாவட்டப் பணிப்பாளர் - திருகோணமலை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னையா - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், மகேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரரும், சச்சிதானந்தத்தின் அன்பு மைத்துனரும், மதிவனன், ஜெயஜீவன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மகேஸ்வரி, பரமேஸ்வரி, சிவபாக்கியம், கனேந்திரம், கனகலிங்கம், கணேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2010) புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புற்றளை,
புலோலி தெற்கு,
புலோலி. (சி/569502)
தகவல் :
சகுந்தலை
(மனைவி).

### கலிஸ்ரஸ் கஜேந்திரன்
### அன்ரன் பாக்கியநாதன்
(பேராதனை பொறியியல் பீட 3ஆம் வருட மாணவன்)



115, பாண்டியன்தாழ்வு, கொழும்புத்துறை வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கலிஸ்ரஸ் கஜேந்திரன் (25.07.2010) ஞாயிற்றுக் கிழமை அகால மரணமானார்.

அன்னார் அன்ரன் யோகராஜா பாக்கியநாதன் (மிருசுவில்) - ஜரின் சாந்தகுமாரி (விளான்) தம்பதிகளின் ஏகபுதல்வனும், திருமதி கவிதா சிரான் (கனடா), திருமதி ஜீவிதா றொபின்சன் (அவுஸ்திரேலியா), நிஷா (வேம்படி மகளிர் கல்லூரி), தர்சிகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான பாக்கிய நாதன், லீல்லி பாக்கியநாதன், லியோனிஸ், புலோமினா ஆகியோரின் பேரனும் சிரான் (கனடா), றொடான்சன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.07.2010) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு புனித அன்னம்மாள் தேவாலயத்தில் இரங்கல்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பரிசுத்த கொஞ்சேஞ்தி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

115, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
தகவல் :
அன்ரன்
(தந்தை)
(101060)


## நியூ நெல்சன் லேணர்ஸ் அரச அங்கீகாரம் பெற்ற
## சாரதிப்பயிற்சிப் பாடசாலை D.S- 590

★ சகல வாகனங்களுக்கும் சிறந்த முறையில் பயிற்சியளித்து விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும்.
★ எழுத்துப்பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புக்கள் நடைபெறும்.
★ வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.





இல.89, கண்டிவீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 0212224527

கிளை:- இல.12/01, செங்குந்தா கட்டடம்,
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.
0777 942312

எமதுகிளை நிறுவனம் தற்பொழுது கல்வியங்காட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.


## பாராட்டுகின்றோம்





பிரம்மஸ்ரீ தானு:வாசுதேவசிவாச்சாரியார்
(சபரிமலை குருஜி)

வா.விஷ்ணுவர்த்தனசர்மா

தாவடி அம்பலவாண கந்தசுவாமி ஆலயத்தில் ஆடிப் பூரணை பிரம்மோற்சவத்தைத் தொடர்ந்து 12வருடங்களாக வெகு சிறப்பாக நடத்திப் பணியாற்றியவரும் பிரம்மஸ்ரீ தானு.வாசுதேவ சிவாச்சாரியார் [சபரிமலை குருஜி] அவர்களையும், ஆலயநித்திய அர்ச்சகர் வா.விஷ்ணுவர்த்தனசர்மா அவர்களையும் பல சிவாச்சாரியார்கள் விஷேடமாக பிரம்மஸ்ரீ கு.சரவணபவக்குருக்கள், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியை கலாநிதி கலைவாணி இராமநாதன் ஆகியோர் கடந்த 25.07.2010 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பாராட்டு விழாவில் பாராட்டி வாழ்த்தினார்கள். பாராட்டுப் பெற்ற இந்த இருவரையும் நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பரிபாலனசபை, தா[illegible]
கந்தசுவாமி கோவில்
(101054)

## லொறிச் சாரதிக்கு ரூபா 50 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி, ஜூலை 28

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த லொறியின் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது.

(ஒ-207)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

மத்திய, மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

இந்தக் கூட்டம் நாளை வியாழக் கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப் [illegible]

(ஒ-323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். குடாநாட்டுக்கு வருகிறது 'லக்ஸபான' மின்; மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி!

யாழ்ப்பாணம்,ஜூலை28

மிக நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் குடாநாட்டுக்கு லக்ஸபான மின் விநியோகம் கிடைக்கவுள்ளது. இதற்கான துரித நடவடிக்கையில் இலங்கை மின்சார சபை இறங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

யுத்தத்தால் பல வருடங்களாக லக்ஸ பான நீர் மின்விநியோகம் குடாநாட்டில் தடைப்பட்டிருந்தது. இதனை அடுத்து ஜெனரேற்றர்களின் உதவியோடு குடா நாட்டுக்கான மின் விநியோகம் இதுவரை இடம்பெற்று வருகின்றது.

ஜெனரேற்றர்கள் மூலம் மின்சாரம் வழங்கப்படும் போது பல்வேறு சிக்கல் களை எதிர்கொள்ள நேர்ந்தது. இயந்திரக் கோளாறு, டீசல் பற்றாக்குறை போன்ற காரணங்களால் மின்சாரம் அடிக்கடி தடைப் பட்டது. அத்தோடு டீசலின் விலை ஏற ஏற மின் கட்டணமும் அதிகரித்துக் கொண்டே சென்றது. அதனால் லக்ஸபான நீர் மின் சாரம் எப்போ வரும் என மக்கள் எதிர்பார்த் துக் கொண்டிருந்தனர்.

தற்போது லக்ஸபான நீர் மின்விநியோகம் மீண்டும் வவுனியாவில் இருந்து கிளிநொச்சிக்கும், கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும் வழங்கப்பட உள்ள தாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித் தன.

வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையான 73 கிலோமீற்றர் தூரம் வரைக் கும் மின்மார்க்க வேலைக்கு 3200 மில்லி யன் ரூபாவும், கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் வரையான 68 கிலோமீற்றர் தூரத்துக்கு 3559 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட உள்ளதாக மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(எ-315-314)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை28

பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு பருத்தித் துறை பிரதேச செயலக மாநாட்டு மண்ட பத்தில் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன் ரின் உதயன் கலந்துகொள்வார்.

(த-204-236)

## பனம்பழத்திலிருந்து களியைப் பிரித்தெடுக்கும் நவீன இயந்திரம் யாழ்ப்பாணத்தில் அறிமுகம்

### தேசிய பொறியியல் நிறுவனம் பனை அபிவிருத்திச் சபைக்கு வழங்கியது

யாழ்ப்பாணம்,ஜூலை28

நவீன இயந்திரத்தைப் பயன்படுத்தி பனம் பழத்திலிருந்து பனங்களியைப் பிரித்தெடுக்கும் செயற்பாடு முதன் முறை யாக யாழ்ப்பாணத்தில் நேற்று அறிமுகப் படுத்தப்பட்டது.



தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவி ருத்தி நிலையத்தினால் வடிவமைக்கப் பட்ட இந்த நவீன இயந்திரம் பனை அபி விருத்தி சபையிடம் நேற்றுக் கையளிக் கப்பட்டது.

பனை அபிவிருத்திச் சபையின் கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள 'கற்பகம்' விற் பனை நிலையத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையப் பொறியியலாளர் மாலினி ரணதுங்கவினால், பனை அபி விருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவ ரத்தினத்திடம் இந்த இயந்திரம் கையளிக் கப்பட்டது.

ஒரு லட்சத்து 27 ஆயிரம் ரூபா பெறு மதியான இந்த இயந்திரம் போன்று இன் னும் ஆறு இயந்திரங்கள் பெறப்பட்டு முதற்கட்டமாகப் பனம் பழத்திலிருந்து பனங்களியைப் பிரித்தெடுக்கும் செயற் பாடு பரீட்சார்த்த முயற்சியாக இடம்பெற வுள்ளது.

இயந்திரம் ஒன்றில் 30 கிலோ எடை யுள்ள பனம்பழத்தினை ஒரே தடவையில் இட்டு அதிலிருந்து 15 முதல் 20 நிமிடங் களில் பனங்களியைப் பெறமுடியும்.

இந்த இயந்திரங்கள் மூலம் யாழ்.மாவட் டத்தில் இம்முறை அதிகளவான பனங் களியைப் பெற்று அதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருள்களின் அளவையும் அதிகரிக்க கூடிய நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மற்றும் துறைசார் பிரதி நிதிகளும் கலந்து கொண்டனர்.

(த-14)

## சுகாதாரப் பரிசோதகர்; நேர்முகப்பரீட்சை மேலும் 13 பேருக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை28

வடமாகாண சுகாதார அமைச்சினால் பொதுச் சுகாதார பரிசோதர்கள் பயிற்சி நெறிக்கு ஏற்கனவே நேர்முகப்பரீட்சைக் குச் சமுகமளித்து பதிவு செய்தவர்கள் தவிர்ந்த மேலும் 13 பரீட்சார்த்திகளுக்கான தகைமைகளைப் பரிசீலிப்பதற்கான நேர் முகப்பரீட்சை இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற வுள்ளது.

அன்றைய தினம் சம்பந்தப்பட்டவர்கள் பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ்களு டன் தேசிய டையாள அட்டை, வாக்காளர் பட்டியல் ஆவணங்களின் மூலச் சான்றி தழ் மற்றும் அவற்றின் பிரதிகளுடன் சமுக மளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார் கள். பரீட்சார்த்திகளுக்கான தனிபட்ட கடி தங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(ஒ)

## 'வட்டு வசந்தம்' நிகழ்வு இன்று

நவாலி,ஜூலை28

இலங்கை வங்கி, மானிப்பாய் கிளை யின் வட்டு கிழக்கு சிறு சேமிப்புக் குழுக் கள் இணைந்து நடத்தும் 'வட்டு வசந்தம்' நிகழ்வு இன்று புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு தாவளை வீதி கிராம அபிவிருத் திச் சங்க மண்டபத்தில் செல்வி துஷ்யந்தி சுப்பிரமணியம் தலைமையில் நடை பெறும்.

பிரதம விருந்தினராக வலி.மேற்கு சங் கானை பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் வி.சிவகுமாரும் கௌரவ விருந்தினர்களாக இலங்கை வங்கி வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் கே.சி.டி.சுமணஸ்ரீயும் இலங்கை வங்கி வடபிராந்திய செயற்பாட்டு முகாமையா ளர் வி.எஸ்.சிவநாதனும் இலங்கை வங்கி யாழ்.மாவட்ட முகாமையாளர் கே.பி. ஆனந்தநடேசனும் கலந்துகொள்வார்கள்.

(த-100)

## நல்லூர் பாலகதிர்காம ஆலயத்தின் ஆடிவேல் வீதியுலா நேற்று ஆரம்பம்

நல்லூர்,ஜூலைன்28

நல்லூர் பாலகதிர்காம ஆலய வேல் ரத பவனி நேற்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு பக்தி பூர்வமாக ஆரம்பமானது. முன்னதாக ஆலயத்தில் விசேட பூசைகள் இடம்பெற்று வேல் ரதபவனி ஆரம்பமா னது.

ரதபவனியில் முதலில் ஐராவதம் யானை பூரணகும்பம் தாங்கிவர அதனைத் தொடர்ந்து நவவீரர்களின் ஊர்தியும் மங் கள வாத்தியங்களின் ஊர்தியும் அடுத்து ஆடி வேல் ரதமும் பருத்தித்துறை வீதி வழியாக வீரமாகாளி அம்மன் ஆலயத்தை வந்தடைந்தன.

ரதபவனி வந்த பருத்தித்துறை வீதி யில் மக்கள் பூரண கும்பம் வைத்து வழி பட்டனர். யாழ்.மாநகர சபை முன்றிலில் விசேட அர்ச்சனைகள் இடம்பெற்றன. மாநகர முதல்வரின் செயலாளர் எஸ்.பற் குணராஜா, மாநகர சபையின் செயலாளர் இ.இரத்தினசிங்கம், பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் எஸ்.சோமசுந்தரம், சனசமூக நிலைய உத்தியோகத்தர் எஸ்.லோகசிவம் உட்பட மாநகர சபை உத்தியோகத்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

நல்லை ஆதினத்தின் முன்பாக இடம் பெற்ற பூசைகளில் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சார்ய சுவாமிகள், ஆதீன அறநெறிப்பாடசாலை மாணவர் கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்துகொண்டனர். ரதபவனி வியாழக் கிழமை வரை இடம்பெறும். (த-111-224)

## வீதி திருத்தம்

நவாலி,ஜூலை28

நீண்டகாலமாகத் திருத்தப்படாமலிருந்த மானிப்பாய் இந்துக் கல்லூரி வீதி தற் போது புனரமைப்புச் செய்யப்பட்டு விபு லானந்தர் வீதி எனப் பெயரிடப்பட்டுள் ளது.

(த-100)




## ஆயுள்வேத வைத்தியர்களுக்கான கலந்துரையாடல் வெள்ளியன்று

யாழ்ப்பாணம்,ஜூலை28

ஆயுள்வேத வைத்திய உத்தியோகத் தர்கள் மற்றும் பாரம்பரிய வைத்தியர்களுக் கான சுதேச வைத்தியத்துறை அமைச்சரு டனான கலந்துரையாடல் நாளைமறு தினம் வெள்ளிக்கிழமை கைதடி ஆயுள் வேத வைத்தியசாலையில் இடம்பெறவுள் ளது.

சம்பந்தப்பட்ட அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு வடமாகாண சுதேச வைத்தியத்துறை பணிப்பாளர் கேட்டுக் கொள்கிறார்.

(த)

## சின்னமடுவுக்கு விசேட பஸ் சேவை

யாழ்ப்பாணம்,ஜூலை28

சின்னமடு மாதா யாத்திரைத் தலத் திரு விழாவை முன்னிட்டு விசேட பஸ் சேவை கள் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த பஸ் சேவை கத்தோலிக்க மக்கள் அதிகமாக வாழும் சில்லாலை, ஆனைக் கோட்டை, உரும்பிராய், மானிப்பாய் ஆகிய பகுதிகளை மையமான வைத்து இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டது. (த-310-318)

## பொது இடங்களில் நின்று புகைத்தவர்கள் நீதிமன்றில்

கைதடி,ஜூலை28

பொது இடங்களில் நின்று புகைபிடித் தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைதடிப் பிர தேசத்தில் கைது செய்யப்பட்ட பலர் சாவ கச்சேரி பொலிஸாரினால் சாவகச்சேரி நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து அதனை விசாரித்த நீதிவான் குற்றப்பண மாக 2 ஆயிரம் ரூபா அறவிட்டதுடன் எச் சரிக்கையின் பின் கைது செய்தவர்களை விடுதலையும் செய்தார்.

குற்றங்களைத் தடுக்கும் நோக்கோடு சாவகச்சேரி பொலிஸார் தற்போது கைத டிப் பிரதேசத்தில் இரவு நேர ரோந்தில் ஈடு பட்டுவருவது இங்கு குறிப்பிடத்தக்க தாகும்.

(த-288)



ஈழத்தின் மூத்த கவிஞர் இ.முருகையனின் முதலாம் ஆண்டு நினைவுப் பேருரை நிகழ்வு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நீர்வைமணி கு.தியாகராஜக்குருக்கள் மங்கள விளக்கேற்றுவதையும் அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் இ.குணநாதன், கவிஞர் சோ.பத்ம நாதன், ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: கோப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று குழந்தைகளுக்கு சேமிப்புப் புத்தகங்கள்

நவாலி, ஜூலை 28

சமூக மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் அடிப்படையில் மானிப்பாய் இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கமும், வங்கியும் இணைந்து மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையின் புதிய மகப்பேற்று மனையில் பிறந்த மூன்று பிள்ளைகளுக்கு சிறுவர் சேமிப்புக் கணக்குப் புத்தகங்களை வழங்கியுள்ளன.

வங்கி முகாமையாளர் க.இலட்சுமணசர்மா இவற்றை வழங்கியுள்ளார். வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்நிகழ்வில் பொறுப்பதிகாரி ஏகாம்பரமூர்த்தி பத்மராணி, வைத்தியசாலை ஊழியர்கள், அபிவிருத்திச் சபையினர், பொதுமக்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இவ்வைத்தியசாலையில் பிறந்த முதலாவது, இரண்டாவது பிள்ளைகளுக்கு ஏற்கனவே வங்கியினால் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-100)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி இரஞ்சினி சாம்பசிவம்

B.A. (Hons) Economics, Dip.in Edu. (Distinction) SLTS - 3-I

(ஆசிரியை, யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி)



யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா கற்கை நெறியில் அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்திபெற்று பேராசிரியர் பி.சந்திரசேகரம் ஞாபகார்த்த தங்கப் பதக்கத்தைப் பெற்றமைக்காகத் தங்களை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
மேலும் பல உயர் பட்டங்கள், பதவிகள் பெற்று வளமாக வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய நண்பிகள்,
*PGDE.* (101024)


## விருது பெற்றார் வித்தியாதரன்



**உதயன், சுடர்ஒளி தினசரி இதழ்களின் முன்னாள் ஆசிரியர் திரு. ந. வித்தியாதரன்** 2009 ஆம் ஆண்டுக்கான பத்திரிகைச் சுதந்திரத்தை நிலை நிறுத்தப் போராடிய சிறந்த பத்திரிகையாளருக்கான சிறப்பு **விருதை** இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கம், இலங்கைப் பத்திரிகை சம்மேளனம் ஆகிய அமைப்புகள் வழங்கிக் கௌரவித்துள்ளன.

மூன்று ஆண்டுகளாக இத்தகைய பரிசில்களைப் பெற்று தேசிய ரீதியாகப் பாராட்டிக் கௌரவிக்கப் பெறும் **திரு. நடேசபிள்ளை வித்தியாதரன்** அவர்களை நாமும் பாராட்டிக் கௌரவிப்பதில் பெரும் மகிழ்வடைகின்றோம்.

தொடர்ந்தும் அவர் தன்னை முழுமையாக இதழியல் பணியில் ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும் என்று அன்பாகவும் பண்பாகவும் வேண்டுகின்றோம்.

**430, காங்கேசந்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.** பாரதி பதிப்பகம்.


## முக்கிய அறிவித்தல்

கிளிநொச்சி பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி

எமது சங்கத்தின் மூலதனக் கணக்குகளை ஒழுங்கமைக்கும் முகமாக பின்வரும் விவரங்கள் தொடர்பில் எமது சங்கத்தின் நடவடிக்கையுடன் தொடர்பு கொண்டுள்ளவர்களிடமிருந்து 30.06.2008, 30.06.2009 ஆகிய திகதிகளில் உள்ளவாறான மீதிகளை உறுதிப்படுத்தி தலைவர்/பொது முகாமையாளர், கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், A-9 வீதி, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு 31.07.2010 ஆம் திகதிக்கு முன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1. *வியாபார வருமதிகள், ஏனைய வருமதிகள் [சங்கத்திற்கு]*
2. *வியாபாரச் சென்மதிகள், ஏனைய சென்மதிகள் [சங்கத்திடமிருந்து]*
3. *சங்கத்திடம் இருந்து பெற்ற கடன்கள்*
4. *சங்கத்திடமிருந்து பெற்ற முற்பணங்கள்*
5. *சங்கத்தால் வைப்புச் செய்யப்பட்ட வைப்புக்கள்*
6. *கிளிநொச்சி ப.தெ.வ.அ.கூ.சங்க கிராமிய வங்கி [நிலையான வைப்பு, சேமிப்பு வைப்பு, கிராமிய வங்கி வைப்புக்கள்]*

குறிப்பு:
மற்றும் சங்கத்தின் வியாபார மற்றும் ஏனைய நடவடிக்கையோடு தொடர்புடைய விடயங்கள் இருப்பின் அது பற்றியும் எழுத்து மூலம் தெரிவிக்கவும். இவ்வாறு விவரங்களை அனுப்பி வைக்கும் பட்சத்தில் எதிர்வரும் காலங்களில் தங்களுக்கும் எமக்குமிடையில் இருக்கும் மீதிகளை உரிய முறைப்படி பேண முடியும்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள

ப.இராமச்சந்திரன் — தலைவர்.
வ.திரவியநாயகம் — பொது முகாமையாளர்.

கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், A-9 வீதி, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.

(101051)

## வேலை ஆள்கள் தேவை

உயர்தர உணவகமும் தங்குமிட வசதியும் உடைய தொழில் ஸ்தாபனத்திற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

பிரதான சமையலாளர்-ஆண்/பெண்
உதவி சமையலாளர்-ஆண்/பெண்
காசாளர் -பெண்
வெயிட்டர் -ஆண்

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்கள் நேர்முகத் தேர்வுக்குச் சமுகம் தரவும்.

இடம்:- ஹொட்டல் கவர்க்கா
இல. 06, சட்டநாதர் கோவில் வீதி,
முடமாவடிச் சந்தி, நல்லூர், யாழ்ப்பாணம்.

நாள்:- இன்று தொடக்கம் சனிக்கிழமை வரை.
நேரம்:- காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை.


## பெருந் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 28

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் முதலாய கோயில்கள் ஸ்ரீபர்வதவர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்கசுவாமி ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (த-204)

## சுதந்திரக் கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட கிளை நிர்வாகக் குழு உறுப்பினர்களின் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் இடம்பெறும் என யாழ்ப்பாண கட்சி அமைப்பாளர் வி.தங்கராஜா அறிவித்துள்ளார். (ஒ-323)

## வளளாயில் 'நேர்ப்' 30 வீடுகள் அமைக்கிறது

யாழ்ப்பாணம், ஜூலை 28

உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசமாக இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட வளளாய்ப் பிரதேசத்தில் 'நேர்ப்' திட்டத்தின் இரண்டாம் கட்டமாக 30 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.


## துயர் பகிர்வு

எமது கல்லூரியின் பிரதி அதிபர் W.ஜெயசீலன் அவர்களின் அன்பு மாமனார்

அந்தோனிமுத்து மரியாம்பிள்ளை

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.
27.07.2010 அன்று பிரசுரமாகிய எமது கல்லூரி ஆசிரிய வட்டத்தின் சார்பில் துயர்பகிர்வு என்ற தலைப்பில் வெளியான விளம்பரத்தில் மாமனார் என்பதற்குப் பதிலாக தந்தையார் என்று தவறுதலாகப் பிரசுரமாகியுள்ளது. தவறுக்கு வருந்துகிறோம்.

ஆசிரிய வட்டம்,
யாழ். மத்திய கல்லூரி.

(101027)

## கண்ணீர் அஞ்சலி



பேராதனைப் பல்கலைக்கழக
3ஆம் வருட
பொறியியற்பீட மாணவன்
அன்ரன் யோகராஜா
கலிஸ்ரஸ் கஜேந்திரன்
அவர்களின் பிரிவினால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கும்,
நண்பர்களுக்கும்,
அயலவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

E/06 மாணவர்கள்,
பொறியியல் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்.

(101039)

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் கணபதிப்பிள்ளை



உடுவிலைப் பிறப்பிடமாகவும் மலேசியா, லண்டன் ஆகிய நாடுகளில் வசித்தவரும் தற்பொழுது உடுவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி பாக்கியம் கணபதிப்பிள்ளை 22.07.2010 வியாழக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-சுந்தரம் தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற மலாயன் பென்சனர் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் சங்கானையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- குழந்தை தம்பதிகளின் அன்பு மருமகளும் தங்கம்மா காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் முத்துச்சாமி, கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா, சுப்பிரமணியம் மற்றும் பவளக்கொடி, காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, திருமதி வேலுப்பிள்ளை நாகம்மா ஆகியோரின் அருமை மைத்துனியும் மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம் (லண்டன்), இரத்தினம் மற்றும் கனகமலர், பாலசுப்பிரமணியம், வடிவேலு, துரைசிங்கம், இராஜேஸ்வரி (லண்டன்), நாகேஸ்வரி, கமலாதேவி, விக்கினேஸ்வரி, ஜெகதீஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் விஜயரத்தினம், சூரியகுமாரி (லண்டன்) காலஞ்சென்ற தங்கராசா மற்றும் நகுலேஸ்வரி, இராசம்மா, அருந்தவமணி, லட்சுமிகாந்தன் (லண்டன்), காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் கெங்காதரம் காலஞ்சென்ற துரைராசா, விக்கினேஸ்வரன் (லண்டன்), திருமதி துரையப்பா பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் குகதாசன், யோகேஸ்வரி, பாலகிருஷ்ணன் (நெதர்லாந்து), அன்னலிங்கம், கந்தசாமி, கனகேஸ்வரி, கிருபாசக்தி, கமலேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் பெரியதாயும் ஸ்ரீநிவாசன், சந்திரகுமார் (பிரான்ஸ்), தயாளினி (பிரான்ஸ்), லோகநாதன் (பிரான்ஸ்), அருந்ததி (நெதர்லாந்து) ஆகியோரின் மாமியும் லண்டனைச் சேர்ந்த சுதாகர், சுகந்தி, சுமதி, சுரேஸ்காந்தன் (லண்டன்), காமினி, வாகினி, சியாமினி, தாரணி, ஜெயானந்தராஜ் பிரான்ஸைச் சேர்ந்த யோகரட்ணம், சுகிர்தரட்ணம், சதீஸ்வரி, கணேஸ்வரராஜ், முரளீதரன், ஜீவாதரன், ஜேர்மனியைச் சேர்ந்த கேதீஸ்வரி, கோணேஸ்வரி, கனடாவைச் சேர்ந்த ஜெயரட்ணம், கவிதா, கிரிஜா (சுவிஸ்), சசிதரன் (பெல்ஜியம்), கருணாகரன் (நோர்வே), கௌரி, ஸ்ரீதரன், கஜேந்திரன், விஜயேந்திரன், வனஜா, குமரேந்திரன், ரஜிதா, சுபோதன், காயத்திரி (அவுஸ்திரேலியா), சுதர்சன், சிவானந்தராஜ் (டோகா), மலர்விழி (இந்தியா), கயல்விழி (இந்தியா), உதயகுமார், சசிகுமார், அனுஜா, ரஜிதா, ராஜ்குமார், கனகசபேசன், நடனசபேசன், சாவித்திரி, காயத்திரி, தர்சினி, ரேணுகா காலஞ்சென்றவர்களான விக்கினேஸ்வரராஜ், கிரிதரன், ஜெயதரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லண்டனைச் சேர்ந்த லக்சுமி, சாந்தி ஜேர்மனியைச் சேர்ந்த பார்த்தீபன், கார்த்திகா, ஆரபி, பைரவி கனடாவைச் சேர்ந்த பிசன்னா, பிரியங்கா, பிருந்திகா, கபில்ராஜ், யதுசன் பிரான்ஸைச் சேர்ந்த நர்த்தகன், விதுசன், நிரோஜன், கேசினி, விக்கினேஸ்வரன், விஷ்ணுகா, அபிநயா, சக்னா, அக்சவின், சுவிஸைச் சேர்ந்த தட்ஷாயினி, நவீதரன், தர்சிகா, டிலக்ஷன் (பெல்ஜியம்), மதுர்ஷனா, யானுகா, கிஷோத்மன், யஸ்வினி, மிதுனா, வர்னிகா, அஸ்வினி, அபிஷானா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.07.2010) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளிகோவிலடி,
அம்பலவாணர் வீதி, உடுவில்,
உடுவில்.
தொ.பே: 0214909039, 0213219052

தகவல்
குடும்பத்தினர்.

(101045)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அனைத்துப் பல்கலைக்கழக கல்விசார் உத்தியோகத்தர்களின் சம்பள உயர்வுகோரி நடத்தப்பட்ட ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து நேற்று யாழ்.பல்கலைக்கழக உத்தியோகத்தர்களும் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இதில் சுலோக அட்டைகளைத் தாங்கியபடி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதையும், ஊர்வலமாக கலைப்பீட முன்றலுக்கு வருவதையும் முதல் இரு படங்களிலும், கலைப்பீட முன்றலில் கூடித் தமது எதிர்ப்பை வெளிக்காட்டுவதை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்: தமிழினியன்)

### சம்பளத்தை உயர்த்துமாறு கோரி

# பல்கலை ஆசிரியர் நடத்திய வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணத்திலும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

பல்கலைக்கழக கல்விசார் உத்தியோகத்தர்கள் சம்பள உயர்வு கோரி நேற்று யாழ். பல்கலைக்கழக கல்விசார் உத்தியோகத்தர்கள் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

அனைத்துப் பல்கலைக்கழக கல்விசார் உத்தியோகத்தர்கள் சம்பள உயர்வு கோரி நாடுமுழுவதும் நடத்திய ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்துக்கு ஆதரவாக யாழ். பல்கலைக்கழகத்தின் ஏழு பீடங்களின் உத்தியோகத்தர்களும், வவுனியா வளாகத்தின் இருபீட உத்தியோகத்தர்களும் மற்றும் இராமநாதன் நுண்கலைப்பீடஉத்தியோகத்தர்களும் சேர்ந்து பத்துப்பீடங்களிலும் நேற்று அடையாள வேலைநிறுத்தம் நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட முன்றலில் நேற்றுக்காலை ஒன்றுகூடிய பேராசிரியர்கள், கல்விசார் ஊழியர்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்டியதுடன், தமது சம்பளத்தை உயர்த்தக்கோரிப் பல சுலோக அட்டைகளையும் தாங்கி தமது எதிர்ப்புக்களை வெளிக்காட்டினர்.

தொடர்ந்து விரிவுரையாளர்கள் சிலரும் உரையாற்றினர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் உரையாற்றும் போது விரிவுரையாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில்:

நாம் பல வருடங்கள் கஷ்டப்பட்டுப் பெருமளவு பணத்தைச்செலவு செய்து பலபட்டங்கள் பெற்றுப் படித்தே இப்பதவிக்கு வருகின்றோம். ஆனால் எமது அர்ப்பணிப்புக்கு ஏற்ற உரிய மரியாதையாக வேதனம் வழங்கப்படவில்லை. ஆனால் பட்டதாரிகளோ தமது உத்தியோகத்துக்கும் மேலதிகமாக தனியார் கல்வி நிலையங்கள் போன்றவற்றிலும் கற்பிப்பதன் மூலம் எம்மைவிட அதிக வேதனத்தைப் பெற்றுக்கொள்கின்றார்கள்.

ஆனால் எமக்கு அப்படிக் கற்பிக்கவும் இயலாது. அதனால் தற்போதைய விலைவாசிகளையும் கருத்தில் கொண்டு எமக்கான வேதனத்தை அதிகரிக்க வேண்டும் - என்றனர்.

கடந்த 2006ஆம் ஆண்டு தொடக்கம் சம்பள உயர்வு தொடர்பாகப் பல்வேறு தடவைகள் பேச்சுகள் நடைபெற்றுவந்த போதும், இதுவரை வேதன உயர்வு கிடைக்காததோடு, கடந்தகால ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் இடைக்காலக் கொடுப்பனவு 2009 டிசெம்பர் முதல் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இதுவரை அது வழங்கப்படவில்லை, எனக்கோரி நாடு முழுவதும் அனைத்துப் பல்கலைக்கழக கல்விசார் உத்தியோகத்தர்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (த-16-23)

## வன்னி செல்லவிரும்பும் ஆசிரியர்கள் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 28

வன்னிப் பிராந்திய கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடமாற்றம்பெற விரும்பும் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை ஆசிரியர்களை உடனடியாக வலயக் கல்வி அலுவலக நிர்வாகப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஜ-207)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவில் டெங்கு நோய் நிகழ்ச்சித் திட்டம்

மூளாய், ஜூலை 28

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவில் டெங்குக் கட்டுப்பாட்டுக்கான விசேட நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

நான்கு நாள்கள் தொடர்ச்சியாக நடத்தப்படவிருக்கும் இந்த விசேட நிகழ்ச்சித் திட்டத்தை வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்துள்ளது.

டெங்கு நோய்க்கட்டுப்பாட்டுக்கான இத்திட்டத்தில் பொலிஸாருடன் இணைந்து பொதுமக்கள் மற்றும் சில உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள், பிரதேச சபை, பிரதேச செயலகம், பொதுசுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியனவும் ஒருங்கிணைந்து செயலாற்றவுள்ளன.

இதற்கான விசேட செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இவ்விசேட செயலணி டெங்குக் கட்டுப்பாட்டுக்கான பல்வேறு வகையான நடவடிக்கைகளில் இறங்கவுள்ளது. சிரமதானம், திண்மக்கழிவுகளை அகற்றப் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு ஏற்படுத்தல், டெங்குக் கட்டுப்பாடு குறித்த பிரசாரம் உட்பட பல்வேறு வகையான நடவடிக்கைகளை இவ்விசேட செயலணி மேற்கொள்ளும். டெங்கு நோய் அபாயம் அதிகம் உள்ள பகுதிகள் தெரிவு செய்யப்பட்டு அப்பகுதிகளில் இந்த நடவடிக்கைகள் கிரமமாக மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. (த-99)

## ஆங்கில தினப் போட்டிகளில் யாழ்ப்பாணக் கல்லூரி முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

2010ஆம் ஆண்டிற்கான ஆங்கில மொழித் தினப்போட்டிகளின் போது, தாம் பங்குபற்றிய அனைத்துப் பத்துப் போட்டிகளிலும் மொத்தமாகப் பத்தொன்பது இடங்களைப் (முதல் மூன்று இடங்களுக்குமானது) பெற்று யாழ்ப்பாண மாவட்டத்திலேயே முதலாவது நிலையை யாழ்ப்பாணக் கல்லூரி தனதாக்கிக் கொண்டது.

இந்த ஆண்டிற்கான ஆங்கில தினப் போட்டிகளிலே புதிதாக நான்கு வகைப் போட்டிகள் சேர்க்கப்பட்டிருந்தன. முன்னரே இருந்த ஆறு வகைப் போட்டிகளுடன் சேர்த்து, மொத்தமாகப் பத்து வகைப் போட்டிகள் இவ்வாண்டு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவை அனைத்திலும் பங்குபற்றிய யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆங்கில அணிகள் எட்டு முதல் இடங்களையும், ஆறு இரண்டாம் இடங்களையும், ஐந்து மூன்றாம் இடங்களையும் பெற்றதன் மூலம், யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிக கூடிய முன்னிலைப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட முதலாவது கல்லூரியாகத் தன்னைப் பதிவு செய்தது யாழ்ப்பாணக் கல்லூரி.

யாழ்ப்பாணக் கல்லூரி பத்தொன்பது (19) முன்னிலை இடங்களுடன் முதலாவது நிலையிலும், யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை (18) பதினெட்டு முன்னிலை இடங்களுடன், இரண்டாவது நிலையிலும், யாழ். மெதடிஸ்த உயர்தரப் பாடசாலை (16) முன்னிலை இடங்களுடன் மூன்றாவது நிலையிலும் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த-224)

## 'பொலிஸ்- மக்கள் தினம்' இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 28

வடக்கில் வாழும் மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் முகமாக 'பொலிஸ்- மக்கள் தினம்' இன்று புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வடபிராந்தியத்தில் முதன் முறையாக பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியவின் ஆலோசனையின் கீழ், 'மக்களுக்கான சிநேகபூர்வமான, தொழில் ரீதியிலான புகழ்வாய்ந்த பொலிஸ் சேவை' என்னும் கோட்பாட்டுக்கு இணங்க இன்று இந்த 'பொலிஸ் மக்கள் தினம்' ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி டி.சில்வாவின் தலைமையில் நடைபெறவுள்ள இச்சேவையில் பொதுமக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக முறைப்பாடுகள் செய்யமுடியும்.

எனவே இதில் அனைத்துப் பொதுமக்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவ வேண்டுகோள் விடுத்துள்ளார். (த-16)

## 'மனதுருக்கம்' இலங்கை நிறுவனம் விழிப்புலனற்றோருக்கு உதவி

கைதடி, ஜூலை 28

கைதடியிலுள்ள தொழிற்பூங்காவில் இருக்கின்ற விழிப்புலனற்றோரின் தொழிற்றுறையை மேம்படுத்தும் நோக்கோடு 'மனதுருக்கம்' இலங்கை நிறுவனம் ஒரு லட்சத்து எழுபதினாயிரம் ரூபா பெறுமதியான மா வறுக்கும் இயந்திரத்தை கடந்த திங்கட்கிழமை வழங்கியுள்ளது.

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் ஆ.மகேந்திரனிடம் கையளிக்கப்பட்ட இவ்வியந்திரம் உடனடியாகவே அங்கு பொருத்தப்பட்டு மா வறுக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

இதேவேளை ''சோ ஆ'' நிறுவனமும் அண்மையில் [illegible] தியான மா அரைக்கும் இயந்திரத்தை மேற்படி விழிப்புலனற்றோரின் நன்மை கருதி வழங்கியுள்ளது. இதனால் அங்கு இருப்போர் ஆர்வத்துடன் வறுத்த மாவை பொதி செய்து விற்பனைக்கு விட்டு தமது ஊதியத்தை பெருக்குவதை அங்கு காணக்கூடியதாகவும் உள்ளது. (த-288)

## சின்னமடுவில் சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

சின்னமடு மாதா ஆலயத்தின் யாத்திரைத் திருவிழாவை முன்னிட்டு இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் சிரமதானப் பணியில் கடந்த 23ஆம் திகதி ஈடுபட்டனர்.

இன்று முதல் எதிர்வரும் 5ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள சின்னமடுமாதா யாத்திரைத் திருவிழாவை முன்னிட்டு இலங்கைப் போக்குவரத்துச் சபையை சேர்ந்த சுமார் 200 ஊழியர்கள் இந்தச் சிரமதானப் பணியில் ஈடுபட்டதாகப் போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (த-310-318)

## விளையாட்டுப் போட்டி

வண்ணை, ஜூலை 28

யாழ்.குருநகர் சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு குருநகர் கலையரங்க முன்றலில் ஆரம்பமாகவுள்ளது.

பிரதம விருந்தினராக கியூடெக்- கரித்தாஸ் இயக்குநர் அருட்திரு சே.றெக்னோ அடிகளார் கலந்துகொள்வார். (ஓ-160)

## விண்ணப்பத் திகதி நீடிப்பு



கைதடி, ஜூலை 28

மாகாண சேவையின் கனிஷ்ட ஊழியர்களை மாகாண முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு-III இற்குத் தரம் உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் திகதி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் திகதி 2010ஜூன் 14ஆம் திகதி என முன்னர் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட போதும் தற்போது அத்திகதி சிற்றூழியர்களின் நலன் கருதி 2010 ஓகஸ்ட் 02ஆம் திகதி வரை மீள நீடிக்கப்பட்டுள்ளதாக அவர் சுற்றறிக்கை மூலம் திணைக்களத் தலைவர்கள், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் ஏனைய அரச உயரதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (த-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும்பளை யோகசாந்தி நிலையத்தின் ஏற்பாட்டில் யோகாசன கண்காட்சி அண்மையில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் அதிபர் திருமதி சி.சிவானந்தனுக்கு இளமையின் இரகசியம் நூல் ஆசிரியர் பொன்.மகாதேவா செய்முறைப் படத்தினை வழங்குவதனை முதலாவது படத்திலும் யோகாசன ஆசிரியர் தே.தேவராஜேந்திரன் பயிற்சி அளிப்பதனை இரண்டாவது படத்திலும் து.சிறிகாந், தோ.அன்டன் புஸ்பதாஸ் ஆகியோர் இணைந்து யோகாசனப் பயிற்சி வழங்குவதனை இறுதிப் படத்திலும் காணலாம்.


IN MEMORY OF OUR PRECIOUS SISTER



DATE OF BIRTH 1954 02 18

DATE OF DEATH 2009 07 28

MRS. SHANTHY VIGNARAJA

(NEE RAJADURAI)

ONE YEAR AGO YOU WENT HOME TO BE WITH OUR GOD WHOM YOU LOVED WITH EVERY BIT OF YOUR WEAKENED BODY BUT MIGHTY SPIRIT. WE KNOW DARLING YOU ARE IN THAT FAR, FAR BETTER PLACE, WHERE THERE WILL BE NO PAIN OR SORROW.

ALWAYS LOVED, ALWAYS MISSED.

BY YOUR EVER LOVING

ACCA, JIKA & ANNI



## வேலையாள்கள் தேவை

மின்சார உபகரண விற்பனை நிலையத்திற்கு வேலை ஆள்கள் தேவை.

தொடர்பு: ஜெகா எலக்ரிக்கல்ஸ்

இல.11, தனங்கிளப்பு வீதி,

சாவகச்சேரி. (சி/569175)

## மணமகள் தேவை

கனடாவில் குடியுரிமை உடைய, இந்து கௌரவ குடும்ப மணமகனுக்கு மணமகள் தேவை. மணமகள் 40-50 இடைப்பட்ட வயதுடையவராகவும் அழகிய நற்பண்புடையவராகவும் இருத்தல் வேண்டும். தாரமிழந்தவர்களும் ஏற்றுக்கொள்ளப்படும். SPONSOR செய்யப்படும். அண்மையில் எடுத்த முழுப்படத்துடன் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். திருமதி ச.சோமசுந்தரம், மஞ்சவணப்பதி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

## உடன் தேவை

ரீமேக்கர் உடன் தேவை.

தொடர்பு: GOLDEN CAFFE

266/A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T.P. 2224498 (101047)

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் கணனி நிறுவனத்திற்குப் பணியாள் தேவை. ஓரளவு கணனி அறிவு எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்பு: 166/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(KONICA LABஇற்கு அருகில்)

0217539006


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## வெளிவாரிப் பரீட்சைகள் - 2009

1. கலை முதற் தேர்வு - 2009
2. பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி - I - 2008 & 2009
3. பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி - II - 2008
4. சிறப்புக் கலைமாணி பகுதி - III - 2007 & 2008

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்பரீட்சைகளுக்குத் தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/=க்கான காசுக் கட்டளை / தபாற் கட்டளையுடன் சுய முகவரியிடப்பட்ட ரூபா 40/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 சென்.மீ அளவுடைய தபால் உறையுடன் உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 27.08.2010 (வெள்ளிக்கிழமை) ஆகும்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

**பரீட்சைக் கட்டண விவரம்**

முதல் முறை பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கான கட்டணம் ரூபா 1600/= மீள் பரீட்சார்த்திகளாயின் ஒவ்வொரு பாட அலகிற்கும் செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா 200/=

மேலதிக விவரங்களுக்கு 021 2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்

(சி/569195) 27.07.2010


கடந்த 32 வருட காலமாக கொழும்பில் தனது தலைமையகத்தைக் கொண்டு இயங்கி வந்த

ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ற்மென்ஸ் லிமிட்டெட்

TRADE FINANCE & INVESTMENTS LTD.

(இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்டது)

தனது கிளையை தமிழ் மண்க்கும், யாழ்மண்ணில்,

இல. 74, கன்னாதிட்டி வீதியில்

எதிர்வரும் 02.08.2010 அன்று ஆரம்பிக்கவுள்ளது

யாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த,

மிகக் குறைந்த வட்டி வீதத்தில்

01. இலகு கடன்கள்

02. வாகனங்களைக் கொள்வனவு செய்ய,

(இருசக்கர, முச்சக்கர, விவசாய வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள்)

- லீசிங் வசதிகள்
- பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்கு லீசிங் வசதிகள்
- வாடகைக் கொள்வனவு வசதிகள்

''எதிர்கால நிதிக் கனவுகளை நிகழ்காலத்தில் நனவாக்கும் பங்காளன்''

T.P: 021 222 1900, 1898

FAX: 0212221899

E-mail: tradefij@sltnet.lk





ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 667 திகதி 26-07-2010

வெற்றி எண்கள்

08 25 54 58 Y (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 28,672,960/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 28,672,960/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 17 | 2,000/= | 34,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 404 | 1,000/= | 404,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 627 | 1,000/= | 627,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16503 | 60/= | 990,180/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7781 | 40/= | 311,240/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 193850 | 20/= | 3,877,000/= |
| | | மொத்தம் ரூ. | 7,043,420/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 600233054-6-26 |
| திருகோணமலை | 600228925-2-02 |
| குருநாகல் | 600220166-8-18 |
| அனுராதபுரம் | 600231595-6-16 |
| பொலன்னறுவை | 600223669-9-39 |
| புத்தளம் | 600229738-0-00 |
| இரத்தினபுரி | 600228525-0-40 |
| மொணராகலை | 600223458-6-26 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,443,420/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 29,197,540/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்

2010 ஜுலை 29 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02

தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பூமியின் மேற்பரப்பில் கடும் பாதிப்பு



பூமியின் மேற்பரப்பல் அமைந்துள்ள ''தெர்மோஸ்பயர்'' அடுக்கில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பூமியின் மேற்பரப்பல் இருந்து 90 முதல் 600 கிலோமீற்றர் உயரம் கொண்ட பகுதி தெர்மோஸ்பயர் அடுக்கு என்றழைக்கப்படுகிறது. வளிமண்டலம் முடிந்து விண்வெளி ஆரம்பக்கும் பகுதியில் தெர்மோஸ்பயர் அடுக்கு அமைந்துள்ளது.சூரியனிலிருந்து வரும் சுற்றுச்சூழலுக்கு தீங்கான கதிர்களை வடிகட்டி அனுப்புவதில் தெர்மோஸ்பயர் அடுக்கு பெரும்பங்கு வகிக்கிறது.சமீப காலமாக வளிமண்டலத்தில் காபனீரெட்சைட் அளவு அதிகரிப்பு மற்றும் புறஊதாக்கதிர்களின் பாதிப்பால் தெர்மோஸ்பயர் அடுக்கு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக நாசா தெரிவித்துள்ளது.இதனால் பூமியின் தட்ப வெப்ப நிலையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கடல்சார் ஆய்வுக்கழக விஞ்ஞானி ஜான் எம்மர்ட் வெளியிட்ட ஆய்வறிக்கையில் பூமியின் வளிமண்டலத்தில் கடந்த 43 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு திடீரென கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.எங்களது ஆய்வில் வளி மண்டல அழுத்தம் திடீரென முப்பது சதவீத அளவிற்கு குறைந்துள்ளது.தெர்மோஸ்பயர் அடுக்கு சூரியனுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட பகுதியாகும்.பூமியின் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் சூரியனிலிருந்துவரும் புறஊதாக்கதிர்கள் தெர்மோஸ்பயர் அடுக்கில் பரவி விரிவடைகிறது.இதை தெர்மோஸ்பயர் அடுக்கு, பூமிக்கு வராமல் தடுக்கிறது. சூரியனிலிருந்து வரும் வெப்பத்தின் அளவில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை தெர்மோஸ்பயர் அடுக்கில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் மாசு ஏற்படுத்தும் காபனீரெட்சையிட் அளவு அதிகரித்து வளிமண்டலத்தைத் தாண்டி தெர்மோஸ்பயர் அடுக்கு வரை பரவிவிட்டது.




எனவே தெர்மோஸ்பயர் அடுக்கில் காபனீரெட்சைச்யிடுட் குளிரூட்டியாக செயற்பட்டு கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் இந்தப் பாதிப்பற்கு காபனீரெட்சையிட் வாயு மட்டும் காரணம் என கூற இயலாது.பற காரணிகளும் தெர்மோஸ்பயர் அடுக்கில் ஏற்பட்டுள்ள பாதிப்பற்கு காரணமாக இருக்கலாம்.இவ்வாறு ஜான் எம்மர்ட் கூறினார்.

# விமானத்தை விட வேகமாச் செல்வும் கார்




2012ஆம் ஆண்டில் விமானத்தை விட வேகமாகச் செல்லக் கூடிய கார் பரீட்சார்த்தம் பார்க்கப்படும் என அறிய வருகிறது. ரிச்சர்டு நோபல் எனும் இங்கிலாந்துக்காரர் தலைமையில், ஒரு குழு இதன் முன் முயற்சியாக மணிக்கு 1228 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லும் காரை உருவாக்கி பரீட்சார்த்தம் பாரத்திருந்தனர்.

ஜெட் விமான என்ஜினைக் கொண்டு, பால்கான் ரொக்கெட் தொழில்நுட்பம் பயன்படுத்தி உருவாக்கப்படும் இந்தக் கார் விமானத்தை விட வேகமாக மணிக்கு 1600 கிலோ மீற்றருக்குமான வேகத்தில் செல்லும். சுருக்கமாகச் சொல்லின் பார்முலா-1 கார் பந்தயத்துக்கு பயன்படுத்திய காரை விட 180 மடங்கு சக்தி கொண்டதாக இருக்கும்.

ஆய்வுப்பணிகள் முடிந்து வடிமைக்கும் பணி தொடங்கியிருக்கும் இந்தக் கார் அமைக்கும் பணிகள் முழுமையாக நிறைவுற்றபின் 2012ஆம் ஆண்டு தென் ஆபிரிக்காவில் சோதனை ஓட்டம் நடைபெறுமெனவும் தெரியவருகிறது.

# மூளையை ஸ்கான் செய்து எதிர்காலத் திட்டத்தைத் தீர்மானிக்கலாம்



மூளையை ஸ்கான் செய்து எதிர்கால திட்டத்தை தீர்மானிக்க முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். எதிர்காலம் குறித்து திட்டமிட முடியாமல் பலர் குழம்புகின்றனர்.

இனி அந்தக் கவலை தேவை இல்லை. மூளையை ஸ்கானிங் செய்து அதன் மூலம் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் இலட்சியங்களைக் கணிக்க முடியும்.


இதற்கான ஆய்வை கலிபோர்னியா பல்கலைக்கழக நரம்பியல் விஞ்ஞானிகள் மேற்கொண்டனர். இவர்கள் மனிதனின் மூளையில் புதிதாக மேப்பங் முறையைப் பயன்படுத்தினர்.

அதன் மூலம் அவர்களின் மனதில் எதிர்காலத்தில் அவர்களின் இலட்சியம் என்ன? எந்தவிதமான பாடப்பிரிவை எடுத்துப் படித்து நிபுணராக முடியும் என்று கணித்துள்ளனர். இதற்கு ''மனோதத்துவக் கணக்கீடு'' என்று பெயரிட்டுள்ளனர்.

இது குறித்து மனநலப் பேராசிரியர் ரிச்சர்டு ஹயர் ஒரு ஆய்வு நடத்தினார். ஒருவருக்கு உள்ள திறமை மற்றும் தனித்தன்மை என்ன என்று மூளைக்குத் தான் தெரியும். எனவே, மூளையை 'ஸ்கேன்' செய்வதன் மூலம் இதைக் கண்டறிய முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இதற்காக அவர் 6 ஆயிரம் பேரின் மூளைகளை ஸ்கேன் செய்து ஆய்வு மேற்கொண்டார்.

# சூரியனைவிட 100 மடங்கு பெரிய மெகா நட்சத்திரம் கண்டுபிடிப்பு



விண்வெளியில் சூரியனைவிட 100 மடங்கு பெரியதாகவும் பரகாசமாகவும் உள்ள நட்சத்திரம் ஒன்று இருப்பது கண்டுபடிக்கப் பட்டுள்ளது. லண்டனில் உள்ள ஷெபல்டு பல்கலைக்கழக வான்வெளி ஆராய்ச்சியாளர் பால் க்ரவுத்தர் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட ஆராய்ச்சியில் இந்தப் புதிய மெகா நட்சத்திரம் கண்டுபடிக்கப் பட்டுள்ளது. தரந்துலா நெபுலா என்று அழைக்கப்படும் நட்சத்திரக் கூட்டங்களுக்கு மத்தியில் இந்தப் புதிய நட்சத்திரம் இருந்தது கண்டுபடிக்கப்பட்டுள்ளது.

புழுதிப் புயல் போன்று புகை மண்டலமாக உள்ள மேகக் கூட்டங்களுக்கு இடையில் இந்த நட்சத்திரம் மிகப் பரகாசமாக மின்னிக் கொண்டிருந்தது. ஆர்136 ஏஎல் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த நட்சத்திரம் இதுவரை கண்டுபடிக்கப்பட்ட நட்சத்திரங்களிலேயே மிகவும் பெரியது என்பது ஆராய்ச்சியாளர்களின் கணிப்பு.

ஆனால் தற்போது உள்ள எடையை விட இது 2 மடங்கு பெரியதாக இருந்திருக்கும் என்றும் அதிக உஷ்ணத்தால் தன்னைத்தானே எரித்துக் கொள்ளும் குணம் உள்ள இத்தகைய நட்சத்திரங்கள் காலப்போக்கில் சுருங்கி சிறியதாகி முற்றிலும் அழிந்துவிடும் என்று கூறும் விஞ்ஞானிகள் இதன் ஆயுள்காலமும் மிகக் குறைவே என்கின்றனர்.

நாம் பூமியில் இருந்து பார்க்கும் ரியனை விட பன்மடங்கு அதிகப் பிரகாசமாகக் காணப்படும் இந்தப் புதிய நட்சத்திரம் அதன் உயர் வெப்பம் காரணமாக தன்னைத்தானே எரித்துக் கொள்ளும் என்பதும் பூமியின் வெப்பத்தைப் போல் 7 மடங்கு அதிக வெப்பம் அதனைச் சுற்றி இருக்கும் என்பதும் ஆராய்ச்சித் தகவல்கள். இதன் ஆயுட்காலம் அதிக அளவாக 30 லட்சம் ஆண்டுகள். இத்தகைய நட்சத்திரங்கள் மிகக் குறைந்த ஆயுள்காலம் கொண்டது என்பதாலும் மிக அதிக தொலைவில் நட்சத்திரக் கூட்டங்களுக்கு இடையில் மறைந்து இருக்கும் என்பதாலும் இவற்றைக் கண்டுபடிப்பது மிகவும் கடினம் என்கின்றனர் குறுகிய ஆயுளைக் கொண்டுள்ள இவை குறித்த தொடர் ஆராய்ச்சி என்பது இயலாத ஒன்று என்பது ஆராய்ச்சியாளர்களின் ஆதங்கம். பொதுவாக மிகக் குறைந்த எடையுடன் பறந்து பன்னர் எடை கூடுவது மனித பறப்பு. இதற்கு மாற்றாக நட்சத்திரங்கள் உருவாகும் போது மிக அதிக எடை மற்றும் உருவத்துடன் தோன்றி, பன்னர் தேய்ந்து மறைந்து விடும்.புதிய நட்சத்திரம் ஆர்136 ஏஎல் அளவில் நமது பூமியை விட 10 மடங்கு பெரியது. மிகவும் அரியதும் அளவில் பெரியதும் அதிக ஒளி வீசுவதுமான புதிய வரவாக வந்துள்ள இத்தகைய நட்சத்திரங்கள் தன்னைத்தானே எரித்துக் கொள்ளும் என்பதால் இவற்றின் ஆயுள் மிகவும் குறைந்த காலம் தான் என்பது வருத்தத்திற்கு உரிய செய்தியாகும்.

நன்றி: தொழில்நுட்ப இணையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மாண்பைச் சீரழிக்கும் மது

உலகிலேயே குடிகாரர் அதிகமுள்ள நாடுகளில் 3ஆவது இடத்தை இலங்கை பெறுகிறது என்ற சர்வதேச ஆய்வின் முடிவொன்றை ஊடகம் ஒன்றில் பார்க்க முடிந்தது. இச்செய்தி உங்களுக்கு அதிர்ச்சியளிக்கலாம். ஆனால் உண்மையானது. இலங்கையின் சனத்தொகை விகிதாசாரத்தில் அதிக மக்கள் குடிப்பழக்கம் உள்ளவர்களாக இருக்கின்றனர் என்பதே அச்செய்தி கூறும் தகவல்.

மாவட்ட அடிப்படையில் பார்த்தால் திருகோணமலை மாவட்டம் முதலிடத்தைப் பெறுவதாக அரச தகவல்கள் கூறுகின்றன. தமிழ் பேசும் மக்கள் பெரும் பான்மையாக வாழும் மாவட்டம் முதலிடத்தை பெற்றது எமக்கும் வருத்தமாகவே உள்ளது.

எமது யாழ்ப்பாண மாவட்டத்தில் மது பாவனை தொடர்பாக வருத்தமளிக்கும் செய்திகள் அண்மைய வாரங்களாக வெளிவந்த வண்ணம் உள்ளன.

யாழ். பொலிஸ் அத்தியட்சகர் ஆலயங்கள், விகாரைகளுக்கு சுற்றுலா பயணிகள் மது போதையில் செல்ல வேண்டாமெனவும், அவற்றின் புனிதத் தன்மைக்கு மதிப்பளிக்குமாறும் வேண்டுகோள் விடுத்த செய்தி வெளியாகியது.

சந்திகளில், பொது இட்ங்களில் உள்ளூர் குடிகாரர்கள் மது போதையில் அட்டகாசம் செய்கின்றனர் என்ற செய்தியும் வெளியாகியது.

பொலிஸாரினால் முக்கிய இடங்களில் வைக்கப்பட்டுள்ள முறைப்பாட்டுப் பெட்டிகளுக்கருகில் உள்ள அறிவித்தல் பலகையிலும் சட்டவிரோத மதுபாவனை, உற்பத்தி என்பவை தொடர்பான தகவல்களையும், பிறகுற்றச் செயல்களையும் குறித்துத் தகவல் தருமாறு எழுதப்பட்டுள்ளது.

மதுபாவனை பொதுச் சமூகத்திற்கு பெரிய தீங்காக மாறி வரும் நிகழ்வு எமக்குப் புதிதாகத்தான் உள்ளது.

கடந்த சில தசாப்தங்களாக எமது பண்பாட்டில், பிரதேசத்தில் நிலவிய சூழ்நிலைகள் மதுபாவனை குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தின.

கப்பல்களில் பொருள்கள் வரும் காலங்களில் சாராயப் போத்தல்களை இறக்குவதற்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டதான செய்திகளும் பத்திரிகைகளில் வந்தது.

தரைவழிப்பாதை முழுச் சுதந்திரத்துடன் திறந்து விடப்பட்ட போது தாரளமாக மதுப் போத்தல்களும் வந்தன. கைதடிச் சந்திப்பிரதேசத்தில் பெரிய வீடொன்று அரச மதுக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியமாக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து குடாநாட்டின் சகல மதுபான விற்பனை நிலையங்களுக்கும் தாராளமாக சாராய வகைகள் விநியோகம் செய்யப்படுகின்றன. இப்போது மதுப் போத்தல்களுக்கு எந்தவிதத் தட்டுப்பாடுகளும் இல்லை. போதாக்குறைக்கு ஆங்காங்கே கசிப்பு உற்பத்திகள் தலைகாட்டுவதும் தட்டி அடக்கப்படுவதும் தொடர்கின்றது. தமிழ் சினிமாப் படங்களில் தற்போது பிரபலமாக வருகின்ற ''பியர் அடிப்பதும் பிரியாணி சாப்பிடுவதும் பிகர் பார்ப்பதும்'' போன்ற வாழ்க்கை முறையை எம்மூர் இளைஞர்களும் மெல்ல மெல்ல கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளார்கள் போலுள்ளது. இது பண்பாடு வழிவந்த அமைதியான பொதுச் சமூக வாழ்க்கையைத் தலைகீழாகப் புரட்ட ஆரம்பித்து விட்டது.

சுற்றுலாப் பயணிகளின் வகை தொகையற்ற வருகையும், அவர்களின் சர்வ சாதாரண குடிப்பழக்கமும் எம்மூர் இளைஞர்களின் மனோநிலையில் மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது போலும்.

எமது ஊர்களில் பெண் வீட்டார் மாப்பிள்ளை பார்க்கும் போது ''பெடியன் குடி புகைப் பழக்கம் எதுவும் இல்லாமல் இருக்க வேண்டும்'' என்று கூறுவதைக் கேட்டிருக்கின் றோம்.



அத்தகைய மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுப்பதும் ஒரு கட்டத்தில் முயற் கொம்பாகி விடும் போல உள்ளது.

இன்றைய இளம் பெண்களும் தமது கணவன்மாரது மது பாவனையை எல்லை தாண்டாமல் மௌனமாக அங்கீகரிக்கும் போக்கையும் ஓரளவு காண முடிகின்றது.

மூத்த அனுபவசாலி ஒருவர் கூறுகையில் ''குடிப்பழக்கம் கூடாது

## பண்பாட்டில் ஏற்பட்ட தளர்வுகளே மது போன்ற தீமைகளின் உள்நுழைவுக்குப் பிரதான காரணி

தான். ஆனால் குடிக்க விரும்புபவர்களுக்கு 'கள்' குடிக்குமாறு கூறுவது நல்லது. ஏனென்றால் அல்கஹோல் பாவிக்கப்படும் மதுவுடன் ஒப்பிடும் போது 'கள்' தீங்கு மிகக் குறைவானது. அத்துடன் கள்



குடிப்பதால் எமது பணம் வெளிமாவட்டங்களுக்குப் போகாமல் எம்மிடமே இருக்கும். கிராமியப் பொருளாதாரமும் வளருமென்றார். சுவையான ஆனால் சிந்திக்க வேண்டியது கருத்து அல்லவா?

ஆனால் எமது கிராமங்களில் சீவல் தொழிலைச் செய்யும் குடும்பங்கள் அரிதாகிவருகின்றன. இத்தொழிலைச் செய்பவர்கள் திடகாத்திரமாக நீண்ட ஆயுளுடன் வாழ்ந்ததைக் கண்டுள்ளோம். அவ்வளவுக்கு உடற் பயிற்சியைத் தருவது சீவல் தொழில்.

தென்பகுதிச் சுற்றுலாப் பயணிகள் வாராந்தம் ஆயிரக்கணக்கில் வருவதால் கள்ளுக்கு அதிக கிராக்கி வந்துவிட்டது. கூலித்தொழிலுக்குப் பிறர் கையை ஏந்தும் தொழிலாளர்கள் சீவல் தொழிலுக்கு மாறி அதிக வருமானம் ஈட்டலாம் அல்லவா?

மதுதொடர்பான குற்றச் செயல்களைத் தடுக்க மதுவரித் திணைக்களமும் அடிக்கடி பாய்ச்சல்களை மேற்கொள்கின்றது. நீதிமன்றில் நிறுத்தி அபராதங்களையும் விதிக்கின்றது. ஆனாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக குற்றச் செயல்கள் தொடரவே செய்கின்றன. சுற்றுலாப் பயணிகள் அதிகம் கூடுமிடங்களில் பொலிஸாரின் நெருக்கமான கண்காணிப்பு உள்ளது. அது பாராட்டுதற்குரியது. அதுபோல **மதுபான விற்பனை நிலையங்களை, விடுதிகளை அண்மித்தும் நெருக்கமான கண்காணிப்பை அடிக்கடி செய்வது நன்மை தரும்.**

போக்குவரத்து, சிறுவர், மகளிர் தொடர்பாகத் தனிப் பிரிவுகள் இருப்பது போல பொலிஸார் மதுபாவனைக் குற்றச் செயல்களுக்கும் தனியாகத் திறப்பது நல்லது என்பது பொதுமக்கள் அபிப்பிராயம்.

மதுவிற்பனை நிலையத்துக்கு முன்பாகவோ, அருகாமையிலோ வைத்து அருந்தக் கூடாது என்று ஒரு சட்டம் உள்ளது.

விடுதிகளிலும் குறித்த மில்லி லீற்றர் அளவுக்கு மேல் விற்கக் கூடாதென்ற சட்டமும் உள்ளது.

ஆனால் இவை கடைப்பிடிக்கப்படுவதை மிக இறுக்கமாக மேற்பார்வை செய்யப்படுவதாகவே தெரியவில்லை.

வேலியே பயிரை மேய்வதாகவும் பொது மக்கள் முறைப்பாடு கூறுகின்றனர். மது அருந்துபவர்கள் வெறியில் கதைப்பதாகத் தமது மன அழுக்குகள் எல்லாவற்றையும் வெளியே கொட்டி சமூக அமைதியின்மைக்கும் வித்திடுகின்றனர். வெறியில் கதைத்தோம், சுயநினைவில்லாமல் நடந்தோம் என்பதெல்லாம் 'த்ரில்' காட்டும் நிகழ்வுகள்தான். ஏனென்றால் வெறியில் கூட தமது வீட்டைச் சரியாகச் சென்றடைகின்றனர். அவ்வாறு இருக்க சுய நினைவில்லாமல் போனது எனக் கூறுவது எவ்வாறு சரியாகும்.

வாகன விபத்துக்கள் பதிவாகும் தினங்களைப் பகுப்பாய்வு செய்து பாருங்கள். கூடுதலாக ஞாயிறு, பண்டிகை தினங்களாக இருப்பதைக் காண்பீர்கள். மற்றும் நாள்களில் சாதாரண மக்களாக இருப்போர் அத்தகைய நாள்களில் பெருங்குடி மக்களாய் மாறி ஏனையவரின் உயிரையும் குடித்து, படுகாயங்களையும் ஏற்படுத்தி விடுகின்றனர்.

தென்பகுதியை எடுத்துப் பார்ப்போமாயின் அங்கு ஒவ்வொரு தேர்தலும் முடிந்த பின்பு புதிது புதிதாக சாராய பார்கள் முளைப்பது வழக்கம். தேர்தலில் கட்சிக்காக, வேட்பாளருக்காக பணம் செலவழித்த முதலாளிமாருக்கு நன்றிக் கடனாக சாராய பார் அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். இதனால் ஒரு சந்தியிலேயே நான்கைந்து சாராய பார்கள் இருப்பதை வியப்புடன் பார்க்க முடியும்.

சாராயம் இருப்பில் இருக்க அதன் காரம் கூடும் என்கிறார்கள். அதனால் சாராய பார் வணிகமும் சுளைசுளையாக பல லட்சம் மாதா மாதம் சம்பாதிக்கும் கவர்ச்சியான தொழிலாகி விட்டது. அனுமதிப் பத்திரம் பெறுவதற்குப் பல இடங்களில் பல இலட்சம் கைமாறுவதாகவும் கூறுமளவுக்கு கிராக்கி கூடிய வியாபாரம் இது.

எமது பிரதேசங்களில் சமயப் பற்றுக் கூடிய மக்கள் உள்ள இடங்களில் சாராய பார் திறக்க முயற்சித்தும் பொதுமக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டதான செய்திகள் அடிக்கடி வருகின்றது. பொதுமக்களின் விழிப்புணர்வும், சமூக அக்கறையும் நிச்சயம் பாராட்டுதற்குரியது. புகையிலை மறுப்புத் தினம், போதை பொருள் எதிர்ப்புத் தினங்கள் எல்லாம் வருடா வருடம் வெறும் சம்பிரதாய பூர்வமான விழாக்களாகத்தானே வருகின்றது.

அவை பொதுமக்களிடம் ஆக்க பூர்வமான வகையில் முன்னெடுக்கப்படுவது குறைவு.

முன்பு யாழ். பல்கலைக்கழகத்தின் சமூக மருத்துவத் துறையினர் மதுபாவனையின் தீமை பற்றி உயிரோட்டமான பரப்புரைகளை, விழிப்புணர்வுகளை வழங்கினர். தற்போது அது சற்றுச் சோர்ந்து விட்டது போலவே படுகின்றது.

**- மருதன் -**

இயல்பு நிலை திரும்பி வரும் கால கட்டத்தில் மீளவும் புத்துணர்ச்சியுடன் சமூகப் பணியை மேற்கொண்டால் நல்லதென்பதே பொதுமக்களின் அபிப்பிராயம். அரசசார்பற்ற நிறுவனங்கள் எதற்கெடுத்தாலும் வாழ்வாதாரம், சிறுவர் நலன் பேணல், பெண்களைத் தலைமை தாங்கும் குடும்பங்களை மேம்படுத்தல் எனக் கூறி வருகின்றன. சமூகத்தில் உழைப்பாளியின் வருமானத்தைப் பெருமளவில் அபகரிக்கும் மதுபாவனையால் எத்தனையோ தீமைகள் அரங்கேறுகின்றன. ஏன் இது பற்றிப் போதிய கவனம் செலுத்தவில்லையோ தெரியவில்லை. இனிமேலாவது தங்களது விழிப்புணர்வு வேலைத் திட்டங்களில் மதுபாவனையின் தீங்கை பாடசாலை, பல்கலைக்கழக மாணவருக்கும், பொது மக்களுக்கும் விளக்கும் வகையில் உள்ளடக்குவது சிறந்தது.

எமது பண்பாடு வழிவந்த கட்டுப்பாடுகள் வேகமாகத் தளர்ந்து வருகின்றன. மூடப்பட்டிருந்த யாழ்ப்பாணம் தென்பகுதியுடனும், சர்வதேசத்துடனும் வேகமாகப் பிணைக்கப்பட்டதும் பண்பாட்டுச் சீரழிவுகளுக்கு காரணமெனப் பெரியோர்கள் கூறுகின்றனர்.

மரபுகள், நம்பிக்கைகள், வழமைகள் வழிவந்த எமது பண்பாட்டை இறுகப் பற்றிப் பிடிக்க பண்பாட்டு மறுமலர்ச்சியையும் உருவாக்க வேண்டிய கால கட்டத்தில் உள்ளோம். நிகழ்காலச் சமூகம் தான் இதற்கு விடை கூற வேண்டும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கட்டட வேலை நடந்து கொண்டிருந்தது. காலை எட்டு மணிக்கு வந்து 10 பேர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். முதலாளி இன்னும் 2 பேரை அழைத்து வேலை செய்யச் சொன்னார்.

அந்த 2 பேரும் 10 மணிக்கு வந்தோம் என்று சம்பளம் குறைக்கக் கூடாது 200 ரூபா தர வேண்டும் என்றார்கள். முதலாளியும் சரி என்றார்.

மதியம் 12 மணிபோல் வந்து பார்த்தார். நினைத்தளவு வேலை முடியவில்லை. மேலும் 2 பேரை வேலைக்கு விட்டார். கூலி குறைக்கக்கூடாது முழுக்கூலி தருவீர்களா என்று கேட்டார்கள். வேலையை முடிக்க வேண்டும் என்ற அவசரத்தில் சரி என்றார். மாலையில் அனைவருக்கும் 200 ரூபாப்படி கூலி கொடுக்க 10 மணிக்கு வந்த நபர் சண்டை போட்டார். 12 மணிக்கு வந்தவனுக்கும் 200 ரூபா எனக்கும் 200 ரூபாவா என்றான். உடனே 8 மணிக்கு வந்தவருக்குத் தான் கூடுதலாக உழைத்து விட்டோமோ என்று வருத்தம் வந்து விட்டது.

நாள்க் கூலி தனக்கு வந்து விட்டது என்ற திருப்தி அவருக்கு இல்லை. தனக்கு நிகராக குறைவான நேரம் உழைத்து பணம் பெற்று விட்டதை அவரால் சகிக்க முடியவில்லை.

சண்டை எதற்கு என்று சந்தோஷமாக போகட்டுமே என்று 8 மணிக்கு வந்தவருக்கு 50 ரூபா இனாமாகக் கொடுத்தார். உடனே 12 மணிக்கு வந்தவர் தனக்கு அந்த தொகை தரவேண்டும் என்று சண்டைக்கு வந்தார். தான் நிர்ணயித்த கூலி கிடைத்து விட்டது என்று யாருமே திருப்திப்படவில்லை. தன்னைவிட அவனுக்குக் கூடுதலாக கிடைத்து விட்டது என்கிற கவலை.

காட்டில் முள்ளாகக் குத்திட்டு நின்ற சப்பாத்திக்கள்ளிக்கு ஒரு துக்கம். வாழை இலை போல் தான் பளபளப்பாக இல்லையே என்று பல நாள்களாக அழுதது. அதனுடைய கண்ணீருக்கு இரங்கி வனதேவதை வரம் தர முன் வந்தது. கள்ளிச் செடிக்கு கொள்ளை மகிழ்ச்சி. ''என் இலைகளை எல்லாம் தங்கமாக்கு'' மற்றைய தாவரங்கள் வயிறெரிய வேண்டும் என்றது.

சிரித்தபடி வனதேவதை வரம் தந்து மறைந்தது. தகதகவென்று தங்க இலைகள் தலையசைத்தன.

காலை கண் விழித்தால் பகீர் என்றிருந்தது. தங்க இலைகள் தங்காத இலைகளாய் எவராலோ திருடப்பட்டிருந்தது. தாங்க முடியாத வலி. வேறு ரத்தக் கண்ணீர் வந்தது.

வனதேவதையை வேண்டி மறுபடியும் அழுதது. கண்ணாடி இலைகள் தா என்று கோரிக்கை வைத்தது. வன தேவதையும் தந்தது. ஆனால் அவை ஆடிக் காற்றில் கண்ணாடி இலைகள் நொருங்கி விழுந்தன. மறுபடி வரம் வாழை இலைபோல் வாழ வழி கேட்டது.

வளர்ந்து செழித்து வழவழப்பாக இருந்த இலையை மாடு தின்றது. சப்பாத்தி இப்போது சாகக் கிடந்தது.

வனதேவதை இரங்கி வந்து இது தான் கடைசிமுறை யோசித்துக் கேள் என்றது. திருட முடியாத, காற்றில் உடையாத, மாடுகள் தின்னாத இலைகள் வேண்டும் என்றது. வனதேவதை முன்பிருந்த முள்முள்ளாக அதே பழைய இலைகள் கொடுத்தது.

பிறரோடு நம்மை ஒப்பிட்டால் ஏற்கனவே நம்மிடம் இருந்த சிறப்புத் தெரியாமல் போய்விடும் அல்லவா?

சுகி.சிவம்.

---

வாழ்க்கையில் ரசிப்பது என்பது ஒரு கலை. ஓர் அழகான பூ, சூரியன் உதிக்கும் வானம் இப்படிப் பார்ப்பதை ரசிக்கத் தெரிய வேண்டும். ரசனை இருந்தால் படைப்பு நிகழ்த்துவதற்கு ஒரு சந்தோசமாக இருக்கும்.

ஒருவர் பேசும்போது அவற்றைக் கேட்டு ரசித்தால்தான் அவருக்கு பேச வேண்டும் என்று ஆர்வம் இருக்கும்.

டி.கே.சி. இவருடைய மகள் இறந்து விட்டாள். அதற்கு ஒரு கவிஞர் இரங்கல் கவிதை ஒன்று அனுப்பினார். அந்தக் கவிதையை படித்த டி.கே.சி. ஆகா இப்படி ஒரு இரங்கல் கவிதை வருமென்றால் நான் பறிகொடுப்பதற்கு இன்னொரு பிள்ளை இருந்தல்கூட சந்தோஷம்தான் என்று சொன்னாராம். கவிதையை எப்படி ரசனை உணர்வுடன் ரசித்திருக்கிறார் பார்த்தீர்களா?

ஒரு நாள் பெட்டிக்கடையொன்றில் நின்று பால் சாப்பிட்டேன். ஒருவர் வாழைப்பழம் வாங்குவதற்காக வந்தார். வாழைக்குலையை திருப்பித் திருப்பிப் பார்த்தார். குலையில் இருந்து ஒரு காயைப் பிடுங்கி கைகளால் உருட்டி கனிய வைத்துச் சாப்பிட்டார். நான் சொன்னேன் எதற்கு இந்த காயை சாப்பிடுகிறீர்கள், எதிர்க்கடையில் தான் நல்ல கனிந்த பழம் இருக்கிறதே என்றேன். அதற்கு அவர் சொன்னார். அந்தக் கடையில் கடன் தர மாட்டார்கள், இவர்தான் கணக்கில் கொடுப்பார் என்றான். பார்த்தீர்களா? கடனாக இருந்தாலும் காயையா சாப்பிடுவது, அதற்கும் ஒரு பக்குவம் வேண்டாமா?

மகாராஜா ஒரு சபையைக் கூட்டி ஒரு சங்கீதக் கச்சேரி நடத்துகிறார். கச்சேரிக்கு வருகின்றவர்களுக்கு சாப்பாடு என்று அறிவித்தார். நிறையைப் பேர் வந்து கச்சேரியை ரசித்து தலை ஆட்டினார்கள். ராஜாவுக்கு சந்தோஷம். நம்முடைய மக்கள் எவ்வளவு நன்றாக ரசிக்கிறார்கள். மந்திரியைப் பார்த்துச் சொன்னார் இங்கு யாருக்கும் ரசனை கிடையாது. இலகுவாகச் சாப்பாடு போடுகிறீர்கள் என்பதால் கச்சேரிக்கு வந்திருக்கிறார்கள். ரசனை எதுவும் கிடையாது என்றார் மந்திரி. ராஜா அதை நம்ப மறுத்தார்.

இற்றைக்கு ஒரு நாள் மட்டும் பொறுப்பை என்னிடம் கொடுங்கள் நான் கண்டு பிடிக்கிறேன் என்றார் மந்திரி. வாசலில் நின்று மந்திரி எல்லோரும் கச்சேரிக்கு உள்ளே வரும்போது இன்றைக்கு எவராவது கச்சேரியைக் கேட்டுத் தலையை ஆட்டினால் தலையை வெட்டச் சொல்லி விட்டார் ராஜா என்று சொன்னார்.


கச்சேரியை ஆரம்பித்து பாகவதர் பாட ஆரம்பித்தார். யாரும் தலையை ஆட்டவில்லை. ஆடாமல் அசையாமல் உட்கார்ந்தார்கள். ஒருவர் மட்டும் தலையை ஆட்டி ரசித்தார். அவன் தலையை வெட்டப் போகிறார்கள் என்று எல்லோரும் பயந்தார்கள். அப்பொழுது மந்திரி அவனை அழைத்து தன் உயிர் போனாலும் பரவாயில்லை இது ரசிக்க வேண்டிய இடம் என்று ரசித்தானே இவனல்லவா ரசிகன். இவனுக்குத் தங்கத்தில் முத்திரையை போடுங்கள் என்று ராஜாவிடம் சொன்னதாக ஒரு கதை.

இன்று பல தரமான இலக்கியங்கள் தோன்றாமைக்கு படைப்பாளி மட்டும் காரணமில்லை. இரசிகர்களே முக்கிய காரணம்.

சுகி.சிவம்.

---

# மூளை பலம்



எனது நண்பர் ஒருவர் தினமும் ஒரு தடவை திராட்சைப் பழச்சாறு சாப்பிடுவார். ''என்ன, திராட்சை என்றால் உங்களுக்கு அவ்வளவு பிரியமா? என்றேன்.'' பிரியம் என்று இல்லை! இது எனக்கு ஒரு அவசியத்தேவை! உங்களுக்கெல்லாம் இது அவசியமில்லை என்றார்.

''ஒன்றுமே புரியவில்லை!'' என்றேன். ''பார்த்தீர்களா! அதற்குத் தான் சொன்னேன், மூளையை அதிகமாக பயன்படுத்தி வேலை செய்கிறவர்களுக்குத்தான். திராட்சை நிறைய அவசியம் என்றார்.

ஏதோ கொஞ்சம் புரிகின்ற மாதிரி இருந்தது. நேராக எனக்குத் தெரிந்த ஒரு சித்த வைத்தியரிடம் போனேன். ''என்ன இது விடயம் என்றுகேட்டேன். அவர் விவரமாகச் சொன்னார்.

''திராட்சை, மூளைக்குப் புத்துணர்ச்சி கொடுக்கும், களைப்பைப் போக்கும் என்றார். அந்தப் பழத்துக்கு மட்டும்தான் அப்படி ஒரு சக்தியா? என்று கேட்டேன். அப்படி இல்லை என்று சொல்லிவிட்டு விளக்கம் சொல்ல ஆரம்பித்தார்.

மனிதனுக்கு மூளை தெளிவாகவும் வலிமையாகவும் இருக்க வேண்டும். அப்படி என்றால் அதற்கு தகுந்த ஊட்டம் கொடுக்க வேண்டும். சில உலர்ந்த பழங்களுக்கும், புதுப்பழங்களுக்கும், மூளை, சதை - திசுக்களில் ஏற்படக் கூடிய நோய்களைப் போக்கும் தன்மை இருக்கும். வாதுமை இருக்கிறது இது மூளைக்கு சக்தியைக் கொடுக்கிறது. தசைகளுக்கு வலிவை கொடுக்கிறது. நரம்புகளுக்கும் பித்தப்பைகளுக்கும் நோய்வராமல் காப்பாற்றுகிறது.

வால்நட் என்கின்ற பழமும் மூளைப் பலவீனத்தைக் குணப்படுத்தும். அத்தோடு அத்திப்பழம், உலர்ந்த திராட்சை சேர்த்துச் சாப்பிட்டால் நல்லது. பொஸ்பரஸ் சத்து எந்தெந்தப் பழத்திலே அதிகமாக இருக்கிறதோ அவையெல்லாம் மூளை, செல், திசு எல்லாவற்றையும் பலப்படுத்த உதவும். மூளைக்கு அதிகமாக வேலை கொடுக்கிறவர்கள் பொஸ்பரஸ் சத்து அதிகமாக இருக்கின்ற பழத்தைச் சாப்பிடவேண்டும். வாதுமை, அத்தி, திராட்சை, பேரீச்சை, அப்பிள், ஒரேஞ் இவையெல்லாவற்றிலும் பொஸ்பரஸ் சத்து அதிகமாக இருக்கிறது. பொஸ்பரஸ் புலனுறுப்புக்களுக்கும் ஊட்டச் சக்தி கொடுக்கும்.

அப்பிள் தினமும் ஒன்று சாப்பிட்டால் நல்லது. திராட்சை, பேரீக்காய், வாழைப்பழம், அத்திப்பழம், இவையெல்லாம் பித்தநீர்க் கோளாறுகளை சரி செய்யும். பழங்களில் இருக்கின்ற சர்க்கரைச் சத்து விரைவாகச் சக்தியாக மாறிவிடும். அதனாலே அது உடலுக்குப் புத்துணர்ச்சி கொடுக்கும்.

மூளையிலே இரத்த ஓட்டம் குறைவாக இருந்தால் ஊட்டம் பற்றாக்குறை ஏற்படும். மூளையை பலவீனப்படுத்தும். மூளை பலவீனப்பட்டால் பலவித நோய்கள் ஏற்படும். கேட்கும் திறன் பாதிக்கப்படும். பார்வை மங்கும், களைப்பு, மயக்கம், தலைவலி வரும். அதனாலே மூளையை பலமாக வைத்திருக்க வேண்டியது நம்கடமை. உங்களால் முடிந்த அளவுக்கு பழங்களைச் சாப்பிடுங்கள்.

நமது உடலிலே எந்தப் பாகம் பழுதடைந்தாலும் உடனே மாற்று உறுப்பு வைத்து சிகிச்சை செய்கிறோம். அந்த அளவு வைத்தியம் வளர்ந்திருக்கிறது. ஆனால் மூளையை மட்டும் முழுதாக அப்படி வைத்துச் சிகிச்சை செய்ய முடியாது! அப்படிச் செய்தால் மூளையை கடன் கொடுக்க, தானம் கொடுக்க யார் தயாராக இருக்கிறார்கள்? அப்படித் தர இருந்தாலும் விரும்பி வாங்கும் அளவுக்குத் தரமான மூளை இந்தக் காலத்தில் எங்கே கிடைக்கும். அந்த மூளையைப் பார்த்தாலும் அதிலே வன்முறை எண்ணம்தான் அதிகமாக இருக்கிறது. அதனாலே இருக்கின்ற மூளை மோசமாகாத அளவிற்கு மூளையைக் காப்பாற்றுங்கள்.

கோ.சுவாமிநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# பொருளியல் - 02 | பகுதி - I

*(நேற்றைய தொடர்ச்சி)*

06. மையப் பணவீக்கம் என்பது தொடர்பாகச் சரியானது,
   1) அதிகளவிலான விலைத் தளம்பல்கள் கொண்ட விடயங்கள் மற்றும் உணவுப் பொருள் போன்ற விடயங்கள் உள்வாங்கப்பட்டு மதிப்பீடு இடம்பெறுதல்.
   2) உண்மையான உள்ளார்ந்த பணவீக்கத்தைப் பிரதிபலிக்கும் ஓர் அளவீடு.
   3) அதிகளவான விலைத் தளம்பலைக் கொண்ட விடயங்கள், வலு மற்றும் உணவுப் பொருட்கள் போன்ற நிர்வகிக்கப்பட்ட விலைகளைக் கொண்ட விடயங்களை நீக்கிய பின் மதிப்பிடப்படும்.
   4) பொது விலைமட்டத்தின் அதிகரிப்பு வெளிப்படையாகத் தெரியாமல் அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் மூலம் காணப்படும் பணவீக்கம்.
   5) கடந்தகால விலைமட்டப் போக்குகளை அடிப்படையாகக் கொண்டு விலை அதிகரிப்பைக் கவனத்தில் கொண்டு ஏற்படும் அதிகரிப்பு.

07. பின்வருவனவற்றில் செலவுத் தூண்டல் பணவீக்கத்திற்கான காரணியாக கருதப்பட முடியாதது,
   1) உற்பத்திக் காரணிகளின் விலை அதிகரித்தல்.
   2) இருக்குமதி மூலப்பொருள் விலை அதிகரிப்பு.
   3) முதலீட்டுச் செலவு அதிகரிப்பு.
   4) நேரில் வரிகள் அதிகரித்தல். 5) யாவும்.

08. பழைய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண், புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் வீட்டுடமையாளர்கள் முறையே,
   1) 1300, 460 2) 1100, 213
   3) 213, 334 4) 7, 12
   5) 455, 1300

09. வேலையின்மை வீதத்திற்கும், பணவீக்கத்திற்கும் இடையில் எதிரான தொடர்பு நிலவுவதாகக் கூறப்படுகின்றது. இதனை வெளிப்படுத்துவது,
   1) பிலிப்ஸ் வளையி. 2) J வளையி.
   3) லோறன்ஸ் வளையி. 4) ஊழிய நிரம்பல் வளையி.
   5) MEC வளையி

10. மொத்த வெளிநாட்டுப் படுகடன் பணிவீதம் தொடர்பாக மதிப்பீட்டில் பொதுவாகாப் பின்பற்றப்படுவது,
   1) கடன்மீள் கொடுப்பனவுகளை வெளிநாட்டு வருவாயின் நூற்றுவீதமாக மதிப்பிடல்.
   2) கடன்மீள் கொடுப்பனவு, கடனுக்கான வட்டிக்கொடுப்பனவுகளை, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நூற்றுவீதமாக உதல்.
   3) கடன்மீள் கொடுப்பனவு, கடனுக்கான வட்டி கொடுப்பனவு, பொருள் பணி ஏற்றுமதி வருவாயின் நூற்று வீதமாகக் குறிப்பிடுதல்.
   4) கடன் சேவைக் கட்டணத்தை அரசவரி வருவாயின் நூற்றுவீதமாக மதிப்பிடல்
   5) யாவும் சரியானவை.

11. வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வரும் பிரயாணிகளுக்கான பயணக் கட்டணம் முன்னரை விட வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கான தகுந்த காரணமாகத் தெரியக்கூடியதை ஆராய்க.
   1) அந்நிய செலாவணிச் சந்தையில் நாணய மாற்றுவீத உயர்வு ஏற்படல்.
   2) நாணயப் பெறுமதியை அரசு முன்னரை விட ஏற்றம் செய்தல்.
   3) நாணயப் பெறுமதி இறக்கம் செய்தல்.
   4) உள்நாட்டில் அதிகரித்த பணவீக்கம் நிலவுதல்.
   5) சென்மதி நிலுவை அட்டவணைச் சமநிலையில் காணப்படல்

12. பின்வருவனவற்றின் வருமானக் கணக்கு, நிதிக்கணக்கு உள்ளடங்கல்கள் முறையே,
   1) வட்டிக் கொடுப்பனவு, தேயிலை ஏற்றுமதி.
   2) கப்பல் கட்டணம், கட்டடவாக்கப் பணி.
   3) தொலைத்தொடர்பு, வெளிநாட்டிலிருந்து கிடைத்த நன்கொடைகள்.
   4) ஊழிய மதியுரைக்கட்டணம், வணிக வங்கியின் சொத்து பொறுப்புமாற்றம்.
   5) வீடமைப்புக்கான வெளிநாட்டிலிருந்து கிடைத்த நன்கொடை, தேயிலை இறக்குமதி.

13. 1$ = 100/= எனக் கொள்க. 20% ஆல் நாணயப் பெறுமதி ஏற்றம் இடம்பெற்றால் புதிய ஒரு ரூபாவின் பெறுமதி யாதாக அமையும்?
   1) 0.008 $ 2) 0.006 $
   3) 0.002 $ 4) 0.012 $
   5) யாவும் தவறு.

14. ''வர்த்தகத் திருப்பம்'' என்பது தொடர்பாகச் சரியாகத் தெரியக்கூடியது யாது?
   1) இலங்கை வர்த்தகச் செயற்பாடுகளை மாற்றியமைத்தல்.
   2) இருபக்க உடன்படிக்கை அடிப்படையில் வர்த்தகச் செயற்பாடுகள் இடம்பெறுதல்.
   3) வர்த்தகத்தின் மீதான தடைகளை அங்கத்துவ நாடுகளுக்கிடையில் அகற்றுதலும் சிறப்புத் தேர்ச்சியை அடையாளங்காணுதலும். அத்துடன் உலக உற்பத்தித்திறன் முன்னரை விட அதிகரித்தல்.
   4) உறுப்பு நாடொன்றிடமிருந்து குறைந்த செலவில் வாங்கக்கூடிய பண்டங்களை உறுப்புரிமை/அங்கத்துவமில்லா நாடொன்றிடமிருந்து கூடிய செலவுடன் இறக்குமதி செய்யவேண்டி ஏற்படும்.
   5) யாவும் தவறானவை.

15.

| நாடு | கணனி | கார் |
|---|---|---|
| A | 48 | 24 |
| B | 32 | 08 |

காட்டப்பட்ட அட்டவணையானது சர்வதேச வர்த்தகம் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு செலாவணி வீதம் தொடர்பாகச் சரியாக அமைவது,
   1) A நாடு 2 கணனியைக் கொடுத்து 4 காரை விட கூடவும் 6 காரை விட குறையவும் பெறமுடியும்.
   2) B நாடு 1 காரைக் கொடுத்து 2 கணினியை விட கூடவும் 4 கணனியை விட குறைவாகவும் பெறமுடியும்.
   3) A நாடு 1 காரை கொடுத்து 2 கணினியை விட கூடவும் 4 கணனியை விட குறைவாகவும் பெறமுடியும்.
   4) (2), (3) சரியானவை. 5) யாவும் தவறானவை.

16. WTO வின் இலட்சிய நோக்கம் (Mission) யாதாக இனங்காட்டலாம்?
   1) நாணய மாற்று வீதத்தை உறுதிப்படுத்துதல்.
   2) சட்ட விதிகள், கொள்கைகளைக் கட்டுப்படுத்தல்
   3) முடிந்தளவுக்கு எளிமையாக எதிர்வுகூறக் கூடியளவுக்கு சுகந்திர வர்த்தகத்தை உறுதிப்படுத்துதல்.
   4) அங்கத்துவ நாடுகளால் ஏற்படுத்தப்படும் ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துதல்.
   5) வர்த்தகப் பாதுகாப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்க வாய்ப்பளித்தல்.

17. பொருளாதார ஒருங்கிணைப்புக்கான வடிவங்களாகக் கருத முடியாதது யாது?
   1) பொதுச் சந்தைகள்.
   2) சுதந்திர வர்த்தகப் பிரதேசங்கள். 3) சுங்கக் கூட்டுக்கள்.
   4) முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தங்கள். 5) யூரோ முறை.

18. சனத்தொகை, பொறி தொடர்பாக சரியானது என இனங்காணப்படுவது யாது?
   1) குறிப்பிட்ட நாட்டின் சனத்தொகையானது தொடர் தேர்ச்சியாக நீண்டகாலப் போக்கில் அதிகரித்தல்.
   2) சனத்தொகை வளர்ச்சி வீதத்தை விட பொருளாதார வளர்ச்சி வீதம் உயர்வாக அமைதல்.
   3) சனத்தொகை வளர்ச்சி வீதத்தை விட தலாவருமான வளர்ச்சி வீதம் உயர்வாக அமைதல்.
   4) சனத்தொகை வளர்ச்சி வீதத்தை விட தலா வருமான வளர்ச்சி வீதம் சிறிதாக அமைதல்.
   5) சனத்தொகை வளர்ச்சி வீதமும் தலா வருமான வளர்ச்சி வீதமும் சமமாக அமைதல்.

19. 2008ஆம் ஆண்டு இலங்கையின் பணவீக்க வீதம் வேலையின்மை வீதம் என்பன முறையே,
   1) 2.6%, 12% 2) 3.4%, 3%
   3) 15.8%, 8% 4) 10%, 6%
   5) 22.6%, 5.2%

20. 1960, 2008 பொருளாதார வளர்ச்சி வீதம் (உள்நாட்டு உற்பத்தியில்),
   1) 7.4, 7 2) 5, 7.2 3) 6.8, 6 4) 2, (1.3) 4) 3, 5.3

## பகுதி - II

*பகுதி 'அ' இல் இரண்டு வினாக்களுக்கும், பகுதி 'ஆ' இல் இரண்டு வினாக்களுக்கும் விடை தருக.

### பகுதி 'அ'

01. 1) கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண், புதிய கொழும்பு நுகர்வோன் விலைச்சுட்டெண் இரண்டினையும் நான்கு காரணிகளின் அடிப்படையில் வேபடுத்துக.
   2) பணவீக்கம், பணவீக்கமின்மை என்பவற்றை வேறுபடுத்தி பணவீக்கம் தொடர்பாக கேள்விப்பக்க, நிரம்பல்பக்க காரணிகளைக் குறிப்பிடுக.
   3) உயரிய பணவீக்கம் ஒன்றின் விளைவாக பின்வருவோருக்கு எத்தகைய தாக்கங்களை உண்டுபண்ணும் எனக் குறிப்பிடுக.
      அ. சேமிப்பாளர்.
      ஆ. கடன்படுநர்.
      இ. சமுர்த்தி நிவாரணம் பெறுவோர்.
      ஈ. நிலையான வருமானம் பெறுவோர்.
      உ. ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள்.
      ஊ. 2008, 2009 களில் பணவீக்க வீதங்கள் எவ்வாறு உள்ளன என்பதை வெளிப்படுத்தி காரணங்கள் பற்றி தருக.

02. மத்திய வங்கி மிகைத் திரவத்தன்மையை உறிஞ்சுவதாகவும், பற்றாக்குறைத் திரவத்தன்மைப் பூர்த்திக்காக நிதி வழங்குவதாகவும் கருதுக. இது தொடர்பாக,
   1) மீள் கொள்வனவு ஏலங்களை நடத்தல், நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடத்தல் என்பவற்றை விளக்குக.
   2) வணிக வங்கியானது நீண்டகாலத்திற்கு நிலைத்திருப்பதற்கு இலாபம், திரவத்தன்மை இரண்டும் தொடர்பாக எவ்வாறு செயற்படல் சிறந்தது என ஆராய்க.
   3) வணிக வங்கிகள் பணத்தை வெளியிடும் அதிகாரம் இல்லாததனால் பணத்தை உருவாக்க முடியாது. இது தொடர்பாக உமது கருத்துரை யாது?
   4) பண ஆக்கம் எத்தகைய காரணிகளில் தங்கியுள்ளது எனக் குறிப்பிடுக.

03. 1) 2008, 2009 ஆண்டுகளுக்கான பணநிரம்பல் உத்தியோகபூர்வத் தரவுகள் மில்லியனில் வருமாறு.

| விடயம் | 2008 | 2009 |
|---|---|---|
| வெளிநிற்கும் நாணயம் | 186.1 | 217.4 |
| மத்திய வங்கியில் உள்ள வணிக வங்கி வைப்புக்கள் | 82.3 | 86.1 |
| வர்த்தக வங்கிகளில் உள்ள கேள்வி வைப்புக்கள் | 122.3 | 154.9 |
| வர்த்தக வங்கிகளில் உள்ள தவணைச் சேமிப்பு வைப்புக்கள் | 1004.9 | 1200 |
| வெளிநாட்டு நாணய வைப்புக்கள் | 240.6 | 269.4 |
| வர்த்தக வங்கிகளிடம் உள்ள நாணயம் | 31.1 | 35.6 |

   பின்வருவனவற்றை மதிப்பிடுக. (2008, 2009 இற்கு)
      அ. ஒதுக்குப்பணம் / நாணயத்தளம்.
      ஆ. $M_1$ பணநிரம்பல்.
      இ. விரிந்த பண நிரம்பல் ($M_2$)
      ஈ. திரட்டிய விரிந்த பணநிரம்பல் ($M_2b$)
      உ. பணப்பெருக்கி.
   2) 2008ம் ஆண்டு $M_4$ பணநிரம்பல் கட்டமைப்பைத் தருக.

04. ''2007ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2008இல் வர்த்தகமாற்று வீதமானது மோசமான நிலையை அடைந்துள்ளது.''
   1) பண்ட வர்த்தகமாற்று வீதம், வருமான வர்த்தகமாற்று வீதம் என்ற எண்ணக்கருக்களுக்கு இடையிலான வேறுபாட்டை விளக்குக.
   2) வர்த்தகமாற்று வீதம் ஒன்றில் சுபீட்சம் நிகழும்போது அதன் விளைவாக ஒரு நாட்டில் ஏற்படக்கூடிய பொருளாதார விளைவுகள் பற்றிக் குறிப்பிடுக.
   3) வர்த்தகமாற்று வீதத்தில் ஒரு வீழ்ச்சி ஏற்படும் நிலையில் அதனால் சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவைப் பற்றாக்குறையை நோக்கிச் செல்லும் எனக் கூறப்படுவது எந்தளவிற்குப் பொருத்தமானது என விளக்குக.
   4)

| விடயம் | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 |
|---|---|---|---|---|---|
| ஏற்றுமதி விலைச்சுட்டி | 100 | 120 | 125 | 150 | 150 |
| இறக்குமதி விலைச்சுட்டி | 100 | 100 | 120 | 110 | 100 |
| ஏற்றுமதி பெறுமதிச் சுட்டி | 140 | 220 | 180 | 200 | 160 |

      அ. பண்ட வர்த்தகமாற்று வீதத்தை மதிப்பிடுக.
      ஆ. வருமான வர்த்தகமாற்று வீதத்தை மதிப்பிடுக.

**ஆக்கியோன்: S.S.சிறி B.Com (Spl), DMI, Jaffna.**

இவ் ஆசிரியரின் இலவசக் கருத்தரங்கு ஒன்று நேற்றும் இன்றும் Rotaract Club இன் அனுசரணையுடன் Higher Study, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அனுசரணை
ROTARACT CLUB JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஒகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# வரலாறு - 01 | பகுதி - I

* 1-10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

01. 1) இயக்கர். 2) நாகர். 3) கிருணிகர். 4) ராட்சதர். 5) வேடர். ( )

02. 1) சலபனாவ. 2) படவான. 3) பவுல்மிக. 4) கமிக. 5) பசோகொட்டுவ. ( )

03. 1) தீபவம்சம். 2) நிகாயசங்கிரக. 3) ராஜாவலிய. 4) கவிசிலுமின. 5) சமந்தபாஷாதிக. ( )

04. 1) காசபர்வதம். 2) வேதியகிரி. 3) சகபர்வதம். 4) மிசாகபர்வதம். 5) சேத்தியாகிரி. ( )

06. 1) சிகவளந்த வினிச. 2) சமன்ந்த பாஷாதிகா. 3) புதுகுணாலங்காரய. 4) ஜானகிரண. 5) சியபஸ்லகர. ( )

06. 1) சேனாசம்மத விக்கிரமபாகு. 2) ஜயவீர பண்டார. 3) கரலியத்த பண்டார. 4) றைகமபண்டார. 5) கோணப்பு பண்டார. ( )

07. 1) புவிராஜபண்டாரம். 2) பண்டார்ரவன்னியன். 3) எதிர்மன்னசிங்க. 4) 2ஆம் சங்கிலியன். 5) பரராசசேகரன். ( )

08. 1) லங்காலோகய. 2) ஞானாத்த பரதீப. 3) கம்பெரலிய. 4) இந்து சாசனம். 5) லக்ரிவிகரண. ( )

09. 1) ஜேம்ஸ் எமேசன் ரெனன்ற். 2) லியோனாட் வூல்ட். 3) ஜோஜ் பேட். 4) ஜோ்ன் டோயிலி. 5) ஜோஜ் ரேன. ( )

10. 1) ரட்மலான தம்மாலோக தேர. 2) மீகெட்டுவத்தே குணானந்த தேர. 3) கிக்கடுவே ஸ்ரீ சுமங்கலதேர. 4) வஸ்கடுவே ஸ்ரீ சுபோதி தேர. 5) வலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேர. ( )

* 11-15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடியை இனங்கண்டு அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

11. 1) புதுசரண - குருளுகோமி.
2) சந்தாமரத்னாவலியா - தர்மசேன தேர.
3) யாழ்ப்பாண வைபவமாலை - மயில்வாகனப் புலவர்.
4) ரஸவாகினி - வேதேக தேர.
5) பரெவி சந்தேஸய - ஸ்ரீ ராகுலதேர. ( )

12. 1) மகாண அரச வம்சம் - போவத்தகல கல்வெட்டு.
2) மகாயானம் பற்றியது - குச்சவேலிக் கல்வெட்டு.
3) சுங்க வரிகள் - கொடவாய கல்வெட்டு.
4) கிராம நிர்வாகம் - திரியாய் கல்வெட்டு.
5) உள் சந்தை பற்றிய விதிகள் - கோப்பற்றிகம கல்வெட்டு. ( )

13. 1) ஒல்லாந்தத் தேசாதிப்தி - டேகூற்றோ.
2) ஒல்லாந்த சமயகுரு - பலிப்புஸ் பால்டே.
3) கத்தோலிக்க சமயகுரு - கொன்சால்வேஸ்.
4) பிரித்தானிய தூதுவர் - ஜோன் பைபஸ்.
5) போர்த்துக்கேயத் தேசாதிபதி - பீட்ரோ லோபஸ் டி சூசா. ( )

14. 1) இராசகாரிய முறை ஒழிப்பு - கோல்புறுக் கொமிஷன்.
2) பொதுப் போதனைத் திணைக்களம் நிறுவுதல் - மோகன் கொமிஷன்.
3) சிவில்சேவை நிவுதல் - டீ மியூரன் கொமிஷன்.
4) சவஜன வாக்குரிமை - டொனமூர் கொமிஷன்.
5) மந்திரிசபை முறை - சோல்பரி கொமிஷன். ( )

15. 1) இலங்கையுடன் ஒரு வரலாற்றுத் தொடர்பு - ரொபேட் நொக்ஸ்.
2) இலங்கையில் 50 வருடங்கள் - ஜோஆன் ரெபரோ.
3) இலங்கை மீதான அரசியல், ஆன்மீக ஆதிக்கம் - வெனாவோ டீ கேரோஸ்.
4) இலங்கை - எமெசன் ரெனற்.
5) கேகாலை அறிக்கை - எச்.சீ.பீ.பெல். ( )

* 16-20 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயகள்/கூற்றுக்கள்/திகதிகள் ஆகியவற்றின் தொகுதிகள் X, Y எனும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. X நிரலில் தரப்பட்டுள்ள பெயகள்/கூற்றுக்கள்/திகதிகள் Y நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடபுபட்டவை. ஆனால், அவை சரியான தொடர் ஒழுங்கில் தரப்படவில்லை. X நிரலில் உள்ளவற்றை Y நிரலில் உள்ளவற்றுக்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

16.

| X | Y |
|---|---|
| 1) அழகிய வண்ண முகவெட்டு | A கோகில சந்தேசிய. |
| 2) இருகல் குலதிலக தேர | B சலலகினிசா தேசிய. |
| 3) வீதாகம மைதிரேய தேர | C குட்டிலகாவிய. |
| 4) கோட்டகம சிறிராகுல தேர | D லோவட சங்கராவ. |
| 5) வெத்தேவே தேர | E சுபோரிந்தய. |

1) EABCD 2) EADBC 3) EDCBA 4) EABCD 5) EDABC ( )

17.

| | |
|---|---|
| 1) நிலஅளவைத் திணைக்களம் | A 1930 |
| 2) தொல்பொருளியல் திணைக்களம் | B 1802 |
| 3) நீப்பாசனத் திணைக்களம் | C 1900 |
| 4) விவசாயத் திணைக்களம் | D 1890 |
| 5) கூட்டுறவுத் திணைக்களம் | E 1912 |

1) BDECA 2) BEDCA 3) BADEC 4) BDCEA 5) BAEDC

18.

| | |
|---|---|
| 1) றொபேட் பாதுவந்துதாவ | A தொழில் அமைச்சர். |
| 2) சி.டபள்யூ.டபள்யூ. கன்னங்கரா | B உள்ராட்சி அமைச்சர். |
| 3) டி.ப.ஜயதிலக | C உள்துறை அமைச்சர். |
| 4) டி.எஸ்.சேனநாயக்க | D கல்வி அமைச்சர். |
| 5) பொரியசுந்தரம் | E விவசாய அமைச்சர். |

1) BDECA 2) BEDCA 3) BADEC 4) BDCEA 5) BAEDE ( )

19.

| | |
|---|---|
| 1) தெதுறு ஓயா | A தன் கட்டி அதணைக்கட்டு. |
| 2) வளவ கங்கை | B கத்தோட்ட அணைக்கட்டு |
| 3) மகாவலி கங்கை | C எலகர அணைக்கட்டு. |
| 4) களுகங்கை | D மினிப்பே அணைக்கட்டு. |
| 5) அம்பன் கங்கை | E கொட்டபத்த அணைக்கட்டு. |

1) EADBC 2) EBCDA 3) EBCAD 4) ECDAB 5) EACBD ( )

20.

| | |
|---|---|
| 1) னெறிமொங்மேசன்மூ | A மாநகரசபை அமைக்கப்படும். |
| 2) றொபேட் பிறவுன்றிக் | B இலங்கையின் கடைசி ஆழ்பதி. |
| 3) எட்வேட் பான்ஸ் | C சட்டசபையின் உருவாக்கம். |
| 4) வில்மட் கோட்டன் | D கொழும்பு கண்டி வீதி அமைக்கப்பட்டமை. |
| 5) கேக்குயிலிஸ் றொபின்சன் | E பிரித்தானிய கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றல். |

1) BEDCA 2) BDECA 3) BDCEA 4) BAEDE 5) BADEC ( )

* 21-25 வரையுள்ள ஒவ்வொன்றுக்கும் A,B,C,D என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவுசெய்க.
A, B மட்டும் சரியாயின் 1 எனவும்,
B, C மட்டும் சரியாயின் 2 எனவும்,
C, D மட்டும் சரியாயின் 3 எனவும்,
A, C மட்டும் சரியாயின் 4 எனவும்,
ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

21. சமய வரலாற்றில் மகாசேனன் தொடர்பாக பின்வருவனவற்றுள் எந்தக் கூற்று சரியானது / கூற்றுக்கள் சரியானவை?
A வைதுல்யக் கோட்பாட்டை அறிமுகம் செய்தமை.
B அநுராதபுரத்தில் மிகப்பெரும் சேத்தியத்தைக் கட்டியவன் என்ற சிறப்பு மகாசேனனுக்குரியது.
C அபயகிரி தாதுகோபத்தைக் கட்டியமை.
D அவனுடைய காலத்தில் தேரவாத திரிபிடகம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது. ( )

22. உருகுணை இராச்சியத்தைப் பொறுத்தவரையில் பின்வரும் குறிப்புகளில் எது சரியானது / எவை சரியானவை?
A தேவநம்பியதீசனின் இளைய சகோதரனாகிய மகாநாகன் உருகுணையை மகாநாமத்திலிருந்து ஆட்சிபுரிந்தான்.
B கஜரகாமத்து தசபாத்திக ராசாக்களைத் தோற்கடித்து கோட்டாபயன் உருகுணை இராச்சியத்தின் எல்லைகளை விஸ்தரித்தோன்.
C பிரதேச இராச்சியங்களான சேரு, சோமா, லோண ஆகியவற்றைக் கைப்பற்றுவதன் மூலம் துட்டகாமினி உருகுணை இராச்சியத்தின் எல்லைகளை விஸ்தரித்தான்.
D துட்டகாமியின் படை வீர பதின்மரின் பெயர்களை குசலான்கந்த கல்வெட்டு குறிப்பிடுகின்றது. ( )

(வளரும்)

**ஆசிரியர்: திரு.M.பத்மன், B.A (Hons) His (Spl) M.A, யாழ்ப்பாணம்.**

## பொருளியல் தொடர்ச்சி......

### பகுதி 'ஆ'

05. 1) வெளிநாட்டுச் சொத்துக்கள் தொடர்பாகப் பின்வருவனவற்றிற்கு விடை தருக.
அ. வெளிநாட்டுச் சொத்தின் உள்ளடக்கங்களைத் தருக.
ஆ. வெளிநாட்டுச் சொத்தின் உரிமையாளர்கள் யாவர்?
இ. வெளிநாட்டுச் சொத்தின் முக்கியத்துவங்கள் யாவை?
2) 2007, 2008, 2009 களில் வெளிநாட்டுச் சொத்து மட்டம் எவ்வளவாக உள்ளது என்பது பற்றிக் குறிப்பிடுக.
3) வெளிநாட்டு நேரடி முதலீடு, வெளிநாட்டு உதவி இரண்டையும் இலங்கை பெறுவதாகக் கருதுக. இந்த இரண்டினதும் வேறுபாடுகள், முக்கியத்துவங்கள் பற்றிக் குறிப்பிடுக.

06. 1) ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் கீழான துணைநிலக் குழுக் கூட்டங்களின் நான்காவது தொடர் உறுப்பினர் நாடுகள் எவை?
2) பெயரளவு பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதம், மெய்ப் பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதத்தை விளக்குக.
3) 1977 - 2008 காலப்பகுதி எற்றுமதிக் கட்டமைப்பு எவ்வாறு உள்ளதெனக் காட்டுக.
4) வெளிநாட்டுப் படுகடன் பணிவீதம் என்பதனை விளக்கி 2008, 2009 களில் இதன் போக்குப் பற்றிக் கருத்துரைக்குக.

07. 1) பொருளாதார வளர்ச்சி என்பதனை விளக்கித் தீர்மானிக்கும் காரணிகளை முன்வைக்குக.
2) பொருளாதார வளர்ச்சியின் நன்மைகள், நட்டங்கள் (செலவுகள்) பற்றி வேறுபடுத்துக.
3) பொருளாதார வளர்ச்சியால் பொருளாதாரக் கட்டமைப்புக் கோலம் மாறும் விதம் பற்றி ஆராய்க.

08. 1) வறுமை என்பதன் கருத்தை விளக்குக.
2) வறுமைக் குறிகாட்டிகளைக் குறிப்பிடுக.
3) வறியவர்களுக்குச் சார்பான வளர்ச்சி என்பதனை விளக்குக.
4) 1948, 2008 காலப்பகுதியை அவதானிக்கும்போது முக்கியத்துவமான சமூக குறிகாட்டிகளான கல்வி அறிவு, ஆயுட்காலம், சிசுமரணம், பிறப்பு, இறப்பு வீதப் போக்குகள் எவ்வாறு உள்ளன? காரணங்கள் பற்றியும் ஆராய்க.

(நிறைவுற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



வாய்ப்புகள் வாயில் தேடிவரும் நாள். உறவினர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். அதிக செலவில் முடியுமென, நினைத்த காரியம் ஒன்று குறைந்த செலவில் முடியும். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில், வியாபார ரீதியான பணவரவுகளைப் பெறலாம். பரபரப்பாக செயற்படலாம்.

### இடபம்




சில விடயங்களில் கருணை, பரிவு மனப்பான்மையுடன் நடந்து கொள்வீர்கள். தொழிலில் தேக்க நிலைமை மாறி சுறுசுறுப்பு கூடும். உங்களின் வேலை ஒன்றை மற்றவர்களை நம்பி ஒப்படைப்பீர்கள். கடன் பிரச்சினைகளை மாற்றி அமைப்பீர்கள். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரைப் பார்க்க வெளியூர் செல்லலாம்.

### மிதுனம்



உல்லாச, உற்சாக விடயங்களுக்காக பணத்தை தண்ணீராகச் செலவு செய்வீர்கள். எந்த வேலையும் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கலாம். அடுத்தவர் விடயங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. உங்களுக்கு வேண்டிய ஒருவர் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட்டலாம். ஆஞ்சநேயர் வழிபாடு ஆறுதல் தரும்.

### கடகம்



உங்களை போன்ற குணமுடைய ஒருவருடன் சேர்ந்து சில காரியங்களைச் செய்வீர்கள். உங்களின் நுட்பமான, புத்திசாலித்தனமான செயல்களைப் பார்த்து மற்றவர்கள் வியப் படைவர். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு அதிகரிக்கும். பால்ய நண்பர்கள் சந்திப்பால்சந்தோஷம் அடைவீர்கள். முயற்சிகள்பலிக்கும் நாள்.

### சிங்கம்



மனதில் கஷ்டங்கள் இருந்தாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்வீர்கள். கணவன் மனைவி இடையே பிரச்சினைகள் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மை தரும். பெண்கள் விரும்பிய பொருள்களை வாங்குவீர்கள். ஆலய வழிபாடு மூலம் அமைதி பெறுவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம்.

### கன்னி



சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி விடுமோ என, கலக்கம் அடையலாம். உங்களின் தனிப்பட்ட ரகசியங்களை மற்றவர்களிடம் சொல்ல வேண்டாம். கோபித்துக் கொண்டு சென்ற உறவினர் ஒருவரிடம் நீங்களே வலியச் சென்று பேசுவீர்கள். குழந்தைகளின் செயற்பாடுகளால் பெருமை அடைவீர்கள். மற்றவர்களுக்காக பிணை கொடுப்பீர்கள்

### துலாம்



உறவினர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். அவசரப்பட்டு செய்த காரியம் ஒன்றை நினைத்து கவலை கொள்வீர்கள். நாளை செய்யலாமென, தள்ளி வைத்த வேலை ஒன்றை இன்றே செய்து முடிப்பீர்கள். பரிகாசமான பேச்சுக்களால் சிலரின் அதிருப்திக்கு ஆளாகலாம். கடன்கள் வசூலாகும்.

### விருச்சிகம்



நினைத்த காரியம் ஒன்றை நிறைவாக செய்து முடிப்பீர்கள். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். கடனாக, கைமாத்தாக கொடுத்த பணம் திரும்ப வரும். நண்பர்கள் சிலர் உங்களுக்காக செலவு செய்யலாம். குறுக்கு வழி சிந்தனைகளைத் தவிர்த்து எதிலும் நேர் வழி யில் செயற்படுவீர்கள். செல்வாக்கு கூடும்.

### தனுசு



தெரியாமல் ஒரு காரியத்தில் இறங்கிவிட்டு, பின்னர் அதிலிருந்து பின் வாங்கலாம். எதிர்பாராத தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சகோதரிகள் வழியில் சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். அயலார் உங்களிடம் அன்பாக நடந்து கொள்வர். குடும்ப உறுப்பினர்களின் செயற்பாடுகளை விமர்சிப்பீர்கள்.

### மகரம்



ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் எதையும் திட்டமிட்டு செய்யப் பாருங்கள். கணவன் மனைவிக்குள் சந்தேகம் வந்து நீங்கும். மற்றவர்கள் விடயத்தில் அநாவசியமாக தலையிட வேண்'டாம். சொத்து விவகாரத்தில் அவசர முடிவுகளை தவிர்க்கவும். வியாபாரத்தில் அலைச்சல் இருக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். நாவடக்கம் தேவைப்படும் நாள்.

### கும்பம்



எல்லோரிடமும் பாசம், பரிவுடன் நடந்து கொள்வீர்கள். நெருங்கிய நண்பர் ஒருவருக்கு பண உதவி செய்யலாம். தொழில் செய்வோர் லாபம் குறையாமலிருக்க ஒன்றுக்கு இரண்டு முறை யோசித்து முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டும். இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். குடும்ப பொறுப்புகள் அதிகரிக்கும்.

### மீனம்



உறவினர்கள் வழியில் சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். ஆசைப்பட்ட பொருள் ஒன்று எளிதில் கைக்கு கிடைக்கும். எதிர்கால சேமிப்புகளில் அக்கறை காட்டுவீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். சிலர் மீது கோபம், வேகம் வந்தாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்வீர்கள்.

## வீதியெங்கும் வீசும் துர்நாற்றம் மூக்கைப் பொத்தும் பயணிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 28

ஆறுகால்மடம் வீதியில் அமைந்துள்ள கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு அருகில் உள்ள காணியில் பொதுமக்கள் கழிவுகளைக்கொண்டுவந்து கொட்டிச் செல்கின்றனர்.

இக்கழிவுகளை விலங்குகள் கிளறுவதாலும் சிலவேளைகளில் அவை இத்தகைய கழிவுகளை வீதிகளில் கொண்டு வந்து போடுவதனாலும் வீதியெங்கும் ஒரே துர்நாற்ற மயமாக வுள்ளது.

இதனால் இந்த வீதியில் பயணிக்கும் மக்கள் மூக்கைப் பொத்தியபடியே செல்ல நேரிடுகின்றது. இதுதவிர சுற்றாடலிலும் இதன் காரணமாகத் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-314)

## கஸ்தூரியார் வீதிக்கு உயர்வலு மின்சாரம்

யாழ்ப்பாணம்,ஜூலை 28

கஸ்தூரியார் வீதிப் பகுதிக்கு உயர் மின் வலுவை வழங்கும் நடவடிக்கைகளை இலங்கை மின்சாரசபை ஆரம்பித்துள்ளது.

கஸ்தூரியார் வீதியில் குறைந்தளவு மின் வலுவே இதுவரையும் வழங்கப் பட்டு வந்தது. இதனால் அவ்வீதியில் உள்ள மக்கள் மின் பாவனையில் சில இடர்பாடுகளைச் சந்தித்து வந்தனர். இதனை நிவர்த்தி செய்யும் வகையில் இப் பகுதிக்கு உயர் வலுக்கொண்ட மின் சாரத்தை வழங்க புதிய மின்மாற்றி ஒன்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கபட்டுள்ளது. இத்திட்டம் இன்னும் 10 நாள்களில் பூர்த்தியாகிவிடும் என மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(எ-315-314)

## கழிவு நீர் அகற்றல்

யாழ்ப்பாணம்,ஜூலை 28

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி வீதிப் பகுதியில் உள்ள வாய்க்காலில் கழிவு நீர் தேங்கி நின்றதால் அப்பகுதியெங்கும் துர்நாற்றம் வீசியது. இதனால் இவ்வீதியில் பயணிக்கும் மக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.எனினும் இது குறித்து தகவல் கிடைத்ததும் வாய்க்காலில் உள்ள கழிவு நீரை மாநகரசபை ஊழியர்கள் கடந்த திங்கட்கிழமை அகற்றியதால் துர்நாற்றத்துக்கு முடிவு கட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (எ-314)

## நிவாரண விநியோகம்

பண்டத்தரிப்பு,ஜூலை 28

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராமங்களில் வசிக்கும் 11.08.2006 இற்குப் பின் இடம்பெயர்ந்த 2174 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படவுள்ளது. 6மாதங்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்த குறித்த நிவாரணக் கொடுப்பனவு இன்னும் 3 மாதங்கள் நீடிக்கப்படவுள்ளதாகவும் இதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களின் பட்டியல் கிடைக்கப் பெற்றதும் இந்த நிவாரணம் உடனடியாக வழங்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-313)


## சேவைநலன் பாராட்டும் பிரிவு உபசார வாழ்த்துக்களும்



திருமதி உதயராணி தர்மதாசா
அவர்கள் உப அதிபர் (SLTS-I)
யா/நுணாவில் கிழக்கு
அமிர்தாம்பிகை வித்தியாலயம்

எமது வித்தியாலயத்தில் கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரியராகவும், உப அதிபராகவும் அர்ப்பணிப்புடன் நிறைந்த சேவையாற்றிச் சென்ற 11.07.2010 இல் தனது 55 ஆவது அகவை நிறைவில் ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி உதயராணி தர்மதாசா அவர்கள் தம் துணைவர் பிள்ளைகளுடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று ஓய்வுகாலத்தில் சிறப்புடன் பல்லாண்டு காலம்வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

### சேவைக்காலம்

| | |
|---|---|
| 29.12.1985-09.06.1991 | கிளி/ஆனைவிழுந்தான் சி.சி.த.க.பாடசாலை ஆசிரியர், உப அதிபர் |
| 10.06.1991-31.12.1994 | கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை ஆசிரியர், உப அதிபர் |
| 01.01.1995-15.02.1998 | யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை ஆசிரியர் |
| 16.02.1998-03.05.2000 | யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் ஆசிரியர், உப அதிபர் |
| 04.05.2000-09.12.2002 | யா/கீரிமலை நகுலேஸ்வரா ம.வித்தியாலயம் ஆசிரியர் (தற்காலிக இணைப்பு) |
| 10.12.2002-10.07.2010 | யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் உப அதிபர் |

யா/நுணாவில் கிழக்கு
அமிர்தாம்பிகை வித்தியாலயம்,
சாவகச்சேரி.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்கள்.

(சி/569190)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் தினமும் காலை 6 மணி முதல் இரவு 8 மணிவரை சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்ட No.1 Broiler கோழிக்குஞ்சுகள் (விசேட விலையில்) 02.08.2010 காலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன்.
நல்லூர். தொ.பே: 021 222 6944

சூட்டி பாம்.
வட்டுக்கோட்டையிலும் பதிவு செய்யவும்.
தொ.பே: 021 321 6290

குறிப்பு: தீவனம், மருந்து என்பனவும் பெற்றுக்கொள்ளலாம். எம்மிடம் குஞ்சு வாங்குபவரிடம் திருப்பி கோழி கொள்வனவு செய்யப்படும். [கிளிநொச்சி மாவட்டத்தில் கோழிக்குஞ்சுத் தீவனம் விநியோகிக்கப்படும்].

## வீடு விற்பனைக்கு

509, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் 2¼ பரப்பு வீட்டுடன் காணி விற்பனைக்கு உள்ளது. தட்டா தெரு சந்தியிலிருந்து 50 m உள்ளே.

தொடர்பு: 0772058105, 024 2223005, 0771554641

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

HERO HONDA Supper Splender NP VP XXXX இலக்கமுடைய மோட்டார் சைக்கிள்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ 01 ✱ 01 ✱ 1959

கண் நெகிழ 09 ✱ 08 ✱ 2009



## மாணிக்கம் இலட்சியன்

அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டகலாது. பாரினிலே உங்களை நாங்கள் காண்பது எப்போது-நீங்கள் இல்லாமல் இப்பாரினிலே உங்கள் நினைவலைகளுடன் நிம்மதி இன்றித் தவிக்கின்றோம். எங்களது கண்ணீர்ப் பூக்களை உங்களுக்கு காணிக்கையாக்குகின்றோம்.

"சிவபதி",
இளவாலை.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, மகன், சகோதரர்கள்.

(100935)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தால் சகலருக்கும்:

# மௌனம் கலைப்போமா?

## கையடக்கத் தொலைபேசியினால் ஏற்படும் விளைவுகளை விளக்குகிறார் கட்டுரையாளர்

**உளவியல் சிறப்புக் கட்டுரை**

சா.சிவயோகன்
உளமருத்துவர்

ஒரு சமூகத்தினுடைய நலனை அளவிடுவதற்குப் பல சுட்டிகளை அவதானிக்க வேண்டும். அந்தச் சமூகத்தினுடைய இயக்கப்பாடு, அங்கு காணப்படுகின்ற பழக்கவழக்கங்கள், அந்த சமூகத்தில் உள்ள மதுபாவனையும் அது தொடர்பான பிரச்சினைகளும், தற்கொலை முயற்சிகள் மற்றும் தற்கொலைகளின் அளவு; குடும்பப் பிரச்சினைகள்; விவாகரத்துகளின் எண்ணிக்கை; பெற்றோரை இழந்த, பெற்றோரால் கைவிடப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை; சட்டவிரோத கர்ப்பங்கள்; கருக்கலைப்பு வீதம்; உடல் ஆரோக்கியச் சுட்டிகள் (பிறப்பின் போதான நிறை, தாய் சிசு மரண வீதம், சராசரி வாழ்க்கைக் காலம்) போன்ற இன்னோரன்ன காரணிகளை அவதானிப்பதன் மூலமே ஒரு சமூகத்தினுடைய நலம் தொடர்பான கணிப்புகளுக்கு வரலாம். அவ்வாறான ஒரு சுட்டியைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

அண்மைக் காலமாக எமது பிரதேசத்தில் உள்ள இளவயதினரில் வீட்டைவிட்டு வெளியேறுதல்; எதிர்பாலாருடன் சேர்ந்து வாழுதல்; கர்ப்பந்தரித்தல்; கைவிடப்படுதல்; தகுதியற்ற கருக்கலைப்பு போன்ற நடவடிக்கைகள் அதிக அளவில் அவதானிக்கப்படுகிறது. வைத்தியசாலைப் பதிவுகளிலும், பொலிஸ் பதிவுகளிலும், பொது அவதானிப்பிலும் இவ்வகைப்பட்ட பிரச்சினைகள் பெருகி வருவதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இளவயதினரில் ஏற்படுகின்ற, ஏற்படக்கூடிய இந்த வகையான நடத்தைகள் பற்றியும், அவற்றைக் கையாளுகின்ற பொழுது, வளர்ந்தவர்களும், சம்பந்தப்பட்ட பல்துறைசார் உத்தியோகத்தர்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சவால்கள் பற்றியும் இந்தக் கட்டுரை பகிர்ந்துகொள்ள விரும்புகின்றது.

அவள் 15 வயதுடைய வளர்ந்த ஒரு பிள்ளை. அவளது முகத்தில் இன்னமும் குழந்தைத்தனமும், குறும்பும் ஒட்டிக் கொண்டிருக்கிறது. பெற்றோர் அரச உத்தியோகத்தர்கள். வீட்டில் ஒரேயொரு பெண்பிள்ளை. குறை பொன்றுமில்லை, நன்றாகப் படிப்பாள். தேவையில்லாத 'சோலி சுரட்டுகளுக்குப்' போகமாட்டாள். திடீரென்று ஒரு நாள் காணாமல் போனாள். பின்பு 'ரெலிபோனில்' தான் இன்னுமொருவருடன் வாழ்வதாகச் சொன்னாள். வீட்டில் இடி விழுந்தது!

பெற்றோர் ஊன் உறக்கம் மறந்தனர். ஓடிபாடித் திரிந்தனர். பலரின் கால்களில் விழுந்து எழும்பினர். இரண்டு மாதங்கள் கழித்துத் தொலைதூரப் பிரதேசமொன்றில் அவளைக் கண்டனர். அவளின் 'அவரையும்' கண்டனர். அந்த அவர் ஏற்கனவே குடித்தனம் செய்து குழந்தைகள் பெற்றவர் என்பதையும் அறிந்தனர். பின்பு வைத்தியசாலையில் தமது மகள் கருவளத்தோடு இருப்பதனையும் தெரிந்து கொண்டனர்.....

எங்களில் பல பேர் எண்ணிக் கொண்டிருப்பதுபோல், இவ்வாறான பிரச்சினைகள் "ஏழை எளியவர்களுக்கும்", "வசதி குறைந்த குடும்பங்களுக்கும்", "தாய் தகப்பன் ஒழுங்காக இல்லாதவர்களுக்கும்" மட்டும் ஏற்படுவன அல்ல. மேலே குறிப்பிட்ட காரணிகள் தத்தமது பங்குகளை வகித்தாலும், இவ்வாறான பிரச்சினைகள் எல்லோருக்கும் ஏற்படக்கூடியன என்பதனை நாம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.

**ஏன் இவ்வாறு நிகழ வேண்டும்?**

பிள்ளைகள் வளரும்பொழுது, வளர்ச்சியின் ஒரு அம்சமாக துணைப்பாலியல்புகளின் விருத்தியும், பாலியல் ஓமோன்களின் செயற்பாடுகளும் செவ்வனவே நடைபெறும். ஓர் உயிரியின் தொடர்ச்சியைப் பேணுவதற்குத் தேவையான இனப்பெருக்க உந்துதல், பாலியல் வேட்கை என்ற வடிவில் ஏற்படும். இந்தப் பருவத்தில் இயல்பாகவே எதிர்ப்பாலார்மீது கவர்ச்சி கூடும். அவர்களைக் காணும்பொழுதும் கதைக்கும்பொழுதும் மனம் பரபரப்படையும். அவர்களுடைய தொடுகைகள் சில வேளைகளில் கிளர்ச்சியைத் தூண்டும். காதல் என்று அழைக்கப்படும் மிகவும் சிக்கலான, குழப்பமான ஒரு விடயம் பற்றி மனம் அக்கறை செலுத்தத் தொடங்கும்.

ஆக, இவ்வாறான உணர்வுகளும், அனுபவங்களும் விருத்தியின் ஒரு படிநிலையாக நிகழ்கின்றன. பல பிள்ளைகள் இந்தப் படிநிலையில் அதிகம் பிரச்சினைகளை எதிர்கொள்ளாது தமது வளர்ச்சியை முன்னெடுத்துச் சென்றாலும், சில பிள்ளைகள் இந்த வகையான 'சுழல்'களுக்குள் அகப்பட்டுப் போகின்றார்கள். உண்மையில் அகப்பட்டுத்தான் போகின்றார்கள் - ஏன் என்றால் அவர்கள் இவ்வாறான உணர்வுகளினதும், உந்துதல்களினதும் தற்காலிகத்தன்மை பற்றி, அவை தாங்கள் வளர்கின்றபொழுது ஏற்பட்டு பின்பு மாற்றமடையக்கூடிய இயல்புகள்தான் என்பது பற்றி உணர்ந்துகொள்வதில்லை.

பிள்ளைகள் தாங்கள் வளர்கின்றபொழுது தங்களுக்கு ஏற்படுகின்ற இவ்வாறான எண்ணங்கள், உந்துதல்கள் பற்றி அறிந்துகொள்வதற்கும், பகிர்ந்துகொள்வதற்குமான வாய்ப்புகளைப் பெரியவர்கள் எவ்வளவு தூரம் கொடுக்கின்றார்கள் என்பது வெளிப்படையாக விடை தெரிந்த ஒரு கேள்வியே. வீட்டிலும் சரி, கல்விச் சாலைகளிலும் சரி இவ்வாறான வாய்ப்புகள் கிடைக்கப் பெறாதவிடத்து அவர்கள் ஒன்றில் அதுபற்றி யாரிடமும் பகிர்ந்துகொள்ளாமல் விடுகின்றார்கள்; அல்லது அவர்கள் அதுபற்றித் தமது ஒத்தவயது நண்பர்களிடம் (அவர்களும் அறிவிலும், அனுபவத்திலும் முதிர்ச்சி பெறாதவர்கள் என்று உணராது) கதைத்து, பகிர்ந்து, ஆலோசனை பெறுகிறார்கள். பல சந்தர்ப்பங்களில் இவ்வாறான ஆலோசனை வழங்கும் ஒத்தவயது நண்பர்களும், தமது வயது காரணமாக ஏற்படும் 'த்ரில்', 'புதியது புனைதல்', 'பரீட்சித்துப்பார்த்தல்' போன்ற இயல்புகளால் ஆட்கொள்ளப்பட்டு, நடைமுறையில் பிரயோசனப்படாத தவறான ஆலோசனைகளை வழங்கி விடுகிறார்கள்.

*"என்ரை ∴பிரெண்ட் என்ரை நம்பரை தன்ரை ∴பிரெண்டுக்கால அவருக்குக் கொடுத்தவ... அவரோ... அவர் மேசன் வேலை செய்கிறவர்.......... இருபத்தியொரு வயது.......... பிறகு அவர் என்னோட கதைக்கத் தொடங்கினவர்......... 'போன்' அண்ணா வெளிநாட்டில் இருந்து அனுப்பி வைச்சவர்......... பிறகு நாங்கள் சந்திச்சனாங்கள்.......... வீட்டை விட்டுட்டுப் போனது ஏனெண்டால் அம்மாவை அவரைச் செய்துவைக்க மாட்டினம்........ அவை படிக்கிற நேரத்தில் உதுகள் தேவையில்லை. எண்டவை.......... நான் முதல்ல சொன்ன ∴பிரண்ட் சொன்னா... நீங்கள் எங்கேயாவது போய் இருந்திட்டு வந்தால் வீட்டை சேர்ப்பினம் எண்டு...... வீட்டை சேர்க்கேல்லை........ அம்மா 'பொலிசில என்ரி' போட்டுட்டா........ அவரை உள்ளுக்கு வைச்சிருக்கினம்............ நானோ? என்னை அம்மா வீட்டை கூட்டிக்கொண்டு போகமாட்டாவாம்....... ஓ! எனக்குப் படிக்க நல்ல விருப்பம்".*

இந்தப் பதில்கள் பாடசாலைக்குச் செல்லுகின்ற ஒரு பிள்ளையினால் கூறப்பட்டவை. இடையில் கேட்கப்பட்ட கேள்விகளை ஊகிப்பது கஷ்டமாக இருக்காது என எண்ணுகிறேன். இங்கே குறிப்பிடப்பட்ட பதில்களைக் கூர்ந்து அவதானித்தால் அந்தப் பிள்ளை தனது நிலைமையின் தார்ப்பரியத்தைக்கூடப் புரிந்துகொள்ளாமல் பதிலளித்திருப்பது புரியும். அதுதான் முக்கியம். அதுதான் இந்த வயதினருடைய, கட்டிளமைப் பருவத்தினருடைய இயல்பு. அவர்கள் வளர்ந்தவர்கள் போல நடந்துகொள்ள முயன்றாலும், அவர்கள் சிறு பிள்ளைகள்தான். அவர்களின் சிந்தனையில் பட்டறிவோ, அனுபவ ஞானமோ இருக்காது.

இவ்வாறான இளம்பராயத்துத் தொடர்புகள் ஏற்படுவதற்கும், பின்பு அது வளர்ந்து, நெறி பிறழ்ந்து போவதற்கும் 'மொபைல் போன்' எனப்படும் செல்லிடத் தொலைபேசிகள் பெரும் பங்கு வகிக்கின்றன. எமது பிரதேசத்தில் ஏற்பட்ட சடுதியான சூழல் மாற்றத்தினால் மிக அதிகளவான செல்லிடத் தொலைபேசிகள் பாவனைக்கு வந்துவிட்டன. இவ்வாறான ஒரு வசதியைத் திடீரெனப் பெற்றுவிட்ட ஒரு சமூகம், குறிப்பாக இளைய வயதினர், அதனைத் துர்ப்பாவனை செய்வதிலும் அக்கறை செலுத்துகிறார்கள். தொலைபேசிகளினால் ஏற்படும் தொடர்புகள், தொலைபேசியில் கதைக்கப்படும் விடயங்கள் எல்லாம் மிகவும் அந்தரங்கமாகப் பேணப்படக்கூடிய ஒன்றாக இருப்பதனால், அவை அதிகம் வெளித் தெரிவதில்லை. தொலைபேசியில் கதைக்கும்பொழுது, அது மிக நெருக்கமான தொடர்பாடலாக அமைந்திருப்பதனால் அது சிலவேளைகளில் இரகசியமானதாக, போதையேற்படுத்துவதாக அமைந்துவிடலாம். முகம் பார்த்துக் கதைக்கும் பொழுது ஏற்படுகின்ற தயக்கங்கள், கூச்சங்கள் போன்ற எதுவும் தொலைபேசியில் கதைக்கும்பொழுது இல்லாதபடியால், எல்லைமீறிய உரையாடல்களுக்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. மேலும் தொலைபேசி மூலமான உணர்ச்சி மயமான தொடர்பாடல்கள் உணர்வுகளைத் தூண்டுவதோடு, நாளடைவில் தொலைபேசி உரையாடலுக்கு அடிமையாகிப் போகவும் வழிவகுக்கின்றது. ஆண், பெண் வேறுபாடின்றி, வயது வேறுபாடின்றி, இவ்வாறு தொலைபேசி மூலம் கதைப்பதற்கு அடிமையாகிப்போன திருமணமாகாத, திருமணமான பலரை நான் சந்திக்க நேர்ந்தது.

*"எந்த நேரமும் 'ரெலிபோன்'தான். சாப்பிடவும் வாறாள் இல்லை. 'ரூம்' ஐப் பூட்டிப் போட்டு சாமம் சாமமாய்க் கதைக்கிறாள். பிறகு விடிய விடிய நித்திரை கொள்ளுறாள். பள்ளிக்கூடமும் ஒழுங்கில்லை. படிப்பும் இல்லை..."*

இது ஓர் அம்மாவின், இல்லை பல அம்மாக்களின் ஆதங்கம். ஆனால் அந்த அவளுக்கு அல்லது அவர்களுக்கு யார் செல்லிடத் தொலைபேசி வாங்கிக் கொடுத்தது? அதற்கான தேவை என்ன? போன்ற கேள்விகளுக்கு அந்த அம்மாக்களிடம் தகுந்த பதில்கள் இல்லை. ஒரு விடயம் சிறிய வயதிலிருந்தே, காலம் காலமாகப் பாவனையிலிருக்கும்போது அதனுடைய பாவனை சம்பந்தமான சரியான அளவுகோல்கள் இருக்கும். ஆனால் காணாத ஒன்றைத் திடீரெனக் காணும் போது அதனைக் கட்டுப்பாடாகப் பாவிக்கும் தன்மை குறைவாகவே இருக்கும். தொலைபேசி மாத்திரமல்ல, ஏனைய எல்லாவிதமான தொழில்நுட்ப வளர்ச்சிகளுடன் தொடர்பான பாவனைகளுக்கும், துர்ப்பாவனைகளுக்கும் இது பொருந்தும்.

மேலே இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட உதாரணத்தில் தெரிகின்ற இன்னுமொரு விடயம் இந்த வகைப்பட்ட பிரச்சினைகளைப் பெற்றோர்கள் எவ்வாறு கையாளுகின்றார்கள் என்பது. *"உந்த வயசிலை உனக்கு உது கேட்குதோ?"; "உது பற்றிக் கதைக்காதே. கொப்பர் அறிஞ்சால் வெட்டிப் போடுவார்"; "படிக்கிற நேரம் படிக்கோணும் வேறை சிந்தனை வரக்கூடாது"; "உமக்குப் பள்ளிக்கூடத்தை நிற்பாட்டி விட்டால்தான் சரி"* என்று பெற்றோர் பொரிந்து தள்ளுகின்றபொழுது, பிள்ளைகளுக்குத் தமது பெற்றோருடன் தொடர்புகொள்ளும் வாய்ப்புகளும் வாயில்களும் அடைபட்டுப் போகின்றன. ஆக, ஒரு பிரச்சினையை (இளவயதில் இன்னுமொருவருடன் 'ஓடிப்போதல்' என்பதனை ஒரு பிரச்சனையாக ஏற்றுக்கொண்டால்...) வருமுன் காக்கின்ற வாய்ப்புகள் பெற்றோர்களின் கண்டிப்பான அணுகுமுறைகளால் தவறவிடப்படுகின்றன.

இவ்வாறான வீட்டுச் சூழலில் வளருகின்ற ஒரு பிள்ளை தனக்கு ஏற்பட்டிருக்கின்ற சிக்கலான, குழப்பமான ஒரு உணர்வுக்கு யாரிடம் ஆலோசனை கேட்க முடியும். எமது பாடசாலைகளில் அந்த வாய்ப்புகளுக்கான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டிருப்பினும் அவை எவ்வளவு தூரம் திறன்பட அமுல்படுத்தப்படுகின்றன? அவற்றில் ஈடுபடும் ஆசிரியர்களும் தமது வழமையான, காலங்காலமாக ஊறி வந்த சிந்தனைப் போக்கிலிருந்து எவ்வளவு தூரம் மாறியிருக்கிறார்கள் என்பது நோக்கப்பட வேண்டியது.

"வாரும். எங்கை கிடந்திட்டு வாறீர்? நான் நினைச்சன் நீரும் உம்மடை ∴பிரண்ட் போல ஓடிட்டீர் எண்டு!... கதைக்க வேண்டாம்... எனக்கு உந்த விளக்கம் ஒண்டும் தேவையில்லை... நீர் கிளாசுக்கு வெளியாலே போம்! கெற் அவுற்!!".

இது ஒரு உயர்தர வகுப்பு மாணவிக்கு, அவரைக் கற்பிக்கும் ஆசிரியரால் கூறப்பட்ட அல்லது சொரியப்பட்ட வாய் (வசை) மொழிகள். அந்த ஆசிரியைக்கு அவ்வளவு தூரம் கோபம் ஏற்படும்படியாக இந்தப் பிள்ளை என்ன செய்தது என்பது ஆராயப்படவேண்டியது. ஆனால் துரதிஷ்டவசமாக அந்த ஆசிரியை உளவளத்துணை கற்று, அதில் ஈடுபடுகின்ற ஒருவர்; நல்லவர்; அமைதியானவர். ஆயினும் அவவின் வகுப்பில் நடந்த ஒரு 'ஓடிப்போதல்' நிகழ்வால் பாதிக்கப்பட்டுப் பொரிந்து தள்ளியமையானது, அவருடைய மனப்பாங்கில் இன்னமும் இருக்கின்ற சுய விருப்பு வெறுப்புக்களையும், முற்கற்பிதங்களையுமே காட்டுகின்றது.

வீட்டிலும் பாடசாலையிலும் இவ்வாறான விடயங்கள் பிரச்சினைகள் தொடர்பாகக் கதைக்க முடியாது புறமொதுக்கப்படும் பிள்ளைகள் தாங்கள் நினைத்தபடி, தமக்குத் தெரிந்தபடி நடந்துகொள்ளத் தலைப்படுகிறார்கள். பின்பு அதன் விளைவுகளை எதிர்கொள்ளத் திராணியற்று, பக்கபலமின்றிச் சிதைந்து போகிறார்கள்.

பல சமயங்களில், பாதிக்கப்படும் பெண்பிள்ளைகள் தங்களுக்கு என்ன நடக்கின்றது என்பதனை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ளாது, அதனை இரகசியமாகக் காக்க விரும்புவதனைக் காண்கிறோம். இவ்வாறான வேளைகளில், ஏற்படுகின்ற பாதிப்புகள் உடனடியாக வெளியே வராது, அவை மேலும் மேலும் அதிகளவு பாதிப்புகளை ஏற்படுத்திக்கொண்டுபோய், இறுதியில் சீர்செய்யப்பட முடியாத நிலைமைகளுக்கு இட்டுச்செல்கிறது.

மற்றையது, இந்த வயதுடைய பிள்ளைகள் சிலரில் உறுதியாக இருக்கும். தேவைப்படும் சந்தர்ப்பங்களில் "இல்லை" "முடியாது" என்று சொல்லுகின்ற இயல்புகள் வளர்ச்சியடையாது இருக்கலாம். இவர்கள் "முகத்துக் கஞ்சி"; "பாவம் பார்த்து"; "மறுக்க முடியாமல்"; "வேறு வழியின்றி" சில விடயங்களுக்கு ஒத்துக்கொள்வார்கள். நண்பர்களின் வற்புறுத்தலாலோ; தெரிந்தவர்களின் 'ஆலோசனைகளின்' பேரிலோ இவர்கள் தமது வயதிற்கும் விருத்திக்கும் பொருத்தமில்லாத சில காரியங்களில் ஈடுபடலாம். மேலும் இவ்வாறான உறுதியான முடிவுகளை எடுக்கும் திறன் அற்றோர் (Assertive skills குறைந்தோர்) இலகுவில் மற்றவர்களால் தவறாக வழிநடத்தப்படுகின்ற, 'எடுபடுகின்ற' ஆபத்துகளையும் கொண்டிருக்கின்றார்கள்.

நாங்கள் சந்திக்கின்ற பல உதாரணங்களில், உள்ள இளம் பிள்ளைகள் தமக்கு ஏற்கனவே உறவான, தெரிந்த ஒருவருடனேயே இவ்வாறு நடந்துகொள்வதனை அவதானிக்கின்றோம். இவ்வாறு தெரிந்த, நெருங்கிய அல்லது தூரத்து உறவினர்களோடு பழக விடும் பொழுது, அந்த உறவின் எல்லைகள் சம்பந்தமாக எல்லோருமே விழிப்புடன் இருத்தல் நல்லது.

இவ்வாறு ஏற்படுகின்ற பெரும்பாலான நிலைமைகளோடு தொடர்புபட்டிருக்கும் ஆண்கள், சிறுவர் என்ற பராயம் கடந்தவர்களாகவே, 'வயது வந்தவர்களாகவே' காணப்படுகின்றனர். ஒருவகையில் பார்த்தால் பாதிக்கப்படும் பெண்பிள்ளைகள் தங்களைவிட 'விவரம் தெரிந்த', வயது முதிர்ந்த ஆண்களால் ஏமாற்றப்படுவதாகவே, துஷ்பிரயோகம் செய்யப்படுவதாகவே கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த ஆண்களில் ஏற்பட்டிருக்கும் பாலியல் இச்சைக்கு மேலாக அவர்கள் எந்தவிதத்திலும் பொறுப்பானவர்களாக நடந்துகொள்வதில்லை என்பதுவே எமது அவதானம்.

இந்த ஆண்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் (நண்பர்கள், குடும்பத்தவர்கள்) பெண்பிள்ளையொருத்தியை வீட்டைவிட்டு வெளியே கொண்டு வருவதனை ஒரு பெருமையாக, 'வீரமாக' நினைக்கிறார்கள். "அவன் கெட்டிக்காரன்" "மடக்கிட்டான்" "தூக்கி வந்திட்டான்" போன்ற வார்த்தைப் பிரயோகங்களுக்குப் பின்னால் தொனிக்கின்ற பெருமை எல்லாரும் அறிந்ததே. பண்டைக் காலத்தில் இருந்தே பெண்டிர் கவருதல் வீரத்தின் சின்னமாகக் கருதப்படுகின்றது என்னும் மானுடவியல் அவதானிப்பிற்கும் மேலாக இது எவ்வளவு சிறுமையானது? பொறுப்பற்றது? எனச் சிந்தித்துப் பார்த்தல் தேவையானது.

**பின்னர் என்ன நிகழ்கின்றது?**

ஓடிப்போதல், உறவுகொள்ளுதல் என்பவை உச்சக்கட்டம் என்றால், அதற்குப் பின்னாலான எதிர் உச்சக்கட்ட நிகழ்வுகளும் இருக்கின்றன. பல சந்தர்ப்பங்களில் ஓடிப்போதல் என்பதுவும் உறவுகொள்ளுதல் என்பதுவும் தமது பிணைப்பை நிரந்தரமாக்கும் ஒரு முயற்சியாகவே கருதப்பட்டு நிறை வேற்றப்படுகிறது. நாம் சந்தித்த பெண்பிள்ளைகளில் எவருமே "சும்மா முசுப்பாத்திக் காக", "அனுபவிச்சுப் பாப்பம்", "என்ன இருக்கெண்டு பாப்பம்" என்பது போன்ற பதில்களைக் கூறவில்லை. ஓடிப்போன சந்தர்ப்பத்தில் அல்லது ஓடாத சந்தர்ப்பத்திலும் உறவுகொள்வதன் மூலம் தமக்கும் தம்முடன் தொடர்புடைய ஆண்களுக்குமான நெருக்கத்தையும், பிணைப்பையும் அதிகரிக்கும் நோக்கத்திலும், இவ்வாறான எதுவிதமான நோக்கங்களும் இன்றி அந்த நேரத்து அறிவு மயக்க நிலையிலும் இவர்கள் உறவு கொள்கிறார்கள்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**16.03.1993**

* பூநகரிப் பாதை போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படுவது தொடர்பாக ஐ.நா தூதரக அதிகாரிகள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் தரப்புக்களுக்கு இடையே இடம் பெறும் பேச்சுக்கள் குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட உள்ளதாகத் தெரிவிப்பு.

* அம்பாறை மாவட்டத்தில் உள்ள 24 அகதிமுகாங்களும் ''திறந்த வெளிச் சிறைகள்'' போன்றே உள்ளதாக தமிழ் அகதிகள் ஒன்றியம் ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு மகஜர் அனுப்பி வைப்பு.

**17.03.1993**

* எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கும் ஜூன் மாதத்திற்கும் இடையில் ஆயுட்காலம் முடிவடைய இருந்த - தென்பகுதியில் உள்ள - 7 மாகாண சபைகள் நேற்று ஒரே சமயத்தில் கலைக்கப்பட்டதாக அறிவிப்பு.

* மாகாண சபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் திடீர் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை அரசு நடத்தக் கூடும் என ஊகம் தெரிவிப்பு.

**18.03.1993**

* மாகாண சபைகள் நடைமுறையை அரசு முற்றாக ஒழித்துவிடுவதற்கு முயற்சிக்கலாம் என அரசியல் அவதானிகள் ஊகம் தெரிவிப்பு.

* இந்தியாவின் பம்பாய் நகரில் குண்டு வெடிப்பு இடம் பெற்று 5 நாள்கள் கழிந்த நிலையில் நேற்று கல்கத்தா நகரிலும் இடம் பெற்ற குண்டுவெடிப்புக்களில் 60 பொது மக்கள் பலியானதாகத் தெரிவிப்பு.

**19.03.1993**

* கடற்படையின் பலத்தை அதிகரிக்கும் நோக்கில் புதிதாக நிரந்தர ரிசேர்வ் பிரிவு ஒன்றை உருவாக்க அரசு நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிப்பு.

* நாடாளுமன்றத் தெரிவுக்குழு சமர்ப்பித்த இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான இடைக்கால அறிக்கைக்கு பதில் அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்காக கொழும்பில் உள்ள 7 தமிழ்க் கட்சிகள் கூடிப் பேசவுள்ளதாகத் தெரிவிப்பு.

**20.03.1993**

* விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தத் திட்டமிட்டு வருவதாக இராணுவத் தரப்பு சந்தேகிப்பதாக ''வெரித்தாஸ்'' வானொலி தெரிவிப்பு.

* காங்கேசன்துறையில் அமைந்துள்ள ''லங்கா சிமெந்து'' நிறுவனத்தின் தொழிற்சாலையை இயங்கவைப்பதற்கு கொழும்பு நிர்வாகம் முயற்சித்து வருவதாகத் தெரிவிப்பு.

**21.03.1993**

* யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு தொண்டு நிர்வனங்களின் பிரதிநிதிகள் நேற்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதாகத் தெரிவிப்பு.

* இலங்கைப் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நோர்வே அரசாங்கம் தனது முழு ஆதரவையும் வழங்கத் தயாராக உள்ளதாக றெட்பானா அமைப்பின் இலங்கைக்கான உதவி வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு.

**22.03.1993**

* இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இருந்து சுதந்திரக்கட்சி விலகிக் கொள்ளும் என நம்பப்படுவதாகத் தெரிவிப்பு.

* வெளிநாடுகளிலிருந்து இலங்கை அரசு கொள்வனவு செய்த விமானங்கள் மற்றும் ஹெலிகளில் பல கொழும்புக்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

**23.03.1993**

* நாடாளுமன்றத் தெரிவுக்குழு சமர்ப்பிக்கும் ஆலோசனைகளை நுணுக்கமாக ஆராய்ந்து இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வை அரசாங்கமே வகுக்கும் என ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு.

* வடக்கு - கிழக்கு மாகாணம் தொடர்ந்தும் இணைக்கப்பட்டே இருக்க வேண்டுமா என்பது குறித்து சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த அரசு திட்டமிட்டுள்ளதாக எதிர்க்கட்சி வடாரங்கள் தெரிவிப்பு.

**24.03.1993**

* சங்குப்பிட்டி - பூநகரிப் பாதையை திறக்க அரசு முடிவு செய்யுமானால் அது படையினரின் தந்திரோபாயங்களைப் பாதிப்பதாக அமையும் என சிங்களவர் பாதுகாப்பு அமைப்பின் தலைவரான காமினி ஜெயசூரிய கருத்துத் தெரிவிப்பு.

* அவசரகாலச் சட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் சந்தேக நபர்களை கைது செய்வதை நிறுத்தும் படி சட்டமா அதிபர் திலக் மாரம்பன பொலிஸ் திணைக்களத்துக்குப் பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிவிப்பு.

**25.03.1993**

* பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக எயர் வைஸ் மார்ஷல் வால்டர் பெர்னாண்டே ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

* விசாரணைகள் எதுவும் இன்றி பூஸா தடுப்பு முகாமில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 1500 கைதிகள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்துக்கு முன்னறிவித்தல் விடுத்துள்ளதாகத் தெரிவிப்பு.

**26.03.1993**

* இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்தின ஆனையிறவு பூநகரிப் பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டதாகத் தெரிவிப்பு.

* கொழும்பில் பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி பெற்று வடபகுதிக்கு புறப்பட்ட பி.பி.ஸி கொழும்புச் செய்தியாளர் இடைநடுவில் வைத்து இராணுவத்தினரால் கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டதாகத் தெரிவிப்பு.

**27.03.1993**

* நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபார்சை அடிப்படையாக வைத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகான அரசு புதிய தீர்வுத் திட்டமொன்றைத் தயாரித்து மக்களின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கும் என ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு.

* வவுனியா மாவட்டத்தில் படையினர் புதிய இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிப்பு.

**28.03.1993**

* வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடந்த 24 மணி நேரத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் 12 படையினர் உயிரிழந்துள்ளதாகத் கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிப்பு.

* வாசுதேவ நாணயக்கார தலைமையில் உருவாக்கப்பட்ட மக்கள் விடுதலை இயக்கம் என்ற அமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய தேர்தல் ஆணையாளர் மறுத்து விட்டதாகத் தெரிவிப்பு.

**29.03.1993**

* மீண்டும் யாழ்ப்பாணம் செல்வதற்கு விடுதலைப் புலிகளிடமும் அரசிடமும் அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ அனுமதி கோரியிருப்பதாகத் தெரிவிப்பு.

* வடப்குதியில் இலங்கை அரச படையினர் கடந்த இரு வாரங்களாக குடியிருப்பு பகுதிகள் மீது பரவலான விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தி வருவதாகத் தெரிவிப்பு.

**30.03.1993**

* பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக யாழ். மாணவர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு மாணவர்களுக்குச் சார்பாக தீர்ப்பு வழங்கியுள்ளதாகத் தெரிவிப்பு.

**31.03.1993**

* வவுனியா - செட்டிகுளம் பகுதியில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களில் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.

# வீதியில் தரித்து நிற்கும் வாகனங்கள்; போக்குவரத்துக்கும் பெரும் இடையூறு

யாழ்ப்பாணம், ஜூலை 28

மானிப்பாய் வீதியின் யாழ்.ஐந்து சந்திப் பகுதியிலும் இரு மருங்கிலும் வாகனங்களை நிறுத்தி வைப்பதனால் அவ் வீதிகளூடான போக்குவரத்தில் இடையூறு ஏற்படுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஐந்து சந்திப் பகுதியில் அமைந்துள்ள பள்ளிவாசலுக்கு இருமருங்கிலும் வாகனங்கள் அதிகளவில் நிறுத்தப்படுகின்றன. யாழ்ப்பாணத்துக்கு வியாபாரம் செய்ய வரும் வியாபாரிகள் அவ் வீதிப்பகுதியிலேயே பெருமளவில் தங்குவதனாலேயே அவர்களின் வாகனங்கள் இப்பகுதியில் தரித்து நிற்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு, பழைய இரும்புக் கழிவுகள் மற்றும் 'பிளாஸ்ரிக்' பொருள்களும் இந்த வீதியில் நிறைந்து காணப்படுவதால் இதை ஏற்றிச் செல்வதற்கென பெரிய பெரிய வாகனங்கள் நிற்பதனாலும் இதனூடாகப் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. அத்துடன், காலை, மாலை வேளைகளில் போக்குவரத்து அதிகமாகக் காணப்படுவதனால் குறித்த வீதியில் வாகனங்கள் விபத்துக்கு உள்ளாக வேண்டிய நிலையும் ஏற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

(எ-314)

# இப்படியும் ஒரு தபாலகம்!

பண்டத்தரிப்பில் இயங்கிவருகின்ற தபால் நிலையம் அடிப்படை வசதிகள் எதுவுமின்றிச் செயற்படுவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த தபாற்கந்தோர் இயங்கி வருகின்ற தனியாருக்கு சொந்தமான கட்டடத்தின் கூரைமரம் மிகவும் பழுதடைந்து முறிந்து விழும் நிலையில் காணப்படுகின்றது. மழைகாலங்களில் கட்டடத்தினுள் மழை நீர் சிந்துவதாகவும் மலசலகூடங்களில் தண்ணீர் உட்புகுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பண்டத்தரிப்பில் புதிய தபாலகத்தைக் கட்டுவதற்கான காணி ஒன்று பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள போதிலும், கட்டடத்தை அமைப்பதற்கான எந்தவித நடவடிக்கைகளும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(எ-318)

Your Future
STUDY in UK
UKRAINE, NEWZELAND, INDIA, CYPRUS
INTAKES @ August, September, October

- MBBS, MS, MD [Ukraine, India]
- COMPUTING & IT
- BUSINESS & MANAGEMENT
- ACCOUNTING & FINANCE
- TRAVEL & TOURISAM
- DESIGNING & ARCHITECTURE
- ENGINEERING
- HOTEL MANAGEMENT
- LANGUAGE & EDUCATION



Also Handling :
* Tourist Visa
* Visit Visa
* Dependent Visa
* Administrative Review
* Re-Apply

Our Services for Students :
* Visa Consulting
* Career Advice
* Scholarship
* Accommodation
* Air Ticket
* Airport Pick-Up
* Part Time Jobs

Note
Conditional Offer and CAS Statement Within 5 Days

Minimum Entry Qualification : O/L or Equivalent

SPONSOR களுக்கான ஆலோசனைகள் வழங்கப்படும்

SIEG
SRIRAM INTERNATIONAL EDUCATION GROUP
111 / 2, Brown Road, Kokuvil East, Jaffna.
Tel - 021- 2221875
Head Office : 169, George R De Silva Mawatha, Kotahena, Colombo-13.
Tel: 011-2434989 Fax: 011-2434767
After Office Hours & Sundays Please Contact - 077 3502612

கொவிசெத
உத்தியோகப்பூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 765
சீட்டிழுப்பு திகதி 26.07.2010

எழுத்து: K
வெற்றி இலக்கங்கள்: 19 32 58 65

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 20,182,309.60 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 20,000/= | 15 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 2,000/= | 301 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000/= | 591 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 100/= | 14960 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரு. 40/= | 8557 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரு. 20/= | 212404 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரு. 20/= | 33415 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,247,660.00

அடுந்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 20,644,400.00

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்புட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் ஆற்றுமணல், கிரவல் விநியோகம்; கிராம அபிவிருத்திச் சங்கங்களிடம் ஒப்படைப்பு

## கிடைக்கும் நிதி அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும்

கிளிநொச்சி , ஜூலை 28

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆற்று மணல், கிரவல் என்பவற்றை ஏற்றுவது தொடர்பாகப் புதிய நடை முறையொன்று அமுல்படுத்தப்படுகிறது.

இதுதொடர்பாக கிளிநொச்சி அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஆற்றுமணல், கிரவல் என்பவற்றை ஏற்றுவது தொடர்பான பணிக்கு அப்பகுதியின் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பொறுப்பாக இருக்கும்.

இச்சங்கங்கள் புவிச்சரிதவியல் திணைக்களத்தில் இவற்றின் விநியோகம் தொடர்பான உத்தரவுப் பத்திரத்தினைப் பெறுவதுடன், சுற்றாடல் அதிகார சபையின் பிரமாணங்கள், நியமங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். அத்துடன் செயற்கையான அழிவுகள் இவற்றின் அகழ்வுகள் மூலம் ஏற்படுவது தவிர்க்கப் பட வேண்டும்.

பிரதேச செயலக அனுமதிப்பத்திரங்களுக்கு மட்டுமே மணல் விநியோகிக் கப்படுவதுடன் கிளிநொச்சி மாவட்டத் தேவைகளுக்கு முன்னுரிமையளிக்கப் படுதல் வேண்டும் எனவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

மணலை ஏதாவது ஒரு இடத்தில் வைத்து விற்பனை செய்வதுடன் இதன் மூலம் பிரதேச இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுவதுடன் இதன் மூலம் கிடைக்கும் இலாபமானது பிரதேச அபிவிருத்திக்குப் பயன்படுத் தப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

அத்துடன் சட்டவிரோத அகழ்வுகள் தடுக்கப்படுவதுடன் அவ்வாறான அகழ் வுகளில் ஈடுபடுபவர்களையும், வாகனங் களையும் பொலிசாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-405)

## கல்மடுப் பகுதியில் பொதுசன உதவி

கிளிநொச்சி, ஜூலை 28

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் அலுவலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு வழங்கப் பட்டு வருகின்றது.

இக்கொடுப்பனவு எதிர்வரும் சனிக் கிழமையுடன் நிறுத்தப்படவுள்ளதால் விரைவாக அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதற்கான அட்டைகளைப் பெறாதவர் கள் கிராம அலுவலர் அலுவலகத்தில் அட்டையினைப் பெற்று இராமநாதபுரம் உபதபால் நிலையத்தில் உதவிப் பணக் கொடுப்பனவைப் பெறமுடியும். 200 இற் கும் மேற்பட்டோருக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இவ்வுதவிப் பண அட்டைகளைப் புதுப் பிக்காதவர்கள் உரிய படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி அட்டையுடன் கிராம அலுவலரிடம் சமர்ப்பித்து புதுப்பித்துக் கொள்ளு மாறும் கேட்கப்படுகிறது. (ஐ-405)

# கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயக் கடன் அறிமுகம்

கிளிநொச்சி , ஜூலை 28

கிளிநொச்சி கொமர்ஷல் வங்கியில் விவசாயக்கடன் திட்டம் ஒன்று நடை முறைப்படுத்தப்பட்டு வருவதாக அதன் முகாமையாளர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின்படி குறைந்த வட்டி வீதத்தில் ஆகக் கூடுதலாக 180,000 ரூபா வரையில் கடன் வழங்கப்பட்டு வருகின்றது. ஒரு ஏக்கருக்கு 18,000 ரூபா வீதம் பத்து ஏக்கர் வரையான பயிற் செய்கைக்கு இக்கடன் வழங்கப்பட்டு வருகின்றது.

இக்கடனைப் பெற விரும்பும் விவ சாயிகள் தமது பிரதேச விவசாய அமைப் புக்களூடாக கமநல சேவைத்திணைக் கள உறுதிப்படுத்தலுடன் தமது கடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் பட் சத்தில் ஒருவாரகாலத்தினுள் இக்கடனைப் பெறமுடியும் எனக் கூறப்படுகின்றது.

அத்துடன் விவசாய இயந்திரங்கள், உபகரணங்களை குத்தகை அடிப்படை யில் கொள்வனவு செய்தவற்கான திட் டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-405)

# வெற்றிலை வாணிபம் மீண்டும் வழமைக்குத் திரும்பியது

கிளிநொச்சி , ஜூலை 28

கிளிநொச்சி பொதுச்சந்தையின் வெற்றிலை வாணிபக் கடைகளின் வியா பார நடவடிக்கைகள் வழமைக்குத் திரும் பியுள்ளன.

கடந்த 22 ஆம் திகதி திடீரென கரைச் சிப் பிரதேச சபையினரால் சந்தையில் இயங்கிவந்த ஐந்து வெற்றிலைக் கடை களை மூடுமாறு கடிதம் அனுப்பப் பட்டதையடுத்து அனைத்து வெற்றிலைக் கடைகளும் பூட்டப்பட்டிருந்தன.

வெற்றிலை தவிர்ந்த ஏனைய பொருள்கள் விற்கப்படுவதைக் காரணம் காட்டியே இவ்வாறு கடிதம் அனுப்பப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து வெற்றிலை வாணிப உரிமையாளர்களுக்கும் பிரதேச சபை நிர்வாகத்தினருக்கும் இடையில் இடம் பெற்ற கலந்துரையாடலை அடுத்து கடந்த 23 ஆம் திகதி அனைத்துக் கடைகளும் திறக்கப்பட்டு வாணிபத்தில் ஈடுபட்டன.

இவ்விடயம் குறித்து யாழ்ப்பாண மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீ தரன் வெற்றிலைக் கடை உரிமையாளர் களுடனும் கரைச்சிப் பிரதேசசபை நிர்வா கத்தினருடனும் கலந் துரையாடியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-405)

# மன்னார் நகரில் கடைகளில் உணவுப் பண்டங்களின் விலை உயர்வு

மன்னார் , ஜூலை 28

மன்னார் நகரில் சில தேநீர் விடுதி களில் அதிகரித்த விலைகளில் உணவுப் பண்டங்கள் விற்கப்படுவதாகப் பொது மக்கள் பெரிதும் புகார் தெரிவிக்கின்றனர்.

இவைகளைத் தட்டிக் கேட்போர் எவரு மில்லையாவென இவர்கள் அங்கலாய்க் கின்றனர்.

இங்கு கோழி இறைச்சிப் பிரியாணி ஒரு 'பிளேட்' ரூபா 400 வரையிலும், மாட்டிறைச்சி ஒரு பார்சல் 200 ரூபா வரை யிலும், மீன் பார்சல் ஒன்று 150 ரூபாவரை யிலும், மரக்கறிப் பார்சல் ஒன்று 125 ரூபா வரையிலும் விற்கப்படுகின்றன.

அதேபோல் தோசை ஒன்று 30 ரூபா வரையிலும், மசாலாத் தோசை 100 ரூபா வரையிலும், இட்லி, வடை என்பன 20 ரூபா வரையிலும், பால் தேநீர் 30 ரூபா வரையிலும், கட்லிஸ், கட்லட் என்பவை 30 ரூபா வரையிலும், கொத்துரொட்டி ஒரு பிளேட் 175 ரூபா வரையிலும் விற்கப்படு கின்றன.

சென்ற வாரம் மன்னாருக்குத் திடீர் விஜயம் மேற் கொண்ட பாவனையாளர் அதிகார சபையினர் தங்கியிருந்த இரு தினங்களிலும் இந்த உணவு விடுதிகளுக்கு விஜயம் செய்யாமை பெரிதும் ஆச்சரிய மளிக்கின்றது. (ஐ-80)

# கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்தோருக்குப் பதிவுகள்

கிளிநொச்சி , ஜூலை 28

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவுகளில் மீளக் குடியமர்ந்த அனைவருக்கும் நிரந்தரப் பதிவுகள் கிராம சேவையாளர் பிரிவு ரீதி யாக எதிர்வரும் 4 ஆம் திகதி முதல் மேற் கொள்ளப்படவிருக்கின்றன.

மீளக் குடியமர்ந்தவர்கள் தங்களின் தற்காலிக பதிவை நீக்கம் செய்து நிரந்தர பதிவுகளை மேற்கொள்ளுமாறு பதில் அரச அதிபர் இமெல்டா சுகுமார் கேட் டுள்ளார்.

கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட உரிய இடைத்தங்கல் முகாம்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக பதிவு இடம் பெறும் திகதிகள் வருமாறு:-

| வருகைதர வேண்டிய திகதி | பதியப்படவுள்ள கிராம அலுவலர் பிரிவு |
|---|---|
| 04.08.2010 | உதயநகர் கிழக்கு, உதயநகர் மேற்கு,அம்பாள் குளம், செல்வா நகர், ஆனந்தபுரம், விவேகானந்தநகர், தொண்டமான்நகர், கிருஷ்ண புரம். |
| 08.08.2010 | வட்டக்கச்சி, மாவடியம்மன், மாயவனூர், இராமநாதபுரம், சிவிக்சென்ரர். |
| 12.08.2010 | மருதநகர், பன்னங்கண்டி, கிளிநகர், இரத்தினபுரம், கனகாம்பிகைக் குளம், திருவையாறு. |
| 16.08.2010 | திருவையாறு மேற்கு,பாரதிபுரம், மலையாளபுரம், பொன்னகர், ஊற்றுப்புலம்,புதுமுறிப்பு. |
| 20.08.2010 | ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம்,கோணாவில், அக்கராயன்குளம், ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம். |
| 24.08.2010 | உருத்திரபுரம் வடக்கு, உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம் மேற்கு, சிவநகர், கனகபுரம், ஜெயந்திநகர். |
| 30.08.2010 | திருநகர் மேற்கு, திருநகர் வடக்கு, கணேசபுரம், பெரியபரந்தன், அம்பாள்நகர். |




# முல்லை சிக்கனச் சங்கத்தின் வைப்புகளின் மீளப்பெறும் செயற்பாடுகள் ஆரம்பம்

முல்லைத்தீவு , ஜூலை 28

முல்லை மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாச திட்டத்தின் கீழ் வைப்புக்களை மீளப்பெறுதல், கடன் அறவீடுகள் போன்றன துரிதகதியில் மேற் கொள்ளப்படுகின்றன.

இந்தச் சேவைத் திட்டத்தின் கீழ் வைப் புச் செய்தவர்களது வைப்புக்களை 2011 இல் மீளப்பெற்றுக் கொள்ளல், மற்றும் சிக் கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம், சபை களின் அரச உத்தியோகத்தர்கள், பணியா ளர்களுக்கு வழங்கிய கடன்கள், ஈட்டுக் கடன்கள் யாவும் அறவீடு செய்யும் பணி யும், சிறுவர் சேமிப்பு வைப்புக்களும் இடம்பெறும்.

உறுதிப்படுத்தும் வேலைகள் பூர்த்தி யுறும் நிலையிலுள்ளதால் அனைத்து சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களி டமும், ஏனைய சங்கங்களிடமும் கொடுக் கல் வாங்கல்களுடன் தொடர்புபட்ட அனைவரையும் தொடர்பு கொள்ளுமாறு சி.க.கூ.சங்க மாவட்ட செயலாளர் இ. யோசேப்ஸ்ராலின் அறிவித்துள்ளார். (ஐ-323)

## ஆங்கில கற்கை நெறிக்கான தகுதிகாண் பரீட்சை

கிளிநொச்சி, ஜூலை 28

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படவுள்ள பொது ஆங்கில கற்கை நெறிக்கான தகுதிகாண் பரீட்சை எதிர்வரும் 31 ஆம் திகதி மு.ப.10 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை இலங்கைத் திறந்த பல் கலைக்கழகத்தின் யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, மாத்தறை, அனுராதபுரம், மட்டக்களப்பு ஆகிய ஆறு நிலையங்களில் நடைபெற வுள்ளது.

இப்பரீட்சைப் பெறுபேற்றின் அடிப் படையில் விண்ணப்பதாரிகள் உரிய கற்கை நெறியின் பல்வேறு மட்டங்களில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்ப நிலையங்கள் வழங்கப்படும் போதே வழங்கப்பட்டுள் ளன. (1-405)




யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகமும் யாழ். றோட்டறிக் கழகமும் இணைந்து கனகபுரம் மற்றும் அக்கராயன் குளத்தில் அமைந்துள்ள முன்பள்ளிகளுக்குப் பாடசாலை உபகரணங்களை வழங்கிய போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.றோட்டறிக் கழகம் சார்பில் றோட்டேரியன் எஸ்.கபிலன் முன்பள்ளிச் சிறார்களுக்கு கதிரைகள் வழங்குவதையும், றோட்டேரியன் எஸ்.சுரேந்திரன் பாடசாலை உபகரணங்கள் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கைகள்



செல்வன்

## அன்ரன் யோகராஜா கலிஸ்ரஸ் கஜேந்திரன்

**(3 ஆம் வருட மாணவன் - பொறியியற்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்)**

எமது ஆருயிர் நண்பன்
**செல்வன் கலிஸ்ரஸ் கஜேந்திரனின்**
திடீர் மறைவினால் துயருறும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெற்றமனம் தவமிருக்க
பற்றுகரம் வழிநடத்த
உற்றசுகம் உளம் அணைத்தும் மெழுகாகிட - இப்
பற்றுலகு பார்வைதனில் ஒளியாகினாய்
நீ
வெற்றிகளை தினம் நிறைத்தாய்
வற்றியிடா புகழ்படைத்தாய்
ஏற்றிருந்த சொந்தம் எமை ஏமாற்றினாய் - நீர்
வற்றிவரும் கானல் என ஏன் மாறினாய்....?

நண்பர் இடை நாயகனாய்
நற்குடியின் பாலகனாய்
சுற்றிவரும் உன் நினைவு அகலாதெமை - எம்
வெற்றுடலம் வாழ்வரையில் மறவாது உனை...

**நண்பர்கள்**

**(பொறியியற்பீடம் - 3 ஆம் வருடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மட்டுவில் மாதுமை மழலைகள் கல்விப் பூங்காவின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சிறுவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதை முதலாவது படத்திலும், வேள்ட்விஷன் மாவட்ட இணைப்பாளர் த.மொ.வசந்தநாயகம், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோர் உரை யாற்றுவதை இரண்டாவது மூன்றாவது படங்களிலும் சிறார்களுடன் ஆசிரியர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் நிற்பதனை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: சாவகச்சேரி செய்தியாளர்)

# நிலக்சனின் அபாரத் துடுப்பாட்டம்

# யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வெற்றிவாகை

வலி.வடக்கு, ஜூலை 28

நிலக்சன், பென்டில்ஹரன் பெற்ற ஓட்டங்களால் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 73 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆட்டம் ஒன்றில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரி வெற்றிபெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல் லூரி 'பி' அணியும் யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 49.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

நிலக்சன் 5 நான்குகளுடன் 51, கஜேந்திரன் 30, எம். மதுசன் 25, சோதிநாத் சுவரன் 22, எஸ். மதுசன் 10 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 37 ஓட்டங்கள் பெறப்பட்டன.

சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த திசாந் 10 ஓவர்கள் பந்துவீசி 38 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், சயன் 10 ஓவர்கள் பந்து வீசி 70 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் துஷ்யந்தன் 6.1 ஓவர்கள் பந்துவீசி 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

248 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது.

தர்சன் இரண்டு ஆறுகள் இரண்டு நான்குகளுடன் 45 (ஆட்டமிழக்காது), துவாரகன் எட்டு நான்குகளுடன் 43, ஜெனிவர் 24, துஷ்யந்தன் 13 ஓட்டங்களை பெற்றதுடன் உதிரிகளாக 19 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த குருநாத், பென்டில்ஹரன், கஜேந்திரன் கோபிநாத், சுவரன் தலா 10 ஓவர்கள் பந்து வீசி முறையே 16, 29, 31, 37 ஓட்டங்களைக் கொடுத்து தலா 02 விக்கெட்டுக்களையும். பென்ஜோ 03 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

(ஐ-186)




# கோஸ்ரி அணி வெற்றி பெற்றது

யாழ்ப்பாணம்,ஜூன்28

சிநேக பூர்வ உதைபந்தாட்ட ஆட்டத்தில் பாசையூர் மக்கள் படை கோஸ்ரி அணி வெற்றிபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற சிநேகபூர்வ ஆட்டத்தில் பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகத்தின் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் அணியை எதிர்த்து பாசையூர் மக்கள் படை கோஸ்ரி அணியினர் மோதிக் கொண்டனர்.

இந்த ஆட்டத்தில் பாசையூர் மக்கள் படை கோஸ்ரியினர் 1:0 என்ற கோல் கணக்கினால் பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் அணியினை வெற்றி கொண்டது.

(ஐ-23)

# கழகங்களுக்கிடையில் துடுப்பாட்டம்; 'ஸ்ரார் போய்ஸ்' அணி வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், ஜூலை 28

விஜித், லாவண் ஆகியோரின் சிறந்த துடுப்பாட்டத்தினால் கப்பினஸ் (B) அணியை 47 ஓட்டங்களால் வெற்றிகொண்டது ஸ்ரார் போய்ஸ் அணி.

பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் கோல்டன் ஸ்ரார் அணியினர் அமரர் யோகேந்திரன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உள்ளூர் அணிகளுக்கு இடையிலான 6 பேர் பங்கு கொள்ளும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து சுற்றுப் போட்டித் தொடரின் அரை இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

கப்பினஸ் (பி) அணியை எதிர்த்து ஸ்ரார்போய்ஸ் அணி மோதியது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கப்பினஸ் (பி) அணி களத்தடுப்பில் ஈடுபடுவதாக தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரார் போய்ஸ் அணியினர் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 89 ஓட்டங்களைப்பெற்றனர்.

இதில் விஜித் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும், லாவன் 30 ஓட்டங்களையும் தமது அணிக்காப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கப்பினஸ் அணி 'பி' அணி வீரர்களான பாரத், தயா ஆகியோர் முறையே தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

90 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியெனக் களமிறங்கிய கப்பினஸ் (பி) அணியினர் ஐந்து விக்கெட்டு களை இழந்து 42 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

இதில் தயான் 10 ஓட்டங்களையும் ஜீன்சன் 17 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் ஸ்ரார் போய்ஸ் அணி வீரர்களான ரஜின் 2 விக்கெட்டுக்களையும் சுரேன் ஒரு விக்கட்டுக்களையும் வீழ்த்தினர்.

(ஐ-23)

# பழைய மாணவர் அணிகள் மோதல் யாழ்.இந்து வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம், ஜூலை 28

ஜனர்நீதனின் நிதானமான துடுப்பாட்டம் கைகொடுக்க வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் அணியை வெற்றிகொண்டது யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் அணி.

மத்திய கல்லூரியில் நிறுவுனர் தினத்தினை முன்னிட்டு மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்திய 6 பேர் பங்கு கொள்ளும் ஐந்து பந்துப் பரிமாற்றம் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் அரையிறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் அணியை எதிர்த்து யாழ்.இந்துக்கல்லூரி பழைய மாணவர் அணி மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக் களை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜனர்த்தனன் 40 ஓட்டங்களையும் மணிவண்ணன் 17 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

71 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென களமிறங்கிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் அணியினர் 5 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.

ஜெயசதன் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும் திலீபன் 17 ஓட்டங்களையும் யோஸ் செல்பான் 14 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் அணி வீரர்களான லக்சுமிகாந்த் ஒரு விக்கெட்டையுதம் பகீரதன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (ஐ-23)



இலங்கை தேசிய கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் [illegible] 8 தொடக்கம் 11 வரை சுகாதாரமும் உடற் கல்வியும் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு யோகாசனப் பயிற்சி வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் யோகாசனப் [illegible] ஈடுபடுவதை முதல் இரு படங்களிலும், நிகழ்வில் கலந்து கொண்ட விரிவுரையாளர்களை இறுதி [illegible]

(படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடவளவை தேசியவனத்தின் 1000 ஏக்கர் காட்டுத்தீயினால் எரிந்து பெரும் நாசம்

கொழும்பு, ஜூலை 28

உடவளவை தேசிய வனத்தின் ஒரு பிரதேசத்தில் கடந்த 25 ஆம் திகதி மதிய வேளையில் மூண்டெழுந்த காட்டுத் தீயினால் குறைந்தபட்சம் ஆயிரம் ஏக்கர்கள் வரையில் அழிந்து போயுள்ளதாக வனவளப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவிக்கிறது.

இக் காட்டுத் தீ பூரணமாக கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் காட்டு மிருகங்கள் எவற்றுக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் உடவளவை தேசியவனத்தின் பொறுப்பாளரான பிரசாந்த விமலதாச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விளக்கமளிக்கும் போது, மேற்படி தேசிய வனத்தின் கொன்அட்டு ஆர சமவெளிப் பிரதேசத்தில் உயர்ந்து வளர்ந்திருந்த பேய்க் கரும்பு மற்றும் மாணாப் புல் பற்றைகளில் தீ மூண்டுள்ளதாகத் தமக்குத் தகவல் கிட்டியதாகவும் இத் தினங்களில் உடவளவைப் பிரதேசத்தில் கடும் காற்றுநிலவுவதன் காரணமாக அத் தீ பற்றியெரிந்து மேற்படி சமவெளிப் பிரதேசம் உள்ளடங்கும் பற் றைக் காட்டுப் பிரதேசத்தையே நாசப்படுத்தியது எனவும், செவனகலை சீனித் தொழிற்சாலையின் தீ அணைக்கும் இயந்திரத்தின் உதவியுடனும் சாரதிகள் சங்க உறுப்பினர்கள் மற்றும் மவ்சூர ராணுவ முகாம் சிப்பாய்கள், வனவளப் பாதுகாப்புத்திணைக்கள ஊழியர்கள் மற்றும் பிரதேச வாசிகளின் ஒத்துழைப்புடனும் சுமார் 18 மணி நேர கடும் முயற்சியின் பின்னர் தீயைக் கட்டுப் படுத்த முடிந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், பெரிய காட்டுமரங்களுக்கோ வன வாழ் உயிரினங்களுக்கோ பாதிப்புக்கள் ஏற்படவில்லை எனவும், சுமார் 15 அடி உயரம் வரையில் எழுந்த தீச்சுவாலைகள் காரணமாகப் பீதியுற்ற வனவாழ் மிருகங்கள் மேற்படி வனத்தின் பாதுகாப்பான பிரதேசங்களைச் சென்றடைந்து பாதுகாப்பைத் தேடிக் கொண்டிருந்தாகவும் அவர் விளக்கமளித்திருந்தார். (த)

## T.V. கள் விற்பனைக்கு

Sony Wega 21" - 25" - 14" (Woofer/Radio) T.V. கள், அம்பிளிபயர்கள் (1000W) Box வகைகள், Casstte Deck, குளிர்சாதனப்பெட்டிகள் என்பன மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு

தொடர்பு 0771393607

இ.மகேஸ்வரன் (அப்பளக் கம்பனி)

(சிவிப்புளியடி ஆரம்பப் பாடசாலை அருகில்)

கே.கே.எஸ். வீதி, இணுவில்.

## வீடு தேவை

யாழ்.நகரில் இருந்து 10 கி.மீற்றர்களுக்குள் வீடு உடனடியாகத் தேவை 40 லட்சத்துக்குள் விரும்பத்தக்கது.

தொடர்பு:

0773250033, 0711595220

## புறொயிலர் விற்பனைக்கு

நிறைகூடிய புறொயிலர் உடன் சுத்தம் செய்யப்பட்டது. 1Kg 480/=

குமரன்பாம், 227, பிறவுன் வீதி, (கலட்டிச் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். [திங்கள், புதன், சனி, ஞாயிறு 12 மணிவரை]

## வேலை வாய்ப்பு

கோப்பாயில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள Innovage சர்வதேச நிறுவனத்திற்கு முகாமை பயிற்சியாளர்கள் தேவை. Marketing Management, Business Management Peoples Management ஆகிய துறைகளுக்கு பயிற்சியாளர்கள் தேவை.

பயிற்சியின் போது அடிப்படைச் சம்பளம் ரூபா 5750/=கொமிசன் வழங்கப்படும்.

* 15 பேர் மட்டுமே தேவை.
* தகைமை: O/L, A/L

தொடர்புக்கு: 0775566224, 0214922177

## BIT @ ESOFT

University of Colombo School of Computing

# BIT பட்டப்படிப்பிற்கு தொடர்ச்சியாக இலங்கையின் நம்பர் 1 நிறுவனமாகத் திகழ்வது ESOFT மட்டுமே.

# ஒவ்வொரு வருடமும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் BIT பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவர்களில் 50% மானோர் ESOFT மாணவர்களே.

**2010 இல் நடந்த கொழும்பு BIT பட்டமளிப்பு விழாவில் ESOFT இன் சாதனைகள்.**

➢ 18 தகைமைச் சித்தியடைந்த பட்டதாரிகள் (Class holder) 13மாணவர்கள் ESOFT மாணவர்களே..!

➢ பட்டம் பெற்ற 147 பட்டதாரிகளில் 72 மாணவர்கள் ESOFT இல் கல்வி கற்றவர்களே..!

தங்கப்பதக்கம், முதற்பரிசு வென்ற எமது சாதனை மாணவர்கள்.










**BIT Plus கற்கும் மாணவர்களுக்கு Esoft வழங்கும் இலவச கற்கை நெறிகள்.**

*Semester 1*
- Fundamentals of Programming (Java)
- Hardware&Networking
- Web Designing

*Semester 2*
- Microsoft Certified Technology Specialisst
- Sun Certifications for Java Programmer

*Semester 3*
- Open Source Web Development
- Accounting Packages

*Semester 4*
- CCNA (Cisco Certified Network Associate)

*Semester 5*
- Project Class

*Semester 6*
- Linux Network Administration

ESOFT

Jaffna Branch:
114, Navalar Road,
Jaffna.
T.P- 0212224142

Hotline Call @
077 309 9 308

புதிய கல்வியாண்டிற்கான பதிவுகளை 31/07/2010 வரை ESOFT யாழ்க்கிளையில் மேற்கொள்ளலாம்.

# மரண அறிவித்தல்

## சிவகுரு சண்முகலிங்கம் (அப்பி) சண்முகம்

### (உரிமையாளர், சண்முகம் ரெக்ஸ், முன்னாள் தபால் திணைக்கள ஊழியர்)



யாழ்.ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்துவந்தவருமான சிவகுரு சண்முகலிங்கம் 26.07.2010 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் கனகமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனகசிங்கம், மகேஸ்வரி, சுந்தரலிங்கம், அமிர்தலிங்கம், கதிர்வேல் மற்றும் கமலாதேவி(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான ரேவதி, ராஜரட்ணம், Dr. கதிர்காமநாதன், இந்துமதி, தவமணி கந்தையா மற்றும் பரமேஸ்வரி(இலங்கை), ராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் கோமதிதேவி(இலங்கை), தயாபரன்(சுவிஸ்), காலஞ்சென்ற சுதாகரன், திசோகரன்(லண்டன்), தனீஸ்கரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜேஸ்வரன்(இலங்கை), ஜெனி(சுவிஸ்), கோமதி(லண்டன்), திவ்வியா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயந்தா, திபாகரன், சயந்தன்(இலங்கை), சஜிந்தன், சுதாஜினி, சுதாகரன், ஜெனுசன், சகிலா (சுவிஸ்), ரமணா, வர்சா, ஜனுஷா(லண்டன்), தீபிகன், அபிஷன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.96 ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கோமதி | - | 0212222491 | Mobile | | 00442089462719 |
| தயாபரன்(சுவிஸ்) | - | 0041415346894 | தனீஸ்கரன் | - | 00442082419898 |
| திசோகரன் | - | 00442089496269 | Mobile | | 00447728501965 |

(101069)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்யூ. ஆட்சியில் 14 ஆயிரம் பேரைக் கொன்று குவித்த கம்போடிய முன்னாள் சிறைத் தலைவருக்கு 35 வருடச்சிறை

நாம் பெங், ஜூலை 28

கம்போடிய கம்யூனிஸ்ட் ஆட்சிக்காலத்தில் சிறைக்குள் 14 ஆயிரம் பேரைக் கொன்று குவித்த முன்னாள் சிறைத் தலைவருக்கு 35 ஆண்டுகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கம்போடியாவில் 1975ஆம் ஆண்டு ஆட்சியை கேமர் ரூஜ் என்ற கட்சி கைப்பற்றியது. இதன் தலைவர் போல் போட். மேற்கத்திய நாடுகளின் செல்வாக்கை உடைத்து எறிவதும், விவசாய சமுதாயத்தை உருவாக்குவதும்தான் எங்கள் இலட்சியம் என்று அறிவித்தார்.

இவர் அமெரிக்க ஆதரவு ஆட்சியை தூக்கி எறிந்தார். நகரவாசிகள் எல்லாம் ஊரை காலி செய்துவிட்டு கிராமங்களில் குடியேறவேண்டும் என்று கட்டாயப்படுத்தினார். நகரத்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளிகளையும் விட்டுவைக்கவில்லை. அவர்களையும் நகரங்களிலிருந்து வெளியேற்றினார்.

ஆங்கிலம் உட்பட அந்நிய மொழிகளைப் பேசியவர்களை கேமர் ரூஜ் கட்சியினர் உடனடியாகச் சுட்டுக்கொன்றனர். குளுகுளு கண்ணாடி அணிந்தவர்கள், கையில் கடிகாரம் கட்டியிருந்தவர்கள், நவீன உபகரணங்கள் வைத்திருந்தவர்கள் ஆகியோரை எல்லாம் கேமர் ரூஜ் கட்சியினர் சுட்டுக்கொன்றனர்.

நகரவாசிகள் கிராமத்து விவசாயப் பண்ணைகளில் அடைக்கப்பட்டு விவசாய வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தப் பட்டனர்.

ஆட்சிக்கு வந்த 3 ஆண்டுகளில் 20 இலட்சம் கம்போடியர்கள் துப்பாக்கி வேட்டுகளாலும், கட்டாயவேலையாலும், பஞ்சத் தாலும் பலியாகியுள்ளார்கள். 1978 ஆம் ஆண்டு அண்டை நாடான வியட்நாம் இராணுவம் கம்போடியா மீது படை எடுத்தது. அடுத்த ஆண்டே அந்த நாட்டை வியட்நாம் கைப்பற்றியது.

இதைத் தொடர்ந்து போல் போட்டும், அவரது ஆதரவாளர்களும் காட்டுக்குள் தப்பி ஓடிவிட்டனர். 1985ஆம் ஆண்டு போல் போட் ஓய்வு பெற்றார். 1998ஆம் ஆண்டு அவர் வீட்டுக்காவலில் இருந்த போது மரணமடைந்தார்.

இவரது ஆட்சிக்காலத்தில் நடந்த படுகொலைகள் குறித்து விசாரிப்பதற்காக கம்போடியா அரசு, ஐ.நா.உதவியுடன் ஒரு நீதிமன்றத்தை அமைத்தது. இந்த நீதிமன்றம் முதன் முதலாக விசாரித்த வழக்கில் திங்கட்கிழமை தீர்ப்பு கூறப்பட்டது. 30 ஆண்டுகளாக நடந்துவந்த விசாரணையில் திங்கட்கிழமைதான் முதல் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

போல்போட் ஆட்சிக்காலத்தில் டோல் ஸ்லெங்க் சிறைச்சாலையின் தலைவராக இருந்தவர் கைங் கிக் இயேவ். இந்த சிறைச்சாலை முன்பு பாடசாலையாக இருந்தது. போல் போட் ஆட்சிக்காலத்தில் அது சிறைச்சாலையாக மாற்றப்பட்டது.

கைங் கிக் முன்பு பாடசாலை ஆசிரியராக இருந்தார். இவர் சிறைத்தலைவராக நியமிக்கப்பட்டதும் சிறைச்சாலைக்குள் இருந்த 14 ஆயிரம் பேரைச் சித்திரவதை செய்தும் கொடுமைப்படுத்தியும் கொன்று குவித்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்தக் குற்றத்தை அவர் ஒப்புக்கொண்டார். இதைத் தொடர்ந்து அவர் குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதன்படி அவருக்கு 35 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

5 ஆண்டுகள் இவர் கம்போடிய இராணுவத்தால் சட்டத்துக்குப் புறம்பாக அடைத்து வைக்கப்பட்டிருந்ததால், அந்த 5ஆண்டு காலம் கழித்துகொள்ளப்பட்டு 30 ஆண்டுகள் மட்டும் சிறைவாசம் அனுபவிக்கவேண்டும் என்று நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.




## ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்: 4 பேர் பலி; 16 பேர் காயம்!

பக்தாத், ஜூலை 28

ஈராக் தலைநகர் பக்தாத்திலுள்ள அல்-அரேபியா தொலைக்காட்சி அலுவலகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 3 பேர் பலியாயினர். 16 பேர் காயமடைந்தனர்.

தற்கொலைத் தீவிரவாதி குண்டுகள் சகிதம் ஒரு மினி வானை ஓட்டி வந்து அலுவலக வாசலருகே நிறுத்தி விட்டு குண்டை வெடிக்கவைத்துள்ளார்.

இதில் அந்த அலுவலகக் காவலாளிகள் 3 பேரும், ஓர் ஊழியரும் பலியாயினர். 16 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலில் அல்-அரேபியா கட்டடமும், அருகிலுள்ள கட்டடங்களும், பல கார்களும் சேதமடைந்தன.

## பாகிஸ்தானில் தலிபான்கள் தாக்குதல்: 8 பேர் பலி; 25 பேர் படுகாயம்!

பெஷாவர், ஜூலை 28

பாகிஸ்தானின் கைபர்-பாக்துங்வா மாகாணத்தின் செய்தித்துறை அமைச்சர் மியான் இப்திகார் ஹுசைனின் வீட்டருகே தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

நவ்சேரா மாவட்டத்தின் பப்பி பகுதியிலுள்ள அமைச்சரின் வீட்டை குறி வைத்து திங்கட்கிழமை மதியம் நடத்தப்பட்ட இத்தாக்குதலில், அவரது உறவினர், 12 வயது சிறுமி, 3 பொலிஸார் ஆகியோர் உட்பட 8 பேர் உயிரிழந்தனர். 25 பேர் காயமடைந்தனர்.

அமைச்சரின் ஒரே புதல்வர் மியான் ரஷீத் கடந்த சனிக்கிழமை தலிபான்களால் கொல்லப்பட்ட நிலையில், மீண்டும் அவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

புதல்வர் இறந்தமை தொடர்பாக துக்கம் விசாரிப்பதற்காக அமைச்சரின் வீட்டிற்கு உறவினர்கள் வந்தனர். அப்போது அமைச்சரின் வீட்டருகே உள்ள சோத னைச் சாவடியில் பணியிலிருந்த பொலி ஸார், மோட்டார் சைக்கிளில் வந்த இரு வரை தடுத்து நிறுத்தியுள்ளனர். இதையடுத்து அவர்கள் குண்டை வெடிக்கச் செய்துள்ளனர்.

இதில் 8 பேர் உயிரிழந்தனர். 25 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்கள் அபாய கட்டத்தைத் தாண்டிவிட்டனர் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

செய்தித்துறை அமைச்சரான இப்திகார், தலிபான்களுக்கு எதிராக அவ்வப்போது பேசி வந்தார். இதனால் கோப மடைந்த தலிபான்கள் அவரைக் குறி வைத்து தொடர் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

## இஸ்ரேல் ஹெலி விபத்தில் நால்வர் உயிரிழப்பு

ஷர்னெஸ்டி, ஜூலை 28

இஸ்ரேல் விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானதில் நால்வர் பலியாயினர்.

இந்த விமானம் ருமேனியாவை நோக்கிப் புறப்பட்டது. இதில் மருத்துவ மற்றும் ஆராய்ச்சிக் குழுவினரும், 6 இராணுவச் சிப்பாய்களும் இருந்தனர்.

ருமேனியாவில் ஷர்னெஸ்டி நகரில் தரை இறங்க முயன்றபோது அங்கிருந்த மலையில் ஹெலிக்கொப்டர் மோதியது.

இதனால், ஹெலிக்கொப்டர் நொறுங்கியது. இதில் 4 பேர் உயிரிழந்தனர். தகவல் அறிந்ததும் ருமேனியாவின் மீட்புக் குழுவினர் விரைந்து சென்றனர்.

மீட்புப் பணி தீவிரமாக நடைபெறுகிறது. மோசமான வானிலை காரணமாக இந்த விபத்து நடந்துள்ளது எனத் தெரிய வந்துள்ளது.

## இஸ்ரேல் போர் விமானங்கள் காஸா மீது ஏவுகணைத் தாக்குதல்!

காஸா, ஜூலை 28

பலஸ்தீனத்தின் காஸா பகுதியில் இஸ்ரேல் போர் விமானங்கள் திங்கட்கிழமை ஏவுகணைத் தாக்குதல் நடத்தின. இத்தாக்குதலில் எகிப்தின் எல்லையையொட்டி அமைந்திருந்த பல கணவாய்கள் முற்றிலும் சேதமடைந்தன. காஸாவின் வடக்கு, மத்திய பகுதிகளிலும் இஸ்ரேல் போர் விமானங்கள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தின என்று காஸா பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

காஸா பகுதியை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் அமைப்பினர், கடந்த வாரம் இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல் நடத்தினர். இதற்குப் பதிலடி தரும் வகையில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது எனக் கூறப்படுகிறது.

ஏவுகணைத் தாக்குதலை இஸ்ரேல் அரசும் உறுதிப்படுத்தியுள்ளது. காஸா பகுதியிலுள்ள ஆயுதங்கள் தயாரிக்கும் இடம், ஆயுதக் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட கணவாய்கள் ஆகியவற்றை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என இஸ்ரேல் அரசு தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் உயிரிழப்பு ஏதும் ஏற்பட்டதாக உடனடி தகவல் இல்லை. தாக்குதலில் அழிக்கப்பட்ட கணவாய்களை, ஹமாஸ் அமைப்பினர் ஆயுதம், பணம் ஆகியவற்றைக் கடத்துவதற்கு முறைகேடாகப் பயன்படுத்தி வந்துள்ளனர் என இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதற்கிடையே, காஸா முற்றுகையை இஸ்ரேல் இராணுவம் கைவிடவேண்டும் என வலியுறுத்தி சர்வதேச நாடுகள் மேற்கொண்டுவரும் நடவடிக்கையில் இந்திய கப்பலும் இணைய உள்ளது.

கடந்த மே மாதம் காஸா பகுதிக்கு நிவாரணப் பொருள்களுடன் சென்ற துருக்கி கப்பலை இஸ்ரேல் இராணுவத்தினர் வழிமறித்து தாக்குதல் நடத்தினர். இதில் 9 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலை அமெரிக்கா உட்பட உலக நாடுகள் பலவும் கடுமையாகக் கண்டித்திருந்தன. மேலும், போரால் பாதிக்கப்பட்டு வாடும் 15 இலட்சம் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க இஸ்ரேல் அனுமதிக்கவேண்டும் எனவும் அவை வலியுறுத்தியுள்ளன.



பெல்கிரேடிலுள்ள நாடாளுமன்றத்தில் நடந்த அவசர கூட்டத்தில் நீதிபதிகளுடன் கலந்துரையாடிய செர்பிய ஜனாதிபதி போரிஸ் டாடிக் (வலதில் இருந்து 2ஆவது).

# தலிபான் தீவிரவாத அமைப்புக்கு பாகிஸ்தான் உளவுத்துறை உதவி

## போலந்து புலனாய்வு அமைப்பு தெரிவிப்பு

வாஷிங்டன், ஜூலை 28

தலிபான் அமைப்புக்கு பாகிஸ்தானின் ஐஎஸ்ஐ அமைப்பு உதவி வருகிறது என போலந்து இரகசியப் புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது. இருப்பினும், பாகிஸ்தானுடனான உறவு தங்களுக்கு மிகவும் முக்கியமானது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தகர்ப்புக்கு முக்கிய காரணமான தலிபான் அமைப்பை முற்றிலுமாக ஒழிப்பதில் அமெரிக்கா தீவிரம் காட்டி வருகிறது.

இந்நிலையில், தலிபான் அமைப்புக்கு பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ உதவி வருகிறது என போலந்து இரகசியப் புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

92 ஆயிரம் பக்கங்கள் கொண்ட புலனாய்வு அமைப்பின் இரகசிய ஆவணம் சமீபத்தில் வெளியாகியுள்ளது.

அதேவேளை, மிகவும் இரகசியமாகப் பாதுகாக்கப்படவேண்டிய புலனாய்வு ஆவணங்கள் பத்திரிகைகளுக்கு கசிந்துள்ளமை அமெரிக்க அரசியலில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தானுடனான உறவு தங்களுக்கு மிகவும் முக்கியமானது என்று அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜேம்ஸ் ஜோன்ஸ் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு முதல் பாகிஸ்தானுடன் கூட்டு சேர்ந்து பயங்கரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. தலிபான் அமைப்பினருக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இரு நாடுகளும் ஒருங்கிணைந்து செயற்பட்டு வருகின்றன.

பாகிஸ்தான் இராணுவம் மற்றும் புலனாய்வு அமைப்பு ஊடுருவல்காரர்களுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று அமெரிக்கா விரும்புகிறது என்றும் ஜோன்ஸ் தெரிவித்துள்ளார்.

போலந்தின் இரகசிய ஆவணம் 2004 ஆம் ஆண்டு முதல் பாகிஸ்தான் ஐஎஸ்ஐ செயல்பாடு குறித்து விரிவாக விளக்கியுள்ளது. இந்த காலகட்டத்தில் இப்போது பாகிஸ்தானின் இராணுவத் தலைவராக உள்ள அஷ்பக் பர்வேஸ் கியானிதான் ஐஎஸ்ஐ அமைப்பின் தலைவராக இருந்தார்.

போலந்தின் ஆவணம் வெளியானதால் அமெரிக்காவுடனான உறவு பாதிக்கப்படும் என்பது பாகிஸ்தானுக்கு நன்கு தெரியும். இருப்பினும், தற்போது பாகிஸ்தான் இராணுவம் தலிபான்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்றும் ஜோன்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்போது ஸ்வாட் பள்ளத்தாக்கு, தெற்கு வசிரிஸ்தான் பகுதிகளில் தலிபான்களுக்கு எதிரான நடவடிக்கைகளை பாகிஸ்தான் இராணுவம் எடுத்து வருகிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார மேம்பாடு குறித்து பாகிஸ்தானுடன் அமெரிக்கா பிரத்தியேகமான உத்தியை வகுத்து வருகிறது.

சமீபத்தில்தான் பாகிஸ்தானும், ஆப்கானிஸ்தானும் உறவை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள் ளன. இரு நாடுகளிடையே வாகனப் போக்குவரத்துக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அரசு, இராணுவம் மற்றும் அந்நாட்டின் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ ஆகிய மூன்றும் ஒருங்கிணைந்து ஊடுருவல்காரர்களுக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய உத்தி குறித்து விவாதித்து வருகிறது என்றும் ஜோன்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மஹிந்தவின் வெற்றி இனவெறியாக மாறியுள்ளதாம்

## பா.ஜ.கவின் தமிழக முன்னாள் தலைவர் இல.கணேசன் குற்றச்சாட்டு



தூத்துக்குடி, ஜூலை 28

இலங்கையில் போர் முடிவுற்ற பின்னர் அங்கு வாழும் தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரிமைகளை வழங்கவில்லை. அவரின் வெற்றி இன வெறியாக மாறியுள்ளது.

- இவ்வாறு பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ் மாநில முன்னாள் தலைவர் இல.கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் வரும் சட்டமன்றத் தேர்தலில் பாரதீய ஜனதா தனித்துப் போட்டியிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழகப் பாரதீய ஜனதா முன்னாள் தலைவரும், தேசிய செயற்குழு உறுப்பினருமான இல.கணேசன் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் நேற்று முன்தினம் காலை சுவாமி தரிசனம் செய்தார். பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

மத்தியில் ஆளும் காங்கிரஸ் தனது ஆட்சியில் பிரச்சினை வரும்போது அதைத் திசை திருப்ப ஏதாவது ஒன்றை செய்கிறது. அப்படித்தான், தற்போது குஜராத் மாநில முதல்வரின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் விதமாக போலி என்கவுண்டர் வழக்கில் சி.பி.ஐ. மூலம் அமைச்சரராக இருந்த அமித் ஷாவை இழுத்திருக்கிறது.

மேற்கு வங்கத்தில், ரயில் விபத்து, ஜம்மு - காஷ்மீரில் தீவிரவாதம், மாவோயிஸ்ட்டுகளின் அட்டகாசம் என்பன நடைபெறுகின்றன.

இலங்கையில் போர் முடிவுற்று ஒரு வருடத்திற்கு மேலாகிறது. ஆனால் அங்கு வாழும் தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரிமைகளை வழங்கவில்லை. அவரின் வெற்றி இன வெறியாக மாறியுள்ளது.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதும், கொல்லப்படுவதும் தொடர்கதையாகி வருகின்றன. மீனவர் தாக்குதலைத் தடுத்து நிறுத்த உடனடியாக மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

படிக்கும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதில் பாரபட்சம் காட்டக்கூடாது. முஸ்லிம், கிறிஸ்தவ மாணவர்களுக்கு வழங்கப்படுவது போன்று இந்து மாணவர்களுக்கும் வழங்க வேண்டும்.

தமிழகத்தில் வரும் 2011 ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி தனித்துப் போட்டியிடும். அதற்கான தேர்தல் பணிகளில் ஈடுபடுவோம்.

- இப்படி இல.கணேசன் கூறினார்.

# இந்தியச் செய்திகள்

## கடல் மார்க்கமாக மீண்டும் கடத்தல்

இராமநாதபுரம், ஜூலை 28

கடலோர மாவட்டங்களில் முக்கிய பொறுப்புகளில் உள்ள அதிகாரிகளின் பணியிடங்கள் 'டம்மி'யாக உள்ளதால் கடல் மார்க்கமாக மீண்டும் கடத்தல் தலைதூக்கும் அபாயம் உள்ளது.

இலங்கையில் உள்நாட்டு போர் நடந்த போது, கடல் மார்க்கமாக ஆயுதங்கள் கடத்தப்படுவதையும், ஊடுருவலையும் தடுக்க, கடலோர மாவட்டங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

இலங்கைப் போர் முடிவுக்கு வந்த நிலையில் கடத்தல் ஓரளவு குறைந்தது. இதனால், தற்போது கடலோர மாவட்டங்களில் கியூப் பிரிவு, புலனாய்வுப் பிரிவு, கடலோரப் பொலிஸ் பிரிவு மற்றும் போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு உள்ளிட்ட முக்கிய பிரிவுகளில் இருந்த அதிகாரிகளில் பலர் விடுப்பிலும், சிலர் மாறுதலிலும் சென்றுவிட்டனர்.

இதனால், அனைத்துத் துறைகளிலும் அதிகாரிகளின் பணியிடங்களைக் கூடுதல் பொறுப்பில் உள்ளவர்களே கவனிக்கும் நிலை உள்ளதால் கடல் மார்க்கமாக இலங்கைக்குக் கடல் அட்டைகளை அதிகளவில் கடத்தி வருகின்றனர்.

# ஈழத் துயரத்தை சுய இலாபத்திற்காக பயன்படுத்தும் சந்தர்ப்பவாதி நானல்லன்!

## சீமானின் கட்சிக்கு கருணாஸ் பதிலடி

சென்னை, ஜூலை 28

''ஈழத் துயரத்தை தன் சொந்த இலாபத்திற்காகப் பயன்படுத்தும் சந்தர்ப்பவாதியோ - வியாபாரியோ - அரசியல்வாதியோ நான் அல்லன். உங்களுடைய அரசியலுக்கு என்னைப் பலியாக்காதீர்கள்.''

- இவ்வாறு 'நாம் தமிழர்' இயக்கத்திற்கு நடிகர் கருணாஸ் பதிலடி கொடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

நான் ஒரு சாதாரண நடிகன். ஈழத் துயரத்தை சொந்த இலாபத்திற்காகப் பயன்படுத்தும் சந்தர்ப்பவாதியோ, வியாபாரியோ, அரசியல்வாதியோ நான் அல்லன்.

என்னால் ஈட்ட முடிந்த சொற்ப பணத்தில் என்னால் இயன்ற அளவிற்கு ஈழ மக்களுக்கு உதவி செய்தவன் - செய்கிறவன் நான். நான் அப்படிச் செய்வதற்கு நான் தமிழன் என்பது மட்டுமல்ல, என் மூதாதையர் ஈழத்தைச் சார்ந்தவர்கள் என்பதும் முக்கிய காரணம்.

கடந்த 25 ஆம் திகதி 'நாம் தமிழர்' என்ற அரசியல் கட்சி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்த கருத்துகளை என்னிடம் நேரடியாகவோ அல்லது தொலைபேசியிலோ சொல்லியிருந்தார்களெனில் அது உண்மையாக இருக்கும் பட்சத்தில் என் பயணத்தை ரத்துச் செய்திருப்பேன். ஆனால் என்னை அவர்கள் காயப்படுத்த மட்டுமே அப்படிக் கண்டன அறிக்கை வெளியிட்டனர்.

நாம் தமிழர் எனும் அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு ஒரு தமிழனாக நான் விடுக்கும் கோரிக்கை என்னவெனில், உங்களுடைய அரசியலுக்கு என்னை பலியாக்காதீர்கள். நான் எந்தக் காலத்திலும் அரசியலுக்கு அப்பாற்பட்டவனாகவே இருந்து வருகிறேன் - இனியும் இருப் பேன். எனவே, என் வேலையைச் செய்ய விடுங்கள். என் போன்ற சாதாரண மெய்யான உணர்வின் அடிப்படையில் இருக்கும் ஈழ ஆதரவாளர்களை ஈழ மக்களிடமிருந்து பிரிப்பது, எங்களுக்குள் முரண்பாட்டை உருவாக்குவது போன்ற செயல்களின் மூலம் தற்போது இருக்கின்ற ஆதரவாளர் களையும் ஊனப்படுத்தி விடாதீர்கள். நாம் தமிழர் எனும் அரசியல் கட்சியில் இல்லா தவர்களும் தமிழர்களே என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

ஒருவேளை உங்களுக்கு நான் சொன்னதில் சந்தேகம் இருப்பின் புலம் பெயர்ந்த ஈழ அகதிகள் மறுவாழ்வுக் கழகத்தின் தலைவர் ஈழ நேருவிடம் என் தொப்புள்கொடி உறவின் மீதான உங்கள் சந்தேகத்தை மெய்ப்பித்துக் கொள்ளுங்கள். கருணாநிதியாக இருந்த என்னை கருணாஸாக வாழ வைத்த என் தாய் தமிழ் இனத்திற்கு வாழும் வரைக்கும் கடமைப்பட்டவன் நான்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீமானை உடன் விடுதலை செய்க; வழக்குகளையும் திரும்பப் பெறுக!

## மீனவர் சங்கங்கள் வலியுறுத்து



சென்னை, ஜூலை 28

சீமான் மீதான வழக்குகளைத் திரும்பப் பெற்று அவரை உடனே விடுதலை செய்ய வேண்டும் - என்று மீனவர் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

தமிழ்நாடு மீனவர் முன்னேற்றச் சங்கத் தலைவர் கபடிமாறன், அகில இந்திய பாரம்பரிய மீனவர் சங்கத் தலைவர் மகேசு, தென்னிந்திய மீனவர் பேரவைத்தலைவர் ஜெயபாலன் ஆகியோர் சென்னையில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோது இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

மேலும் அவர்கள் கூறியவை வருமாறு -

தமிழக மீனவர்கள் படுகொலையைக் கண்டித்து தமிழக மீனவர்களுக்காகப் பேசினார் என்ற ஒரு காரணத்திற்காக கைது செய்யப்பட்டு தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் இருக்கும், நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் மீதான வழக்குகளைத் திரும்பப் பெற்று அவரை உடனே விடுதலை செய்ய வேண்டும்.

மீனவர் செல்லப்பன் கொலையை நியாயப்படுத்திய தென்னிந்தியக் கடலோர ரக் காவல்படை கொமாண்டர் ராஜ சேகரை கண்டிக்கிறோம். தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதை வேடிக்கை பார்க்கும் இந்தியக் கடற்படையைக் கண்டிக்கிறோம்.

மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்படுவதைக் கண்டித்து இலங்கைத் திரைப்பட விழாவிற்குத் தடை விதித்த தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபைக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

மஹிந்த ராஜபக்ஷ அரசின் விளம்பரத் தூதர்களாகச் செயற்படும் நடிகை அசின், விவேக் ஓபராய் மற்றும் இந்தியப் பட விழாவில் பங்கேற்ற திரைப்படங்களுக்கு திரைப்பட சங்கங்கள் மற்றும் திரையரங்கு உரிமையாளர்கள் தடை விதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறோம்.

- இப்படி அவர் தெரிவித்தனர்.

# ஜெயலலிதாவுக்கு எதிராக தி.மு.க. ஒகஸ்ட் 4 ஆம் திகதி ஆர்ப்பாட்டம்

## துணை முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு



சென்னை, ஜூலை 28

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவுக்கு எதிராக தி.மு.க. இளைஞர் அணி சார்பில் ஒகஸ்ட் 4 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடைபெறும் - என்று துணை முதல்வரும், தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளருமான மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு 13 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இந்த வழக்கில் ஜெயலலிதாவின் நடவடிக்கைகளால் தொடர்ந்து வாய்தா வாங்கப்பட்டு வருகிறது. மக்களைத் தொடர்ந்து அவமதித்து வரும் அவருடைய போக்கை தி.மு.க. இளைஞர் அணி சுட்டிக்காட்ட விழைகிறது. இந்தப் பிரச்சினையை நீதி மன்றத்தின் கவனத்துக்கு எடுத்துச் செல்லும் வகையில் தமிழகம் முழுவதும் மாவட்டத் தலை நகரங்களில் ஒகஸ்ட் 4 ஆம் திகதி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

மாவட்ட இளைஞர் அணியின் அமைப்பாளர்கள் தலைமையிலும், மாவட்டக் கழக செயலாளர்கள் முன்னிலையிலும் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும்.

- இப்படி அவர் தெரிவிவத்தார்.

# போலிக் கடவுச்சீட்டு மூலம் பாரிஸ் செல்ல முயன்ற யாழ். இளைஞர் கொச்சியில் கைது

கொச்சி, ஜூலை 28

போலிக் கடவுச்சீட்டு வைத்திருந்தார் என இலங்கையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கொச்சி விமான நிலையத்தில் தூதரக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

கேரள மாநிலம் கொச்சி விமான நிலையத்தில் குடியேற்றப்பிரிவு அதிகாரிகள் சோதனை நடத்திக்கொண்டிருந்தபோது, இலங்கையில் இருந்து கொச்சி வழியாக பாரிஸ் செல்லவிருந்த இலங்கை இளைஞர் ஒருவரிடம் பிரெஞ்சு நாட்டு போலிக் கடவுச்சீட்டு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து, அந்த இளைஞரைக் கைது செய்து அதிகாரிகள் விசாரணை நடத்தினர். அப்போது அந்த இளைஞர், இலங்கையின் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராஜரத்தினம் நந்தகுமார் (வயது - 23) என்பது தெரிய வந்தது. தொடர்ந்து அந்த இளைஞரிடம் விசாரணை நடைபெற்று வருகிறது.

# ஜனநாயகம் இல்லையென்றால் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய நிலைவரும்!

## வைகோ எச்சரிக்கை



தூத்துக்குடி, ஜூலை 28

தமிழகத்தின் எதிர்காலம் இருண்டு கிடக்கிறது. தி.மு.க. அரசு சுயநல ஆட்சி நடத்தி வருகிறது. நாட்டில் ஜனநாயகம் இல்லை என்றால் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் - என்று ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தூத்துக்குடியில் நேற்றுமுன்தினம் மாலை கட்சிக் கொடிப்பயணத்தை தொடக்கி வைத்துப் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

தமிழகத்தின் எதிர்காலம் இருண்டு கிடக்கிறது. தி.மு.க. அரசு சுயநல ஆட்சி நடத்தி வருகிறது. ஆனால், ம.தி.மு.க. கடந்த 17 ஆண்டாக சுயநலமில்லாமல் மக்களுக்காகப் போராடுகிறது.

தி.மு.க. அரசு கோவையில் நடத்திய தமிழ்ச் செம்மொழி மாநாட்டால், பொதுமக்கள் அதிருப்தியிலுள்ளனர். தேர்தலில் பணம் வாங்கி வாக்குப்போடாதீர்கள். அது அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு உங்களை ஆளும் கட்சியின் அடிமையாக இருக்கச் செய்து விடும். மாறாக கட்சி, அதன் கொள்கைகளைப் பார்த்து வாக்குப்போடுங்கள். நாட்டில் ஜனநாயகம் இல்லையென்றால் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

- இப்படி அவா தெரிவித்தார்.

# விலைவாசி உயர்வுக்கு எதிர்ப்பு; நாடாளுமன்றில் எதிரணிகள் அமளி

விலைவாசி உயர்வு விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் நேற்று அமளியில் ஈடுபட்டனர்.

மக்களவையில் சமாஜவாதி, ராஷ்ட்ரீய ஜனதாதளம் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பிக்களின் அமளி காரணமாக உணவு இடைவேளைக்கு முன் இரு முறை அவை ஒத்திவைக்கப்பட்டது. பா.ஜ.க மற்றும் இதர எதிர்க்கட்சி எம்.பிக்களும் விலைவாசி உயர்வுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மாநிலங்களவையில் சில புதிய உறுப்பினர்கள் பதவியேற்றுக்கொண்ட பின்னர், எதிர்க்கட்சி எம்.பிக்கள் அனைவரும் எழுந்து நின்று விலைவாசி உயர்வுக்கு எதிராக கோஷமிட்டனர். பகுஜன் சமாஜ், சமாஜவாதி மற்றும் அ.தி.மு.க உறுப்பனர்களுடன் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி உறுப்பினர்களும் இணைந்து விலைவாசி உயர்வுக்கு எதிராக கோஷமிட்டனர்.

இதையடுத்து மாநிலங்களவைத் தலைவர் அன்சாரி அவையை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைத்தார். பின்னர் கூடியபோதும் இதேநிலை நீடித்ததால் அப்போது அவைக்கு பொறுப்பேற்றிருந்த பி.ஜே.குரியன் அவையை நாள் முழுவதும் ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணி சிறப்பான ஆரம்பம் இலங்கைக்கு பதிலடி கொடுக்குமா?

கொழும்பு, ஜூலை 28

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சங்கக்கார இரட்டைச் சதமடிக்க, முதல் இன்னிங்ஸிற்காக இலங்கை அணி, 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 642 ஓட்டங்களைப் பெற்று, ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பின்னர் தனது இன்னிங்ஸைத் தொடங்கிய இந்திய அணி, நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது விக்கெட் இழப்பின்றி 95 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடிவரும் இந்திய அணி, முதலாவது ஆட்டத்தில் 10 விக்கெட்டுகளால் தோல்வியடைந்தது.

இந்த நிலையில் இரண்டாவது போட்டி, நேற்றுமுன்தினம் கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, முதல் நாள் ஆட்ட நேர முடிவின்போது, 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 312 ஓட்டங்களைச் சேர்த்தது.

சங்கக்கார 130 ஓட்டங்களுடனும், மஹேல ஜெயவர்த்தன 13 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

பின்னர், நேற்று தனது இன்னிங்ஸை மீண்டும் தொடர்ந்த இலங்கை அணி, சங்கக்காரவின் இரட்டைச் சதத்தின் உதவியுடனும் (219), மஹேல ஜெயவர்த்தனவின் சதத்தின் (174) உதவியுடனும் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 642 ஓட்டங்களைக் குவித்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

சமரவீர 76 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

பின்னர், தனது முதலாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இந்திய அணி, நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது, விக்கெட் இழப்பின்றி 95 ஓட்டங்களைப் பெற்றது.

முரளி விஜய் 22 ஓட்டங்களுடனும், ஷேவாக் 64 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆகும். (சி)

### அகில இலங்கை ரீதியிலான வலைப்பந்தாட்டம்:

## சிறந்த வீராங்கனையாக தர்சினி தெரிவு!

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற வலைப்பந்தாட்டத் தொடரில், சிறந்த வீராங்கனையாக, செலான் வங்கி அணியின் வீராங்கனையான செல்வி தர்சினி சிவலிங்கம் தெரிவுசெய்யப்பட்டார்.

அகில இலங்கை ரீதியில் திருகோணமலை மக்கெய்சர் மைதானத்தில் நடைபெற்ற கழகங்களுக்கிடையிலான ஆட்டங்களில், 'ஏ' பிரிவில் செலான் வங்கி அணியும், 'பி' பரிவில் இலங்கைக் கடற்படை அணியும், 'சி' பிரிவில் குருணாகல் மலியதேவா பெண்கள் பாடசாலை அணியும் சம்பியன்களாகத் தெரிவாகின.

இந்தத் தொடரில், சிறந்த வலைப்பந்து வீராங்கனையாக, செலான் வங்கி அணியின் வீராங்கனையான செல்வி தர்சினி சிவலிங்கம் தெரிவுசெய்யப்பட்டார்.

வளர்ந்துவரும் விளையாட்டு வீராங்கனையாக கீர்த்திகா கீதபொன்கலன் (யாழ் மாவட்ட அணி) விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (சி)

# வடக்கில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை; சிரமதானப் பணிகள் குறித்து அறிவுறுத்தல்

### வவுனியாவில் நேற்று ஆளுநர் தலைமையில் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

டெங்கு செயலணிக் குழுவின் அறிவுறுத்தலுக்கமைவாக ஓகஸ்ட் மாதம் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள டெங்கு ஒழிப்பு சிரமதானத்துக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி பாடசாலைகளிலும், 9ஆம் திகதி அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழிற்சாலைகள் ஆகிய இடங்களிலும் டெங்கு ஒழிப்பு சிரமதானம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று 21ஆம் திகதி வீடுகளிலும், 28ஆம் திகதி பொது இடங்கள் மற்றும் நகரங்களிலும் டெங்கு ஒழிப்பு சிரமதானம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திகதிகளில் வடமாகாணத்தின் அனைத்துப் பகுதிகளிலும் டெங்கு ஒழிப்பு சிரமதானம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் டெங்கு ஒழிப்பு சிரமதானத்தின் திருப்திகரமான செயற்பாடு தொடர்பாகப் பாடசாலை அதிபர் ஊடாக பொதுச்சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவித்து அவரிடம் இருந்து சான்றிதழ் பெறப்பட வேண்டும்.

ஏனைய இடங்களுக்கு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் நேரடியாகச் சென்று டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணியின் செயற்பாடு குறித்து பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்களுக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

பொது இடங்கள் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் இருந்து குப்பை கூளங்களை வெளியகற்றுவதற்கு உள்ளூராட்சிச் சபைகளின் செயலாளர்களுடன் தொடர்பு கொள்ளும்படியும் திணைக்களத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் டெங்கு ஒழிப்பு தொடர்பான விசேட கலந்துரையாடல், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி தலைமையில் நேற்று வவுனியா மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற போதே இவ்வாறான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

வடமாகாணத்தின் கல்விவலயப் பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்கள், அரச அதிபர்கள், திணைக்களத் தலைவர்களுடன் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. (ஓ-14)

# அரச சார்பற்ற நிறுவனங்கள் வன்னி செல்ல கட்டுப்பாடு ஏன்?

### அமைச்சர் கெஹலிய விளக்கம்

கொழும்பு, ஜூலை 28

சில அரசசார்பற்ற நிறுவனங்கள் அரசின் மீது குறை கண்டுபிடிப்பதற்காகவே அகதி முகாம்களுக்குச் செல்கின்றன. எனவேதான் அரசசார்பற்ற நிறுவனங்களின் வன்னி விஜயத்துக்கு அரசு சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பாதுகாப்பு தொடர்பான ஊடக நிலையத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து தகவல் தருகையில் கூறியவை வருமாறு:-

இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள முகாம்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வதற்கு எதுவித தடையும் இல்லை.

அரசசார்பற்ற நிறுவனங்கள் கண்காணிப்பாளர்களாக அங்கு சென்று பிரச்சினைகளை ஏற்படுத்தும் வகையில் அறிக்கைகளை வெளியிடுவதை அரசு ஒருபோதும் அனுமதிக்காது. இந்நிறுவனங்கள் அங்கு சென்று மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்காமல் புதிய பிரச்சினைகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டு வருகின்றன.

- இவ்வாறு அவர் சொன்னார். (ஓ-சி)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரி பிரசவ அறையில் ஆண் சிசுவின் மரணத்தால் பரபரப்பு

சாவகச்சேரி, ஜூலை 28

சாவகச்சேரி ஆஸ்பத்திரி பிரசவ அறையில் தாயிற்கு அருகில் படுத்திருந்த பிறந்த ஆண் குழந்தை மரணமான சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:-

மீசாலை மேற்கைச் சேர்ந்த காண்டீபன் ராஜினி (வயது 20) என்பவர் நேற்றுமுன்தினம் இரவு பிரசவத்துக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுக்காலை 6 மணிக்கு அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. அவர் அசதியில் பிரசவ அறையில் படுத்திருக்க, அவரது குழந்தையைத் தாதிகள் அவருக்கு அருகில் படுக்கவைத்து பால் கொடுக்குமாறு கூறிவிட்டுச் சென்றுவிட்டனர். முற்பகல் 10 மணியளவில் தாதி ஒருவர் அங்கு சென்று பார்த்தபோது, குழந்தை இறந்த நிலையில் காணப்பட்டது.

இந்தத் தகவல் பரவவே பரபரப்பு ஏற்பட்டது.

இந்த மரணம் தொடர்பாகக் கருத்துக் கூறிய வைத்தியர், குழந்தைக்கு தாய் அசதியில் பால் கொடுக்கும்போது குழந்தையின் மூக்குக்குள் முலை அடைத்து மரணம் சம்பவித்திருக்கலாம் அல்லது பால் புரக்கேறி மரணம் சம்பவித்திருக்கலாம் என்று கூறினார்.

சம்பவம் தொடர்பாகக் கிடைத்த தகவலை அடுத்து அங்கு வந்த சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை நடத்தினர்.

அதன்பின் இது தொடர்பாகப் பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் நியால் முன் அறிக்கை சமர்ப்பித்தனர்.

மரணவிசாரணை அதிகாரி மூலம் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ஓ-ஐ-207)

# மூத்தோரின் வங்கி வைப்புக்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு நிறுத்தம்

கொழும்பு,ஜூலை28

நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளில் நிலையான மற்றும் சேமிப்புக் கணக்குகளைப் பேணிவரும் 60 வயதைக் கடந்த மூத்த பிரஜைகளுக்கு இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட வட்டித் தொகையின் இருபது சதவிகித விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவு நடைமுறை கடந்த மாதம் 30 ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக வைப்புக்களுக்கான வங்கி வட்டி விகிதம் தொடர்ச்சியாகக் குறைவடைந்து வந்தமையைக் கருத்தில் எடுத்தும், வேறு வருவாய் மார்க்கமெதுவும் இன்றி தமது வங்கி வைப்புப் பணத்துக்கான வட்டித் தொகையையே தமது வாழ்க்கைச் செலவுக்கான ஆதாரமாகக் கொண்ட மூத்த பிரஜைகளுக்கு உதவும் விதத்திலும்-

இலங்கை மத்திய வங்கி, மூத்த பிரஜைகளின் வங்கி வைப்புக்கான வட்டித் தொகையின் 20 விகிதத்தை விசேட ஊக்குவிப்புச் சலுகையாக வழங்கும் திட்டமொன்றை இவ்வாண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் அறிமுகப்படுத்தியிருந்தது.

தற்போது இலங்கை மத்திய வங்கி மேற்குறித்த விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவை கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதியுடன் நிறுத்தி விடுவதென மேற்கொண்ட தீர்மானம் காரணமாக, இம்மாதம் முதலாம் திகதிமுதல் அத்தகைய வங்கிக் கணக்குகளைப் பேணி வரும் மூத்த பிரஜைகளுக்கான விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவுச் சலுகையை நிறுத்திக்கொள்ளுமாறு அங்கீகரிக்கப்பட்ட சகல வங்கிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளது மத்திய வங்கி. (ஓ-22)

## இலங்கையர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விண்ணப்பங்கள் ஆஸியில் குடியுரிமையைப்பெற்றுக்கொள்ளத் தகுதியானவையா என்பது குறித்து பரிசீலனை செய்யப்படுகின்றன என்றும் அவர் சொன்னார்.

தமிழர்களே ஆஸியில் அதிகமாக புகலிடம் கோரியுள்ளனர் என்றும் அவர் கூறினார். (அ-சி)

## கனேடிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பலை மிகவும் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டு இருக்கின்றனர் என்று வெளிநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் இந்தக் கப்பல் குறித்த தகவல்களை வெளியிடக்கூடாது என்ற உத்தரவுக்கு இணங்க, இது தொடர்பில் தகவல் வழங்க முடியாதுள்ளது என்று அமெரிக்க கடற்றுறை அதிகாரிகள் சிலர் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், கடந்த வெள்ளிக்கிழமை குறித்த கப்பல் தாய்லாந்துக் கொடியுடன் பிரிட்டிஷ் கொலம்பியா துறைமுகம் நோக்கி வருகின்றமையை அமெரிக்க கடற்றுறை அதிகாரி எடம் ஸ்டன்டொன் உறுதிப்படுத்தியிருந்தார். (அ-சி)

## கொள்ளைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டு அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி கோரி மகஜர் ஒன்றையும் வர்த்தகர் சங்கத்தினர் வவுனியா பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் கையளித்தனர். (ஓ-சி)

## சரவணபவன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றது எனப்பலரும் முறையிட்டனர். குமுதினிப் படகு மட்டுமே சேவையில் ஈடுபடுவதாகவும் அடிக்கடி அது தடைப்படுவதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர். மற்றும் டீசல் இல்லாத காரணத்தினால் தற்போது அங்கு மின்சாரம் குறிக்கப்பட்ட நேரங்களிலேயே விநியோகிக்கப் படுவதாகவும் ஊர் மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் எடுத்துக்கூறினர்.

மக்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்ட உறுப்பினர்கள் தம்மால் இயலுமானவற்றைச் செய்து தருவதாக மக்களுக்கு உறுதியளித்தனர். (ஓ-319)

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர் அதிகாரி இலங்கை வருகின்றார்.

அரசு ஒருபோதும் தேசிய பாதுகாப்பை விட்டுக்கொடுக்கப் போவதில்லை. இது விடயத்தில் ஜனாதிபதி உறுதியாக இருக்கின்றார். - என்றார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் அமைச்சர் பதில் அளித்தார்.

புலிகளின் முக்கிய தலைவர்களின் மனைவியர் உட்பட சுமார் 8,000 விதவைகள் வடக்கு, கிழக்கில் வாழ்கின்றனர் என்றும் இவர்கள் தம்மிடம் உதவி கோரியதாகவும் அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். இருந்தும் அவரினால் பெயர் குறிப்பிடப்பட்ட புலிகளின் தலைவர்கள் இருவரும் தடுப்புக் காவலில் இருக்கின்றனர் என்று முன்னர் அரசு தெரிவித்திருந்தது. அவர்களது நிலை என்ன? - என செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு அமைச்சர் பதிலளிக்கையில், இது குறித்து தமக்கு எதுவும் தெரியாது என்றார். இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டு அடுத்த வாரம் பதில் அளிப்பதாகவும் அவர் கூறினார். (ஓ-சி)

## ஈழ அகதிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன் மூலம் இவ்வாறான உயிர்ப் பணய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில், கனடாவில் உள்ள தமிழ்ச் சமூகத்தின் சட்டத்தரணியாகவுள்ள கெரி ஆனந்தசங்கரி என்பவரின் தகவல் படி கப்பலில் உள்ள எவரும் இதுவரை உதவி கோரவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

கனடாவின் கடற்பிராந்தியத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்னர் இந்தக் கப்பல் அனுமதி கோரினால் கனடா அதற்கு என்ன பதிலை வழங்கப் போகிறது என்பது கேள்விக்குறியாகவுள்ளது எனவும் கெரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். பிரிட்டிஷ் கொலம்பியாவை நோக்கி செல்லும் இந்தக் கப்பலை அமெரிக்க மற்றும் கனேடிய கரையோரப் பொலிஸார் அவ தானித்துள்ளனர்.

எம்.வி.சன்.சீ. கப்பல் முதன்முறையாக கடந்த ஏப்ரல் மாதம் தாய்லாந்து குடாவில் அவதானிக்கப்பட்டது.

இதன் பின்னர், ஆஸ்திரேலியாவை நோக்கிப் பயணித்த அந்தக் கப்பல் அவுஸ்திரேலிய அரசின் குடிவரவு கொள்கையை அடுத்து தமது பயணத்தை கனடாவை நோக்கி ஆரம்பித்துள்ளது எனத் தெரிய வருகிறது. (ஓ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எஸ்.சிறிதரன் ஆகியோர் நேற்று நெடுந்தீவுக்கு விஜயம் மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபருடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடுவதை முதலாவது படத்திலும், நெடுந்தீவு தேவாலயத்தில் பங்குத்தந்தையுடன் கலந்துரையாடுவதை மற்றைய படத்திலும் காணலாம்.
*(படங்கள் :- டிலீப்)*

# இடம்பெயர்ந்த 35 ஆயிரம் பேரே இன்று முகாம்களில் உள்ளனராம்

கொழும்பு, ஜூலை 28

யுத்தத்தால் இடம்பெயர்ந்தவர்களில் 35ஆயிரத்து 333 பேர் மாத்திரம் இன்னும் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சுதந்திரமாக வெளியே சென்று தமது வேலைகளைச் செய்ய இடமளிக்கப்பட்டுள்ளது என பாதுகாப்பு விவகாரப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்றுத் தெரிவித்தார்.

பாதுகாப்புத் தொடர்பான ஊடக நிலையத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து தகவல் தருகையில் கூறியவை வருமாறு:-

யுத்தத்தால் இடம்பெயர்ந்தவர்கள் 2 லட்சத்து 67 ஆயிரத்து 393பேர் முகாம்களில் இருந்தனர். இவர்களில் 85 சதவீதமானோர் தற்போது மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வன்னி உட்பட வடக்கில் சுமார் 15 லட்சம் கண்ணிவெடிகள் இருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை 2 லட்சத்து 75ஆயிரம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. கண்ணிவெடிகளை அகற்ற நீண்டகாலம் எடுக்கின்றது. கண்ணிவெடிகளை அகற்ற இந்தியா உட்படப் பல நாடுகள் உதவ முன்வந்தன. இருந்தும் இந்த உதவிகள் இலங்கை வந்தடையத் தாமதமாகலாம் என்ற காரணத்தால் அரசு 860 மில்லியன் ரூபா செலவில் உபகரணங்களை இறக்குமதி செய்தது.

மீள்குடியமர்த்தல் தொடர்பாக ஜே.வி.பி. பொய்க் குற்றச்சாட்டுகளைத் தெரிவிக்கின்றது. இது உகந்த செயல் அல்ல. அரசு மேற்கொண்டுவரும் பணிகளைப் பாராட்ட முடியாது போனாலும் பரவாயில்லை. அதை மறைக்க முயற்சிக்கக்கூடாது.

- இவ்வாறு அவர் சொன்னார். (ஒ-சி)

### ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில்

# தர்சிகாவின் புதை குழி இன்று தோண்டப்பட்டு பொலிஸ் காவலுடன் சடலம் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 28

வேலணை அரசினர் வைத்தியசாலை குடும்பநல மருத்துவமாது தர்சிகாவின் சடலம் இன்று காலை 8 மணிக்கு ஊர் காவற்றுறை நீதிவான் இ.வசந்தசேனன் முன்னிலையில் தோண்டி எடுக்கப்பட்டு பொலிஸ் பாதுகாப்புடன் கொழும்புக்குக் கொண்டு செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை நீதிவான் இ.வசந்தசேனன் முன்னிலையில் இந்த விவகாரம் நேற்று எடுக்கப்பட்டபோது சடலத்தை எடுத்துச் செல்வதற்கான உத்தரவுகளை நீதிவான் விடுத்தார்.

அவரின் உத்தரவின் பிரகாரம் -

கைதடி தெற்கு, ஊற்றல் மயானத்தில் புதைக்கப்பட்டுள்ள தர்சிகாவின் சடலம் இன்று காலை 8 மணிக்கு ஊர்காவற்றுறை, சாவகச்சேரி பொலிஸார், கிராம சேவையாளர், உறவினர்கள் ஆகியோரின் முன்னிலையில் தோண்டியே எடுக்கப்படும்.

அதன் பின்னர் இரு பொலிஸாரின் காவலுடன் உறவினர்கள் சடலத்தை கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குக் கொண்டு செல்வர்.

அங்கு பிரேத பரிசோதனைகள் முடிவடைந்த பின்னர் மீளவும் உறவினர்கள் சடலத்தை கைதடிக்கு எடுத்துவருவர்.

கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி முன்பாக அல்லாமல் கண்டி வைத்தியசாலைக்கு சடலத்தை எடுத்துச்சென்று அங்கு பிரேத பரிசோதனை செய்ய உறவினர்கள் விரும்புவதாகவும் -

அது தொடர்பான மனுவை இன்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவிருப்பதாகவும் -

பாதிக்கப்பட்டோர் சார்பில் ஆஜராகும் மனித உரிமைகள் இல்லத்தைச் சேர்ந்த சட்டத்தரணி குகனேஸ்வரன் தெரிவித்தார்.

தர்சிகாவின் பிரேத பரிசோதனையின் போது தமது இல்லத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் பிரசன்னமாக இருப்பார்கள் என்றும் அவர் கூறினார். (ஒ-ஐ)

# சம்பள உயர்வுக்குத் தீர்வு வழங்காவிடின் பதவிகளை இராஜினாமாச் செய்ய முடிவு

கொழும்பு, ஜூலை 28

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான சம்பள உயர்வுக்கு தீர்வு வழங்கப்படாவிடின் ஓகஸ்ட் 10 ஆம் திகதி முதல் அவர்கள் வகிக்கும் நிர்வாகப் பதவிகளிலிருந்து சுயமாக இராஜினாமா செய்யத் தீர்மானித்துள்ளனர் - என்று பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் நேற்று நடத்தப்பட்ட பணிப் பகிஷ்கரிப்புத் தொடர்பான தகவல்களை வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (சி)

## கடல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களையும் மாலைதீவு கோரியுள்ளது எனக் கடற்றொழில் மற்றும் மீன்பிடி வள அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

சர்வதேச கடல் எல்லை மீள் நிர்ணயம் தொடர்பில் 2020 ஆம் ஆண்டுக்கு முன்னர் தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ராஜித தெரிவித்துள்ளார். (ஒ-சி)

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது. தமிழ் இனப் படுகொலையில் ஈடுபட்ட அனைவரையும் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டனை வழங்கப்படும் நாள் தொலைவில் இல்லை.

தமிழர்கள் உணர்வுகளைச் துச்சமென நினைத்து இலங்கை சென்ற நடிகை அசின் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என உலகத் தமிழ் அமைப்பு, நடிகர் சங்கத்தை வலியுறுத்துகிறது.

அசின் நடித்த அனைத்துத் திரைப் படங்களையும் புறக்கணிக்க உலகத் தமிழர்கள் முடிவெடுத்துள்ளனர். அந்த முடிவை அமெரிக்கா, கனடா ஆகிய நாட்டில் நிறைவேற்றுவோம்.

தமிழ் உணர்வுடன் செயற்பட்டு வரும் ராதாரவி, சத்தியராஜ் ஆகியோரையும் தமிழர்களின் உரிமைகளுக்கு ஆதரவு நல்கும் நடிகர் சங்கத்தின் மற்ற உறுப்பினர்களையும் பாராட்டுகிறோம். தமிழர்களுக்காக உழைக்கும் திரைத்துறையினர் யார்? எதிராக உள்ளவர்கள் யார் என்பதை ஆராய்வதுடன் யாருடைய படங்களைப் புறக்கணிப்பது என்பது பற்றி ஆலோசித்து வருகிறோம்.

தமிழ்நாட்டிலிருந்து வரும் திரைப்படங்களின் கணிசமான வருவாய் எங்களைப் போன்ற புலம்பெயர்ந்த தமிழர்களின் ஆதரவால் ஈட்டப்படுகிறது. தமிழரின் உரிமைக் குரலுக்கு எதிராகச் செயற்படுவோரின் படங்களைப் புறக்கணித்துப் போராடுவோம்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)


**வாகனம் விற்பனைக்கு**

52 - XXXX இலக்க இரட்டைக் கப் டபிள் கப் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :-
பிரகாஷ் எலக்ரோனிக்ஸ்,
பருத்தித்துறை.
T.P. : 0773222837

**புதிய பிரிவுகள் ஆரம்பம் 90% Scholorship**

Diploma Courses...
*MS Office *Accounting *Graphics 3D *Printing & Typing, *Hardware *English
*Web Designing * Video Editing *AutoCAD *VB.net, LINUX, ICT, GIT, Kids Programs

International Courses...
Computer Engineering-USA,CIMA-UK, IELTS / Toefl, Cisco-CCNA,CCNP,ICDL-CAD, BCS,
Sun Java programmer-SCJP, Red Hat Engineer
Degree Course-BIT-University of Colombo

Free Hardware,Diploma in English, DTP,ICDL,Typing, Internet & Email
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு
Closing Date 01.08.2010
MCS 324,Palaly Road,Parameswara Junction
Web site : www.mcsitcampus.org
Call 772395895

**கணனிக்கற்கை நெறிகள்**
புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு 01: 30.07.2010
பிரிவு 02: 31.07.2010

Certificate மற்றும் Diploma க்குரிய கணனிக்கற்கை நெறிகள் எதிர் வரும் 30.07.2010,31.07.2010 திகதிகளில் காலை 10.00 மணிக்கு ஆரம்பிக்க உள்ளதால் பயிலவிரும்பும் மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பிரிவின்கீழ் உள்வாங்கப்படும் மாணவர்களுக்கு கட்டணத்தில் சலுகைகள் வழங்கப்பட உள்ளன.

மேலதிக விபரங்களுக்கு:

Director
Institute of Informatics Studies(IIS)
#100, Clock Tower Road,Jaffna
T.P. 021 222 2831
E-Mail: iis@iis.edu.lk

அன்றாவில்
இப்போது டிஜிற்றல் பிறிண்ட்
1 சதுர அடி
30/=
ANDRA
DIGITAL PRINTING



20%
கழிவு விலையில்



வியாபார நிறுவனங்களின் பெயர் பலகைகளை
டிஜிற்றல் முறையில் செய்து பெற்றுக் கொள்ளுங்கள்
356A , லக்சன் பிளாசா,
கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்தி,
யாழ்ப்பாணம்.
H.Line: 0776622981, 0718561744
T.P: 021-2228929,021-5674444


**இறைச்சிக் கோழி விற்பனை**

நிறை கூடிய புறொயிலர், கல்பேட்ஸ் என்பன சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம்.
புறொயிலர் மொத்தமாக விற்பனை செய்யப்படும்.
தொடர்புகளுக்கு :- மல்ரி பாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கலட்டி.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறம் மாறும் கோழி



சூழ்நிலைக்கு ஏற்ப பச்சோந்தி நிறத்தை மாற்றிக் கொள்வது தெரியும். திருவனந்தபுரம் முக்கோலா அருகில் உள்ள விழிஞ்சம் என்ற இடத்தில் செல்வராஜ் என்ற விவசாயி வளர்க்கும் கோழியும் இதுபோல நிறம் மாறுகிறது. இதுபற்றி வியப்புடன் சொல்கிறார் செல்வராஜ். " கோழிக்கு 6 வயது ஆகிறது. முதலில் கறுப்பாக இருந்தது. முட்டையிடும் பருவத்தில் மெல்ல வெள்ளை நிறத்துக்கு மாறியது. ஆனால் அதன் இறகுகள் உதிரவில்லை. ஒரு வருடத்தில் மீண்டும் கறுப்பாகிவிட்டது. இதுவரை 4 முறை நிறம் மாறிவிட்டது.

இதுபற்றி 2008 ஆம் ஆண்டு கேரள பல்கலைக்கழக விலங்கியல் துறைக்குத் தெரியப்படுத்தினேன். அங்கிருந்து உயிரி தகவல் தொழில்நுட்பத் துறை வல்லுநர்களுடன் டாக்டர் ஓமன் தலைமையிலான குழுவினர் என் வீட்டுக்கு வந்தார்கள். கோழி நிறம் மாறிய நேரத்தில் இரத்தம், இறகு, அதன் பாலினத்தன்மை நிர்ணயிக்கும் ஈஸ்ட்ரோஜன் ஆகியவற்றை சேகரித்து ஆராய்ச்சி நடத்தினர். பனாரஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகளும் சேர்ந்து ஆராய்ச்சி செய்தனர்" என்றார்.

ஆய்வு பற்றி கூறியிருக்கும் விஞ்ஞானிகள் " நிறம் மாறும் நேரத்தில் கோழியின் ஈஸ்ட்ரோஜன் அளவு மற்ற நேரத்தை விட 6 மடங்கு அதிகரிக்கிறது.

ஈஸ்ட்ரோஜன் அளவு கூடும்போது நிறம் மாறுவது இயல்புதான். ஆனால் அடிக்கடி நிறம் மாறுவதுதான் வியப்பளிக்கிறது. மரபணு தொடர்பான ஆராய்ச்சியில் இப்புதிருக்கு விடை கிடைக்கும்" என்றனர். ★★★










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியஸ்தசபை உறுப்பினர்கள் சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு செயற்பட வேண்டும்

## கல்முனை மாவட்ட நீதிவான் கூறினார்

அம்பாறை,ஜூலை28

''உண்மையும், பொறுமையும் கொண்டவர்களாக மத்தியஸ்த சபை உறுப்பினர்கள் திகழவேண்டும். அத்துடன், சட்டத்தின் வரையறைக்குட்பட்டும் அவர்கள் செயல்படவேண்டும்.'' - இவ்வாறு கல்முனை மாவட்ட நீதிவான் என்.எம்.எம்.அப்துல்லா, நிந்தவூர் மத்தியஸ்த சபையின் மத்தியஸ்த தினவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

நிந்தவூர் பிரதேச செயலகக் கூட்ட மண்டபத்தில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளரும், நிந்தவூர் மத்தியஸ்த சபை குழாம் தவிசாளருமான ஏ.ஜமால்தீன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.ஐ.எம்.றிஸ்வி, நிந்தவூர் பிரதேச செயலாளர்ஐ.எம்.ஹனிபா ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

மாவட்ட நீதிவான் அப்துல்லா தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

''எல்லா முரண்பாடுகளும் பிணக்குகள் தான் என்பதையும், பிணக்குகள் எல்லாம் முரண்பாடுகள் அல்ல என்பதையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

மத்தியஸ்த குழாம் உறுப்பினர்கள் பிணக்குகள் பற்றி அறிந்திருக்கவேண்டும். அப்படியானால், அவற்றைச் சுமுகமாகத் தீர்த்து வைக்க முடியும். காலதாமதத்தையும், செலவீனத்தையும் குறைத்து நிறுவனங்களுக்கிடையிலான பிணக்குகளை விரைவாகத் தீர்த்து வைப்பதற்காகவே நவீன மத்தியஸ்த சபை உருவாக்கப்பட்டுள்ளது.

இன்று அது விட்டுக்கொடுக்கும் மன்னிக்கும் மனப்பாங்குடனான ஒரு சமுதாயத்தை உருவாக்கும் பெரும் பொறுப்புடன் வெற்றிகரமாக நகர்ந்துகொண்டிருக்கின்றது.

இந்த வகையில் மத்தியஸ்த சபை உறுப்பினர்களின் பொறுப்பும், கடமையும் முக்கியத்துவம் பெறுகின்றன. அத்துடன், சட்டத்தின் வரையறைக்குள் நின்று அவர்கள் செயற்படவேண்டுமென்பதும் வலியுறுத்தப்படுகின்றது. மத்தியஸ்தம் என்பது தீர்ப்புமல்ல, செயற்பாடுமல்ல. அது மூன்றாம் தரப்பால் சமாதானமாகத் தீர்வு காணல் என்பதே ஆகும்.

அதேவேளை,பெயருக்கும், புகழுக்குமாக தீர்வு கொடுக்க முடியாது. இதையும் நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். அதேபோல் மத்தியஸ்த சபைத் தீர்வு மேன்முறையீடு இல்லா ஓர் தீர்வாகும். எனவேதான், மத்தியஸ்த சபைகளில் பக்கச்சார்பின்றி தீர்வு வழங்கப்படவேண்டிய கடப்பாடு வலுப்பெறுகின்றது.

குறிப்பாக கல்முனை நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் இயங்கும் நான்கு மத்தியஸ்த சபைகளுக்குள்ளும், நீதிவான் நீதிமன்றத்திலிருந்து ஆற்றுப்படுத்தப்படும் பிணக்குகள் தொடர்பில் 98 வீதமான பிணக்குகளுக்குத் தீர்வு கண்டு நிந்தவூர் மத்தியஸ்த சபை முதன்மை நிலையில் திகழ்கின்றது. இச்சபையின் சிறந்த நிருவாகம், செயற்பாட்டுக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். சிறந்த பண்பாடுடைய நல்ல சமுதாயத்தை உருவாக்கும் திட்டத்துடனான மத்தியஸ்த சபைகளின் நோக்கிற்கு நீங்கள் அர்ப்பணிப்புடன் அளித்துவரும் பங்களிப்பு பெரும் பாராட்டு தலுக் குரியதாகும்.''

- இவ்வாறு அவர் கூறினார். (ளி)

# கிழக்கு மாகாணத்தில் பாலர் கல்விப் பணியகம்

கிழக்கு மாகாணத்தில் பாலர் பாடசாலைக் கல்விப்பணியகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் நடைபெற்ற மாகாணசபை அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஏழுஉறுப்பினர்களைக் கொண்ட பாலர் பாடசாலைக் கல்விப் பணியக முகாமைத்துவ வாரியம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இம்முகாமைத்துவ வாரியத்தின் தவிசாளர் பாலர் பாடசாலைகளுக்கான தகுதிவாய்ந்த அதிகாரியாக செயற்படுவார். அதேவேளை, திருகோணமலை, மட் டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 3 பிரதிநிதிகள் செயலாற் றுப் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதன் தலைமையகம் திருகோணமலை நகரிலும், மாவட்டக் காரியாலயங்கள் மட்டக்களப்பு, அம்பாறை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் காரியாலயங்களிலும் செயற்படும். (ளி)

# நாவிதன்வெளிப் பிரதேச அபிவிருத்திக்கு அனைவரும் பங்களிப்புச் செய்யவேண்டும்

## பிரதேச தவிசாளர் தெரிவிப்பு

நாவிதன்வெளி,ஜூலை 28

''கடந்தகால சூழ்நிலையால் நாவிதன் வெளிப் பிரதேச அபிவிருத்திப் பணிகள் தேக்க மடைந்தன. கல்வித்துறை வீழ்ச்சி கண்டது. எனவே இப்பிரதேசக் கல்வி வளர்ச்சிக்கு அனை வரும் பங்களிப்புச் செய்ய முன்வரவேண்டும்.''

- இவ்வாறு நாவிதன்வெளி பிரதேசத் தவிசாளர் ரீ. கலையரசன் 15ஆம் கிராம விளாவடிப்பிள்ளையார் சமூக மேம்பாட்டு அமைப்பின் மாலை நேரப் பாடசாலையின் ஆரம்ப விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

விளாவடியில் புதிதாக அமைக்கப் பட்ட பாடசாலைக் கட்டடத்தில் மேற்படி அமைப்பின் தலைவர் எஸ்.தயாநிதி தலைமையில் இத்திறப்புவிழா நடைபெற் றது. ஆசிரியர் ஆ.சர்வேஸ்வரன், ஒப்பந் தக்காரர் ரீ.கருணாகரன், விளாவடிப்பிள்ளை யார் ஆலயசெயலாளர் கே.பாபு, ஒப்பந்தக் காரர் கே.சபாநாதன் ஆகியோர் இதில் உரையாற்றினர்.

பிரதேச சபைத் தவிசாளர் கலையரசன் தொடர்ந்து பேசுகையில், ''கல்லோயா குடியேற்றக் கிராமங்களில் பல கிராமங்கள் கல்வி, பொருளாதாரம், அபிவிருத்தி ஆகியவற்றில் பின்தங்கியுள்ளன. இப்போது ஓரளவு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது மகிழ்ச்சி அளிக்கி றது'' - என்றார்.

''சமூகத்தின் இரு கண்களாகத் திகழ் வது கல்வி. இதன் வளர்ச்சிக்கு இப்பிரதேச ஆசிரியர்கள் மாலை நேரப் பாடசாலை யொன்றை நிறுவி, கல்வி புகட்ட முன்வந் துள்ளமை பாராட்டத்தக்கது. எமது பிரதேச மாணவர்களின் கல்விக்காக நான் அனைத்து உதவிகளையும்புரிவேன்'' என்றும் அவர் தெரிவித்துக் கொண்டார். (ளி)




# 8 ஆயிரம் குடும்பங்களுக்கு நீர்வடிகட்டிகள் விநியோகம்

திருகோணமலை,ஜூலை28

அமெரிக்கா செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவியுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்க திருகோணமலை மாவட்டக் கிளையால் மூதூர், ஈச்சிலம்பற்று ஆகிய பிரதேசங்களில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ள சுமார் எட்டாயிரம் குடும்பங்களுக்கு நீர் வடிகட்டிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. கடந்த இரு மாத காலத்துக்குள் இவை விநியோகம் செய்யப்பட்டுள்ளன என மேற்படி கிளை நிறைவேற்று அதிகாரி ரி.சுபாஷ்கர் தெரிவித்துள்ளார்.

இதன் தொடர்ச்சியாக மொறவெவ, கோமரங்கடவல ஆகிய பிரதேசங்களில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கும் வடிகட்டிகள் விநியோகிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ளி)

## தமிழுக்கு சமஉரிமை

வத்துகாமம்,ஜூலை28

அரச தகவல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அண்மையில் கண்டி சுயீஸ் ஹோட்டலில் இடம்பெற்ற மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கில் தமிழ்மொழிக்கு சமஉரிமை வழங்கப்பட்டது எனப் பலரும் சிலாகித்துப் பேசுகின்றனர்.

கருத்தரங்கின்போது சமகால உரைபெயர்ப்பாளர்கள் மூவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர். இதன்காரணமாக வளவாளர்களால் நிகழ்த்தப்பட்ட விரைவுரைகள் ''ஹெட் போர்ன்'' மூலம் (தலை ஒலி வாங்கி) அடுத்த கணமே நேர்த்தியான தமிழில் வழங்கப்பட்டன.

கடந்தவருடம் இடம்பெற்ற கருத்தரங்கில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டதனால் பலரும் விசனம் அடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ளி)

# கண்டியில் போக்குவரத்து விதிகளை மீறிய 13,350 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கண்டி,ஜூலை28

கண்டி பொலிஸ் பிரிவில் 2010 ஆம் ஆண்டில் முதல் ஆறுமாதங்களில் போக்குவரத்து விதிகளை மீறிய சாரதிகள் - பாதசாரிகள் என 13,350 பேருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் கண்டி பொலிஸ் சிரேஷ்ட அத்தியட்சகர் ரஞ்சித் கஸ்தூரி ரத்ன தெரிவித்தார்.




மதுபோதையில் வாகனம் செலுத்திய 295 பேரும், அதிவேகமாக வாகனங்களைச் செலுத்திய 313 பேரும்-

சூழலுக்கு பாதிப்பு ஏற்படக் கூடிய வகையில் கரும்புகையுடன் வாகனம் செலுத்திய 181 பேரும், பாவனைக்குதவாத வாகனங்களைச் செலுத்திய 69 பேரும்-

முறையற்ற விதத்தில் வீதிகளைக் கடந்த 1,679 பேரும் இதில் உள்ளடங்கியுள்ளனர் என கஸ்தூரி ராஜா மேலும் தெரிவித்தார். (ளி)

# பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்று ஆவணக்குழு நியமனம்

கண்டி,ஜூலை28

பேராதனை பல்கலைக்கழக வரலாற்றை ஆவணப்படுத்தும் முகமாக குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக பீடங்கள், விளையாட்டு, கலை, கலாசாரம், திணைக்களங்கள், நிலையங்கள் ரீதியாக இந்தக் குழு ஆவணப்படுத்தலை மேற்கொள்ளும்.

இறுதியில் பல்கலைக்கழக பொருட்காட்சி நிலையத்தில் ஆவணங்கள் கண்காட்சிப்படுத்தப்படவுள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வரலாறு இதுவரை ஆவணப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

# தலதா வீதியைத் திறக்கக் கூடாது என்கிறார் மாகாணசபை உறுப்பினர்

கண்டி,ஜூலை28

முஸ்லிம்களுக்கு மக்கா போன்று உலக பௌத்தர்களுக்கு தலதாமாளிகை முக்கியத்தலமாகும். இந்தப் புனித பூமியில் அமைந்துள்ள வீதியைத் திறப்பது பௌத்தத் தையும், தலதா மாளிகையையும் அவமதிப்பதாக அமையும்.

-இவ்வாறு தெரிவித்தார் மாகாணசபை ஐ.ம.சு மு. உறுப்பினர் ரிஸ்வி பாரூக்.

மத்திய மாகாணசபை மாதாந்தக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபைக் கூட்டம் பள்ளேகல மாகாண சபை மண்டபத்தில் சபைத் தலைவர் சாலிய திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

அங்கு அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

1998 ஆம் ஆண்டு புலிகள் நடத்திய தாக்குதலின் பின் தலதா வீதி மூடப்பட்டது. 1800 ஆம் ஆண்டுகளில் இந்த வீதி இருக்கவில்லை. 1815 இல் பிரித்தானியர்கள் பௌத்தத்தை அவமதித்து - தலதா மாளிகையை மதிக்காது இந்த வீதியை ஏற்படுத்தினர்.

ஒழுக்கம் பேணப்பட வேண்டிய இந்தப் பூமியில் முன்னர் பஸ்களில் பாட்டுப் பாடிச் சென்றதைக் கண்டோம். தற்போது இந்த வீதியைத் திறப்பதற்கு பலரும் முயற்சிக்கின்றனர்.

பௌத்தத்தின் புனிதத்தையும் தலதா மாளிகையின் புனிதத்தையும் பாதுகாக்க வேண்டுமானால் இந்த வீதி திறக்கப்படக் கூடாது.

அதேவேளை, அக்குறணை குருகொட தங்களகம வீதியைச் செப்பனிட்டுத் தரவேண்டுமென இச்சபையில் கோரிக்கை விடுகிறேன்.

அக்குறணை கெளுங்குகாவத்த குளங்கொடவில் தமிழ் பேசுபவர்களே உள்ளனர். இவர்களுக்கு சிங்களம் தெரியாது. ஆனால் டெங்குஒழிப்பு துண்டுப்பிரசுரங்கள் சிங்களத்திலேயே விநியோகிக்கப்பட்டுள்ளன. இது குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் - இப்படி ரிஸ்வி தெரிவித்தார். (ளி)

# கழுத்துப் பட்டி இறுகி மரணமான மாணவியின் சிற்றன்னையும் தூக்கு மாட்டித் தற்கொலை!

கொழும்பு, ஜூலை 28

ஊவா பரணகம பிரதேசத்தில் பாடசாலைச் சீருடைப் பட்டியால் கழுத்து இறுக்கப்பட்ட நிலையில் மாணவி ஒருவர் கடந்தவாரம் உயிரிழந்தார்.

இந்த மாணவியின் மரணம் கொலையாக இருக்கலாம் என்ற சந்தேகம் நிலவுகின்றது. சந்திமா உதயங்கனி என்ற 17 வயது மாணவியே உயிரிழந்திருந்தார்.

இந்தநிலையில் அவரது சிற்றன்னையான இந்திராணி சமரவிக்கிரம (வயது 40) என்பவரும் அதே வீட்டில் குளியலறையில் தூக்குமாட்டித் தற்கொலை செய்து கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

''கடந்த வியாழக்கிழமை இரவு எனது மனைவி குளியலறைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டார் . அடுத்தநாள் 24 ஆம்திகதி காலை ஐந்துமணிவரை கதவு திறக்கப்படவில்லை. இதையடுத்து கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது அவர் கூரைச் சட்டத்தில் சடலமாகத் தொங்கிக்கொண்டிருந்தார்'' என மரணமானவரின் கணவரான கே.ஜீ. விக்கிரமசிங்க ஊவா பரணகம பொலிஸ் நிலையத்தில் செய்திருந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கழுத்துப்பட்டி இறுகியதால் மரணித்த பெறா மகளின் இழப்பையடுத்து அவரது சிற்றன்னையான இந்திராணி மனமுடைந்து காணப்பட்டார். சோகம் தாளாத நிலையிலேயே அவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என உறவினர்கள் தெரிவித்தனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org